

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜூன் 2026,
விலை ரூ.20/-

SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:5, Issue:11, Pages:56
June-2026, Price Rs.20/-

அப்பளாயகுண்டா
ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
25-06-2026 முதல் 03-07-2026 வரை

கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவம்



05-06-2026 முதல் 14-06-2026 வரை

தேதி	கிழமை	பகல் உத்ஸவம்	இரவு உத்ஸவம்
05-06-2026	வெள்ளி		சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம்
06-06-2026	சனி	துவஜாரோஹணம்	பெரிய சேஷ வாகனம்
07-06-2026	ஞாயிறு	சிறிய சேஷ வாகனம்	ஹம்ஸ வாகனம்
08-06-2026	திங்கள்	சிம்ம வாகனம்	முத்துப்பந்தல் வாகனம்
09-06-2026	செவ்வாய்	கல்ப விருக்ஷ வாகனம்	சர்வ பூபால வாகனம்
10-06-2026	புதன்	மோகினி அவதாரம்	கருட சேவை
11-06-2026	வியாழன்	ஹனுமத் வாகனம் மா:வஸந்தோத்ஸவம்	யானை வாகனம்
12-06-2026	வெள்ளி	சூர்யப்பிரபை வாகனம்	சந்திரப்பிரபை வாகனம்
13-06-2026	சனி	திருத்தேர்	குதிரை வாகனம்
14-06-2026	ஞாயிறு	சக்கரஸ்நானம்	துவஜாவரோஹணம்

அப்பளாயகுண்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்



24-06-2026 முதல் 03-07-2026 வரை

தேதி	கிழமை	பகல் உத்ஸவம்	இரவு உத்ஸவம்
24-06-2026	புதன்		சேனாதிபதி உத்ஸவம் அங்குரார்ப்பணம்
25-06-2026	வியாழன்	துவஜாரோஹணம்	பெரிய சேஷ வாகனம்
26-06-2026	வெள்ளி	சிறிய சேஷ வாகனம்	ஹம்ஸ வாகனம்
27-06-2026	சனி	சிம்ம வாகனம்	முத்துப்பந்தல் வாகனம்
28-06-2026	ஞாயிறு	கல்ப விருக்ஷ வாகனம்	சர்வ பூபால வாகனம்
29-06-2026	திங்கள்	மோகினி அவதாரம்	கருட சேவை
30-06-2026	செவ்வாய்	ஹனுமத் வாகனம் மா:வஸந்தோத்ஸவம்	யானை வாகனம்
01-07-2026	புதன்	சூரியப்பிரபை வாகனம்	சந்திரப்பிரபை வாகனம்
02-07-2026	வியாழன்	திருத்தேர்	குதிரை வாகனம்
03-07-2026	வெள்ளி	சக்கர ஸ்நானம்	துவஜாவரோஹணம்



ஹதோ வா ப்ராப்ஸ்யஸி ஸ்வர்க₃ம்
ஜித்வா வா பே₄க்ஷ்யஸே மஹீம்।
தஸ்மாதுத்திஷ்ட₂ கௌந்தேய
யுத்₃த₄ாய க்ருதநிச்சய:।।

கொல்லப்பட்டாலோ சுவர்க்கத்தை அடைவாய்;
வெற்றி பெற்றாலோ புவியை அனுபவிப்பாய்.
ஆகையினால், அர்ஜுனா! நீ யுத்தத்தின்
பொருட்டு உறுதியாக நிச்சயித்துக் கொண்டு
எழுந்திரு.

– ஸ்ரீமத் பகவத் கீதை 2-37

காளம் வலம்புரி யன்னநற் காத லடியவர்க்குத்
தாளம் வழங்கித் தமிழ்மறை யின்னிசை தந்தவள்ளன்
மூளுந் தவநெறி மூட்டிய நாத முனிகழலே
நாளுந் தொழுதெழு வோநமக் கார்நிகர் நானிலத்தே.

ஸ்ரீமந்நாதமுனிகள் தம்மிடம் அளவற்ற
பக்தியையுடைய கீழையகத்தாழ்வான்
மேலையகத்தாழ்வான் என்னும் இரண்டு
மருகருக்குத் தாளவித்தையாகிய
கந்தர்வவேதத்தையும், அதில் அமைத்துப்
பாடுவதற்குத் திவ்யப்ரபந்தத்தையும்
உபதேசித்தருளி, இவ்வுலகிற்குக் காட்டிக்
கொடுத்தருளினார். இத்தகைய பெருமை
வாய்ந்த அவர் திருவடிகளையே தினந்தோறும்
வணங்கி உஜ்ஜீவிப்போம். இந்தப் பாக்கியம்
பெற்ற நமக்கு நிகர் இவ்வுலகில் யாவர் உளர்?

– சுவாமி வேதாந்த தேசிகர்



திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்

ப்ருகு மகரிஷியின் "க்ரியாதிகாரம்" என்னும் நூலில் அங்கம்–உபாங்கம்–மஹாங்கம்–ப்ரத்யங்கம் முதலியவை பகவானின் மூர்த்தியைப் பாதுகாக்கவும், நித்ய பூஜை மற்றும் அபிஷேகத்தால் ஏற்படும் மாற்றத்தை சரிபடுத்துவதற்கான விதியையும் கூறுகின்றது. அவ்விதிமுறையே ஜ்யேஷ்டாபிஷேக உத்ஸவமாகும். சுகந்த தைல சமர்ப்பணோத்ஸவம் (சுகந்த தைலங்களால் செய்யக் கூடிய அபிஷேகம்) என்பர். இவ்வுத்ஸவத்தின் முக்கிய பகுதி இறை மூர்த்திக்கு கவசம் சார்த்தும் நிகழ்ச்சியாகும்.

இவ்வுத்ஸவம் இதற்காகவே நிறுவப்பட்ட சிறப்பு பௌண்டரீக ஹோம குண்டத்தில் அக்னியை மூட்டி கூர்ம (ஆமை) பீடத்தில் அமர்ந்திருக்கும் அர்ச்சகரால் மஹா சாந்தி ஹோமம், பூர்ணாஹுதியோடு, அஷ்டஹோம க்ரியையும் செய்து, கவச விதியோடு சம்பந்தப்பட்ட அனைத்து பூஜைகளும் நடத்தப்படும். ஸ்வாமிக்கு நித்ய பூஜைகள், நிவேதனம் செய்ய வேண்டும், க்ஷமா மந்திரங்களோடு கூடிய வழிபாடுகளும் செய்து பிரம்ம கோஷத்தோடு சாந்தி வாக்கியங்கள் ஒலிக்க பூஜைகள் பூர்த்தியாகும். ஜ்யேஷ்டாபிஷேக உத்ஸவத்தின்போது வைகானச ஆகம விதிப்படி மூன்று நாட்கள் வைரம், முத்து மற்றும் தங்க கவசங்கள் திருமலையப்ப ஸ்வாமிக்கு அணிவிப்பர்.

ஸ்வாமிக்கு வைகானச ஆகம விதிமுறைபடி அபிஷேகம், வஸந்தோத்ஸவம், பிரம்மோத்ஸவம், பவித்ரோத்ஸவம் என ஏறக்குறைய 470 உத்ஸவங்கள், 365 நாட்களும் கோலாகலமாக நடைபெற்று வருகிறது. இவ்விதமான உத்ஸவங்களில் பல்வேறு விதமான அபிஷேகங்கள் நடைபெறுவதால் இறை மூர்த்தியில் மாற்றங்கள் ஏற்படும். இதற்கு தீர்வாகவே, 9ஆம் நூற்றாண்டிலிருந்து ஜ்யேஷ்டாபிஷேக உத்ஸவம் ஆகம விதிப்படி கடைபிடித்து நடத்தப்படுகின்றது. ப்ருகு மகரிஷியின் "ப்ரகீர்ணாதிகார" என்னும் நூலின்படி, மூன்று நாள் தைலாபிஷேக உத்ஸவமான இந்த ஜ்யேஷ்டாபிஷேகம், ஜ்யேஷ்ட மாதத்தில் ஜ்யேஷ்ட சுக்ல திரயோதசியில் துவங்கி ஜ்யேஷ்ட சுக்ல சதுர்த்தசி ஜ்யேஷ்ட நக்ஷத்திர பௌர்ணமியன்று நிறைவு பெறுகிறது.

ஜ்யேஷ்டாபிஷேகத்தின் முதல் நாள், நண்பகல் பூஜைக்குப் பிறகு உபயதேவிமார்கள் உடனுறை திருமலையப்ப ஸ்வாமி விமான பிராகாரத்தில் உலா வந்து பின், சம்பங்கி பிராகாரத்தில் 108 குடங்களினால் "அஷ்டோத்ர சத கலச ஸ்நபன திருமஞ்சனம்" ஜ்யேஷ்ட சுக்ல திரயோதசியில் துவங்கி ஜ்யேஷ்ட சுக்ல சதுர்த்தசி வரை நடைபெறும். பின்னர், எம்பெருமானும் திருமலையில் உள்ள கல்யாண மண்டபத்தில் எழுந்தருளுவர். அங்கு அக்னி குண்டத்தில் வேத பாரம்பரியத்தின்படி தேவதா பிரார்த்தனை, விஷ்வக்சேன ஆராதனை, ஸ்வஸ்தி புண்யாஹவசனம், அங்குரார்ப்பணம், ரக்ஷா பந்தனம் மற்றும் அக்னி ப்ரணயனம் முதலிய அனுஷ்டானங்கள் செய்வர்.



ஸ்நபனத்தின் பாகமாக ஹோமங்கள் முடிந்தபின், "தங்கக் கவசம்" பஞ்ச கவ்யம் மற்றும் வாஸ்து சுத்தி முறையால் சுத்திகரிக்கப்பட்டு உத்ஸவ விக்ரகமான திருமலையப்ப ஸ்வாமி மற்றும் தேவியர்களுக்கு, மந்திரங்கள் ஒலிக்க கவசம் அணிவிக்கப்படும்.

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்



ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜூன் 2026

மலர் 05 இதழ் 11

உள்ளுறை

	பக்கம்
திருமலையப்பனை நினைத்தாலே புத்துணர்வே! -பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி.	7
இன்னிசை தந்த வள்ளல் -திருமதி நளினி சம்பத், சென்னை.	12
யமுனை ஆற்றிலே... -திருமதி ராஜலக்ஷ்மி, கேரளா.	14
ஸ்ரீவைகுண்ட கத்யமும் ஆழ்வார்களின் பாசுரங்களும் - திரு. ஏ.கே.கோபி, கள்ளக்குறிச்சி.	16
ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி. கோவிந்தசாமி, புத்தூர்.	20
108 திவ்வியதேச வைபவம் : திருநைமிசாரண்யம் (நிம்ஸார்) - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.	22
யோகமும் தியானமும் அவசியமா! - திருமதி சரோஜா ஜனகராஜ், கோயம்புத்தூர்.	25
இறைவனை வாழ்த்தினார் வரம் வேண்டாத பெரியாழ்வார் - திரு. தாமல் வங்கீபுரம் சடகோபன், சென்னை.	31
அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்: திருமலை அனந்தாழ்வான் -ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,சென்னை.	34
அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை : அதர்மத்தினால் அழிந்த ஜயத்ரதன் - திரு.எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்.	37
ராசிபலன்கள் : ஜூன் 2026 - டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம்.	40
எச்சிலை நச்சியதற்கும் முக்தி! - ஸ்ரீ உ.வே. டாக்டர் அத்தங்கி ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, சென்னை.	41
சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: அனுமனும், காசி இலிங்கங்களும் -படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை.	43
ஆரோக்கியம் காப்போம்: தண்ணீரின் முக்கியத்துவம் -ஆயுர்வேத மருத்துவர் டாக்டர் கி.ஜ.நிகிலா வெங்கட், கோவை.	44
நீதிக்கதை : மரியாதை கிடைக்குமா! -திரு. இரா. அருண்குமார், புதுச்சேரி.	48
சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி	49
சித்திரக்கதை : பரமனுக்குப் பல்லாண்டு பாடியவர்	52

அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : உபயதேவியருடன் ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி, அப்பளாயகுண்ட்டா.

பின்னட்டை : திருவோடத்தில் ஸ்ரீபத்மாவதித் தாயார், திருச்சானூர்.

சிறப்பு ஆசிரியர் :
திரு. முத்தாட ரவிச்சந்திரா, ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-ஆசிரியர்,
பிரதான ஆசிரியர் (முழு கூடுதல் பொறுப்பு) :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
பி.ஜி.டிப்.இன் ஜே.எம்.சி.,

அச்சிடுபவர் :
திரு. R.V. விஜயகுமார், பி.ஏ., பி.இடி.,
துணை செயலாட்சித் தலைவர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.

டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.

புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா

பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
பிரதான ஆசிரியர் : 2264363

நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு sapthagiri_helpdesk@tirumala.org

தனிப்பிரதி	ரூ.20/-
வருடச்சந்தா	ரூ.240/-
ஆயுள் சந்தா (12 வருடங்கள்)	ரூ.2,400/-
அயல்நாட்டு வருடச்சந்தா	ரூ.1,030/-

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியர் பெருமக்களே பொறுப்பாவர்
-பிரதான ஆசிரியர்



உங்களுடன்

புஷ்ப கைங்கர்யம் செய்த பரம பக்தர்கள்

அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம், புஷ்பம் இந்த்ரிய நிக்ரஹ:
ஸர்வபூத தயா புஷ்பம், க்ஷமா புஷ்பம் விசேஷத:
சாந்தி புஷ்பம், தப: புஷ்பம், த்யான புஷ்பம் ததைவ ச
ஸத்யம் அஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம் பவேத் – அக்னிபுராணம்.

செடி, கொடி, மரங்களில் மலரும் புஷ்பங்களைப் போலவே அகிம்சை, புலனடக்கம், உயிர்களிடத்தில் கருணை, மன்னித்தல், பொறுமை, தவம், தியானம், சத்தியம் தவறாமை ஆகிய எட்டுவித நற்குணங்களும் எம்பெருமானின் உள்ளத்தை மகிழ்விக்கின்ற புஷ்பங்களாகும் என்று நமக்கெல்லாம் அறிவுரை கூறுகின்றது மேற்கண்ட சுலோகம். ஸ்ரீமந்நாராயணன் சகலகல்யாண குணங்களுடன் கூடிய சகுணப்பிரம்மமாக வழிபடப்படுகிறார். அன்பு, கருணை முதலிய நற்குணங்களை அவ்வெம்பெருமான் கொண்டிருந்தாலும், எழில்மிகுந்த அவருடைய தோற்றமே நம் அனைவரின் மனங்களையும் முதலில் வசீகரிக்கின்றது. ஸ்ரீராமபிரானின் பாணத்தால் வீழ்த்தப்பட்டு இறக்கும் தறுவாயில் கிடந்த வாலியும் அவரைப்பார்த்து, *''ஓவியத்து எழுதவொண்ணா உருவத்தாய்''* என்று கூறும்படியான அழகியதோற்றம் கொண்டவன் எம்பெருமான். அவ்வெம்பெருமானை அழகான வண்ணங்களும், நறுமணமும் கொண்ட மலர்களால் அலங்கரிப்பதும், அர்ச்சனை செய்வதும் காலம் காலமாக நமது கலாச்சாரத்தில் கலந்துள்ள வழக்கமாகும். ஸ்ரீகிருஷ்ண பகவானும் "பருவங்களில் அதிகமாக மலர்கள் மலரும் வஸந்த ருதுவாக நான் இருக்கிறேன்" என்று அருளி இருப்பதிலிருந்து மலர்கள் எம்பெருமானுக்கு மிகவும் உகந்தவை என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

ஸ்ரீகிருஷ்ணரின் பரம பக்தரான அக்ரூரர் கம்சனின் ஆணைப்படி கிருஷ்ணரை அழைத்துச் செல்ல ஆயர்பாடிக்கு வந்து, கிருஷ்ணரைச் சந்தித்து, கிருஷ்ணருக்கு மிகவும் பிடித்தமான நறுமணம் மிக்க மலர்களால் புஷ்பாஞ்சலி செலுத்தி வணங்கினார் என பாகவதம் குறிப்பிடுகின்றது. ருக்மிணிப்பிராட்டி, ஸ்ரீநாரதரால் தனக்கு வழங்கப்பட்ட பாரிஜாத மலர்களைக் கொண்டு ஸ்ரீகிருஷ்ணரைப் பூஜித்தாள். அதைக் கண்ட சத்தியபாமாவும் தனக்கும் பாரிஜாத மலர்கள் வேண்டுமென்று கேட்க, ஸ்ரீகிருஷ்ண பகவான் தேவலோகத்திற்குச் சென்று அங்குள்ள பாரிஜாத மரத்தையே பெயர்த்து எடுத்து வந்து துவாரகையில் நட்டுவைத்ததாக ஸ்ரீமத்பாகவதபுராணம் கூறுகின்றது.

ஸ்ரீவில்லிபுத்தூரில் ஸ்ரீபெரியாழ்வார் ஸ்ரீவடபத்ரசாயிக்கு மலர்மாலைகளைத் தொடுத்துச் சமர்ப்பித்து வந்ததையும், அவருடைய திருமகளாகிய ஸ்ரீஆண்டாள் அம்மலர்மாலைகளை தான் முதலில் அணிய பிறகு எம்பெருமானுக்கு அணிவித்ததால் சூடிக்கொடுத்த நாச்சியார் என்று பெயர்பெற்றதையும், ஸ்ரீரங்கத்தில் அருள்பாலிக்கும் ஸ்ரீரங்கநாதருக்கு விப்ரநாராயணர் என்னும் ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார் புஷ்ப கைங்கரியம் செய்ததையும் நாம் அறிவோம்.

''சிந்துபூ மகிழும் திருவேங்கடத்து'' எனும் நம்மாழ்வாரின் பாசுரமானது இவ்வுலகுக்கெல்லாம் மூலகாரணமாகிய திருவேங்கடமுடையானை நித்திய சூரிகளும் மலர்களால் வழிபடுவதாகக் குறிப்பிடுகின்றது. ஸ்ரீமத்ராமாநுஜர் ஒருசமயம் இந்தப் பாசுரத்திற்கான விளக்கத்தை எடுத்துரைக்கும்பொழுது தம் சிஷ்யகோடிகளை நோக்கி, "திருமலையில் நம் திருவேங்கடமுடையானுக்கு புஷ்ப கைங்கர்யம் செய்வதற்கு உங்களில் யாருக்குச் சம்மதம் உள்ளது" என்று வினவ, அனந்தாண்பிள்ளை முன்வந்து அக்கைங்கரியத்தில் ஈடுபட்டதாக குருபரம்பரை கூறுகின்றது. தன் குருவின் ஆணைக்கிணங்க அனந்தாழ்வானும் திருமலையில் ஒரு ஏரியை நிறுவி, அருகிலேயே ஒரு நந்தவனத்தையும் அமைத்து அன்றலர்ந்த மலர்களைத் தொடுத்து திருவேங்கடமுடையானுக்குச் சூட்டி புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தார். 900 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீஅனந்தாழ்வானால் துவங்கப்பட்ட புஷ்ப கைங்கர்யம் அவரது வம்சத்தினரால் தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது. இன்றும் காலையிலும், மாலையிலும் நடைபெறுகின்ற தோமாலை சேவைக்கும், சாத்துமுறைக்கும் அனந்தாழ்வான் பரம்பரையின் 26வது தலைமுறையினைச் சார்ந்தவர்களால் அனந்தாழ்வான் தோட்டத்தில் இருந்து மலர்மாலைகள் கொண்டு வரப்பட்டு திருவேங்கடமுடையானுக்குச் சமர்ப்பிக்கப்படுகிறது.

நாமும் நம்மால் இயன்றவரை எம்பெருமானுக்குப் புஷ்ப கைங்கர்யம் செய்து பேரின்ப வாழ்வினைப்பெற்று இன்புறுவோமாக.



திருமலையப்பனை நினைத்தாலே புத்துணர்வே!

ஜூன் மாதம் என்பது வசந்தருது முடிந்து க்ரிஷ்ம ருது தொடங்கும் மாதம். இந்த ஜூன் மாதத்தில் பல வைணவ சான்றோர்கள் அவதரித்திருக்கிறார்கள். திருவரங்கப் பெருமாள் அரையர், நடாதூர் அம்மாள், திருக்கோஷ்டியூர் நம்பிகள், திருவாழியாழ்வான், பெரியாழ்வார், வடக்குத் திருவீதிப்பிள்ளை, நாதமுனிகள் அவதரித்த மாதம் இந்த மாதம்.

இந்த மாதத்தில் சுவாதியில் அவதரித்தவர் பெரியாழ்வார். பெரியாழ்வார் அவதரித்த சுவாதியின் பெருமையை உபதேசரத்தின மாலை 16ஆம் பாட்டில் மணவாள மாமுனிகள் விவரிக்கிறார்.

இன்றைப் பெருமை அறிந்திலையோ ஏழை நெஞ்சே!
இன்றைக்கு என் ஏற்றம் எனில் உரைக்கேன் நன்றி புனை
பல்லாண்டு பாடிய நம் பட்டர் பிரான் வந்துதித்த
நல்லானியில் சோதி நாள்



ஆனி மாதம் சுவாதி நன்னாளின் பெருமை உனக்குத் தெரியுமா? நான் சொல்லுகிறேன் கேள். மங்களாசாஸனம் என்ற உயர்ந்த தாத்பர்யத்தை தன்னுள் கொண்டுள்ள திருப்பல்லாண்டை அருளிச்செய்த பட்டர்பிரான் அவதரித்த தினம். ஆகையாலே இது ஒரு சிறந்த நாள் என்பது பாசுரத்தின் பொருள்.

சுவாதி நட்சத்திரத்தின் உயர்வைக் குறித்து ஜோதிட சாஸ்திரங்களில் பல விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. சுவாதி நட்சத்திரம் அன்று மழைத்துளி சிப்பிக்குள் விழுந்தால் முத்து உருவாகும் என்று ஒரு குறிப்பு இருக்கிறது. எனவே, சுவாதி என்பது சீரிய சிந்தனையையும், வளர்ச்சியையும், உயர்வையும் எடுத்துக்காட்டுகிறது.

சுவாதி நட்சத்திரத்தில்தான் பிரகலாதனைக் காப்பாற்று வதற்காக நரசிம்மமூர்த்தி தோன்றினார். இந்த நட்சத்திரத்தில்

– பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963

தான் வாயு பகவான் அவதரித்தார். இந்த நட்சத்திரத்தில்தான் கருட பகவான் அவதரித்தார். இப்படிப்பட்ட உயர்ந்த நட்சத்திரத்தில்தான் கருட பகவானின் அம்சமான பெரியாழ்வாரும் அவதரித்தார். ஆழ்வார்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சிறப்பு உண்டு. மற்ற ஆழ்வார்களுக்கு இல்லாத தனிச் சிறப்பாக எம்பெருமான் ஒவ்வொரு ஆழ்வாருக்கும் அளித்திருப்பார்.

சாக்ஷாத் பூமி பிராட்டியின் அம்சமான பூமித் தாயாரே, வைகுண்ட வான் போகத்தையும் துறந்து, பெரியாழ்வாரின் பெண் பிள்ளையாய் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு துளசிச் செடியின் அடிவாரத்தில் அவதரித்தார் என்பது பெரியாழ்வாருக்கு உள்ள சிறப்பு. பெரியாழ்வாரின் திருமகளான அவர், *"வேங்கடவற்கு என்னை விதி"* என்று திருவேங்கடவனையே மணவாளனாக வரித்தார். மேகங்களை தூதுவிட்டு, நிறைவாக எம்பெருமானையே மணந்து கொண்டார். அதனால்தான் திருவேங்கடவனும் ஆண்டாள் மீது அத்தனை காதல் கொண்டு, அவளுடைய சூடிக் களைந்த மாலையை, இன்றைக்கும் பிரம்மோத்ஸவத்தில் காத்திருந்து ஏற்றுக் கொள்ளுகின்றான்.

திருப்பாவையைப் பாடித் தந்த அவளை "கோதா பரிணயம்" என்று தான் ஏற்றுக்கொண்ட உற்சவத்தை நடத்திக் காட்டுகின்றான். பெரியாழ்வாரின் பெண் பிள்ளையை திருவேங்கடவன் ஏற்றுக் கொண்டதால், மலையப்ப ஸ்வாமி பெரியாழ்வாருக்கு மாமனார் ஆகிறார் என்பது பெரியாழ்வாருக்கு உரிய சிறப்பு. பெரியாழ்வார் பிரணவத்தின் விரிவுப் பொருளான திருப்பல்லாண்டு பிரபந்தத்தைப் பாடிவிட்டு, கண்ணனைக் குழந்தையாகப் பாவித்து, பிள்ளைத்தமிழ்ப் பாசுரங்களை அருளிச் செய்கிறார்.

பெரியாழ்வார் திருமொழி என்று சொல்லப்படும் அந்தப் பிரபந்தத்தின் நிறைவு *"சென்னியோங்கு தண் திருவேங்கடமுடையாய்"* என்று திருவேங்கடவனிடத்தில் தான் வந்து முடிகிறது. திருவேங்கடவன் சொல்லித்தான், "வட திருவேங்கடம் வேண்டாம், தென் திருவேங்கடத்தில் போய் கைங்கரியம் செய்" என்று சொல்ல, தம்முடைய வயோதிகத்தையும் பொருட்படுத்தாமல், திருமாலிருஞ் சோலை என்று சொல்லப்படும் தென் திருவேங்கடம் வந்து கைங்கரியம் செய்து, திருநாட்டை அடைந்தார் என்பது அவருடைய வரலாறு.

"மலையப்ப ஸ்வாமியே, வேங்கடமுடையவனே, உலகு வாழ நின்ற நம்பியே, தாமோதரனே, அடியேன் உன்னுடைய சக்கரப் பொறியை ஒற்றிக்கொண்டு, உன்னுடைய அருளையே நினைத்துக் கொண்டு கிடந்தேன், உன் திருக்குறிப்பு என்னவோ அதன் பிரகாரம் நடந்து கொண்டிருந்தேன்" என்று மலையப்ப ஸ்வாமியிடம் சரணாகதி செய்கின்றார்.

சென்னியோங்கு தண் திருவேங்கடமுடையாய் உலகு
தன்னைவாழ நின்றநம்பீ தாமோதரா சதிராஎன்னையும்
என்னுடைமையையும் உன் சக்கரப்பொறி யொற்றிக்
கொண்டு
நின்னருளே புரிந்திருந்தேன் இனிஎன் திருக்குறிப்பே?

மலையப்ப ஸ்வாமியும், "நின் குறிப்பு என்ன என்று கேட்டாய் அல்லவா, என்னுடைய குறிப்பு நீ திருமாலிருஞ் சோலைக்குச் சென்று புஷ்ப கைங்கரியம் செய்வது" என்று சொல்ல, திருமாலிருஞ்சோலைக்கு வந்து தொண்டு செய்து திருநாடு அடைகிறார்.

திருமாலிருஞ்சோலை (அழகர் கோயில், மதுரை) மலையடிவாரத்தில் அவருடைய திருவரசு இருக்கிறது. அவருடைய திருநட்சத்திரமன்று ஆயிரக்கணக்கான அன்பர்கள் வந்து, வணங்குகின்றார்கள். சென்னியோங்கு பதிகத்தில் ஒரு பாசுரம்...

அனந்தன்பாலும் கருடன்பாலும் ஐதுநொய்தாக
வைத்துஎன்
மனந்தனுள்ளே வந்துவைகி வாழச்செய்தாய் எம்பிரான்
நினைந்துஎன்னுள் ளேநின்று நெக்குக்கண்கள்
அசும்பொழுக
நினைந்திருந்தே சிரமம்தீர்ந்தேன் நேமி நெடியவனே

இதில் உள்ள அத்தனை விஷயங்களும், மலையப்ப ஸ்வாமியிடம் பெரியாழ்வார் கொண்ட அனுபவமாகவே எடுத்துக் கொள்ள வேண்டும். தனக்கும் மலையப்ப ஸ்வாமிக்கும் உள்ள உறவுகளை உருக்கமாக இப்பதிகத்தில் அவர் பாடுகின்றார்.

இந்தப் பாசுரத்தில் அவர் முடிக்கும் பொழுது *"நினைந்திருந்தே சிரமம் தீர்ந்தேன் நேமி நெடியவனே"* அழைப்பது மலையப்ப ஸ்வாமியைத்தான். காரணம்

"நெடியவன்" என்றால் அது திருவேங்கடவனைக் குறிக்கும் என்பதை குலசேகராழ்வார் அருளிய திருவேங்கடப் பதிகப் பாசுரத்தின் மூலம் அறியலாம்.

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!
நெடியானே! வேங்கடவா! நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும்கிடந்தி
யங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே

பெருமானை *"நெடியானே, வேங்கடவா"* என்று தானே அவர் பாசுரம் பாடி இருக்கிறார். அதே மலையப்பனை பெரியாழ்வாரும் "நெடியானே" என்று அழைக்கின்றார். இனி இந்தப் பாசுரத்தின் பத உரையைப் பார்ப்போம்.

நேமி நெடியவனே – திருவாழியாழ்வானின் தலைவனே!, எம்பிரான் – எனக்குப் பரமோபகாரக னானவனே!, அனந்தன் பாலும் கருடன் பாலும் – திருவனந்த ஆழ்வானிடத்திலும், பெரிய திருவடியின் இடத்திலும், ஐதுநொய்தாக வைத்து – (அன்பை) மிகவும் அற்பமாக வைத்து, என் மனம் தன் உள்ளே வந்து வைகி – எனது இதயத்தினுள்ளே வந்து பொருந்தி, வாழச்செய்தாய் – (என்னை) வாழ்வித்து அருளினாய்;

(இப்படி வாழ்வித்த உன்னை), என் உள்ளே நினைந்து நின்று – என் நெஞ்சில் இடை விடாமல் நினைத்துக் கொண்டு, நெக்கு – (அதனால்) நெஞ்சு சிதிலமாகப் பெற்று, கண்கள் அகம்பு ஒழுக – கண்களினின்றும் நீர் பெருகும்படி, நினைத்து இருந்தே – (நீ செய்த நன்மைகளை) நினைத்துக் கொண்டே, சிரமம் தீர்த்தேன் – என் துன்பங்கள் நீங்கப்பெற்றேன்.

நித்யசூரிகளில் எம்பெருமானுடைய அந்தரங்க சீடர்கள் இருவர். ஒருவர் அனந்தன் எனும் ஆதி சேஷன். எப்பொழுதும் அகலாது கைங்கர்யம் புரிபவர்.

சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்,
நின்றால் மரவடியாம் நீள்கடலுள், என்றும்
புணையாம் மணி விளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம், திருமாற்கு அரவு

என்பது பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி. இன்னொருவர் கருடன். ஓடும் புள்ளேறி – சூடும் தண்டுழாய், நீடு நின்றவை – ஆடும் அம்மானே என்பது நம்மாழ்வார் பாசுரம்.

இந்த இருவர் பெயரிலும் எம்பெருமானுக்கு அளவற்ற ஈடுபாடு. நீலாத்ரி, கருடாத்ரி, அஞ்சனாத்ரி, விருஷபாத்ரி, நாராயணாத்ரி, வேங்கடாத்ரி என்று திருமலையில் உள்ள ஏழு சிகரங்களில் இருவர் அனந்தனும் கருடனும். இந்த இருவர் மீது வைத்த அன்பை விட, அதிக அன்பு பெரியாழ்வாரிடத்தில் வைத்தாராம் பெருமாள்.

இது எப்படி சாத்தியம் என்று நினைக்கலாம்? ஒரு உதாரணம் சொன்னால் புரியும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருமலை

ரூ.300/- சிறப்பு நுழைவு தரிசன டிக்கெட் பெற்றவர்கள் கவனத்திற்கு...

- சிறப்பு நுழைவு தரிசனம் டிக்கெட் பெற்ற பக்தர்கள் தங்கள் டிக்கெட் உடன் பதிவு செய்த சமயத்தில் தங்களால் குறிப்பிடப்பட்ட அசல் புகைப்பட அடையாள அட்டையைத் தவறாமல் கொண்டு வருதல் வேண்டும்.
- தரிசன டிக்கெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் மட்டுமே தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவர். மற்றவர்களுக்கு அனுமதி இல்லை.
- பக்தர்கள் அனைவரும் தங்களுக்கு ஒதுக்கப் பட்ட நேரத்திற்கு மட்டுமே க்யூ வரிசையில் அனு மதிக்கப்படுவர். தங்களுடன் உடைமைகள், மின் னணுப்பொருட்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.
- லட்டு பிரசாதம் தரிசனத்திற்கு வந்தவர்களுக்கு (டிக்கெட் ஸ்கேன் செய்யப்பட்டவர்கள்) மட்டுமே இலவசமாக வழங்கப்படும். தரிசனத்திற்கு வர இயலாதவர்களுக்கு வழங்கப்படமாட்டாது.
- பக்தர்கள் தாங்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப் பட்ட நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்குள் பிர சாதத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.
- பக்தர்கள் பாரம்பரிய ஆடைகளை மட்டுமே அணிதல் வேண்டும்.
- ஆண்கள் : வேட்டி – சட்டை/குர்தா – பைஜாமா.
- பெண்கள் : புடவை – இரவிக்கை/தாவணி/ மேலாடையுடன் கூடிய சுடிதார்.
- 12 வயதிற்குட்பட்ட சிறார்கள் மட்டும் வயது சான்றிதழை சரிபார்த்தப் பின்னரே இலவசமாக தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவர்.

ஏழு பிள்ளைகள் ஒரு பெரியவருக்கு. வீட்டிலே ஆறு பேர் ஒன்றாக இருக்கிறார்கள். ஏழாவது பிள்ளை வெளியூர் சென்றுவிட்டு, பல நாள்கள் கழித்து வீட்டுக்கு வருகின்ற பொழுது, மற்ற பிள்ளைகளை எல்லாம் சற்று தள்ளி வைத்து விட்டு, அந்தப் பிள்ளையைக் கட்டி அணைத்து அதிக அன்பு செலுத்துவது போல, தம் அருகிலேயே இருக்கக் கூடிய அனந்தனையும் கருடனையும் கூட கொஞ்சம் தள்ளி வைத்து விட்டு பெரியாழ்வார் மீது அன்பைக் கொட்டி, அவருடைய மனதுக்குள்ளே புகுந்து இருக்கின்றானாம் பெருமான்.

அதுமட்டும் அல்லாமல் இன்னொரு நுட்பமான விஷயத்தையும் இதிலே காட்டுகின்றார்.



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

திருமலையானின் அக்ஷர தீபிகை

ஸப்தகிரி

மலர் எழுத்தால் ஸ்வாமியை அர்ச்சிக்கும் ஸப்தகிரி உங்களுடையது. அதனை மேன்மேலும் வளர்ச்சியடைய செய்வதும் ஸ்ரீவாரி சேவையே...

- பரந்தாமனைத் தரிசிப்பதற்கும், அவரைச் சென்றடைவதற்கும் எத்தனையோ வழிகள் உண்டு.
- அனாதைகளின் காப்பாளன், ஆபத்தைத் தவிர்ப்பவனான அந்த ஏழுமலையானை அக்ஷர (எழுத்து)ப் பூவினால் ஆராதிக்கின்றனர்.
- திருமலையானின் அக்ஷரப் பிரசாதமான ஸப்தகிரியைப் படிப்பதும், படிக்க வைப்பதும் அவனுக்குச் செய்யும் திருத்தொண்டே.
- "ஸப்தகிரி" படியுங்கள். உங்கள் அன்பானவர்களையும் படிக்க வையுங்கள். திங்கள்தோறும் திருமலையானை இந்த ஸப்தகிரி மூலம் தரிசியுங்கள். சிறப்பைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் 'ஸப்தகிரி' வாசகரானால்... உங்கள் அன்பானவர்களுக்குப் பரிசாக அளியுங்கள். சந்தா செலுத்த வையுங்கள். உங்கள் பக்கத்து வீட்டாருக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் ஸப்தகிரி குறித்துக் கூறுங்கள்.
- உங்கள் அன்பானவர்களையும் ஸப்தகிரி மூலம் ஸ்வாமியின் திருவருளைப் பெற வையுங்கள்.

ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு...

ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியில் மாற்றம் இருந்தால் அல்லது அதை முறைபடுத்துவதன் பொருட்டு தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலகப் பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) நேரில் வந்தோ அல்லது தபால் மூலமாகவோ தெரியப்படுத்தவும். மேலும், chiefeditortpt@gmail.com எனும் மின் அஞ்சல் (இமெயில்) வாயிலாகவும் தெரிவிக்கலாம்.

எங்கள் முகவரி :

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே.அச்சகக்கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி – 517507.


வெளியூரில் இருந்து வந்த பிள்ளை இடத்திலே பெற்றவர்கள் என்ன கேட்பார்கள். இத்தனைக் காலம் பிரிந்து வெளி ஊரில் எப்படி எல்லாம் துன்பப் பட்டாயோ? என்று பேசுகின்ற பொழுது அந்தப் பிள்ளை சொல்லும்.

"இல்லை உங்களையே நினைத்திருந்தேன். உங்களைப் பார்க்க வேண்டும் என்று துடித்தேன், எப்பொழுதெல்லாம் எனக்குத் துன்பம் ஏற்படுகிறதோ அப்பொழுதெல்லாம் உங்களை நினைத்துக் கொண்டிருந்தேன், என்னுடைய சிரமம் தீர்ந்து ஆறுதல் பெற்றேன்" என்று சொல்வது போல, "'பகவானே, இந்த நிலவுலகத்திலே பிறந்து, படாதன பட்டு, துன்பத்திலே உழல்கின்ற பொழுது, நீ செய்த உபகாரங்களை எல்லாம் நினைத்து, நான் இளைப்பாறுவேன். வந்த துன்பங்கள் எல்லாம் நொடிப்பொழுதில் மறைந்து விடும்" என்று சொல்லி முடிக்கிறார் பெரியாழ்வார் ...

உண்மைதானே!

எத்தனைச் சிரமங்கள் இருந்தாலும், "திருவேங்கடம்" என்று நினைப்பவர்களுக்கு, சூரியனைக் கண்ட பனி எவ்வாறு நீங்குகிறதோ அதுபோல அவர்களது சிரமங்கள் எல்லாம் நீங்கி, புத்துணர்வு பிறப்பதை அனுபவத்திலே காண்கிறோம் அல்லவா!

குறுக்கெழுத்துப் புதிர் -119



இடமிருந்து வலம்

01. பகவத்கீதை அருளியவர். ..(9)
08. திருமுருகாற்றுப்படையின் ஆசிரியர்...(5)
11. பெரியபுராணம் இயற்றியவர் ...(5)
13. குரு காணிக்கையாகத் தன் கட்டை விரலை அளித்தவர்...(5)
18. போற்றித் திருத்தாண்டகம் அருளியவர்...(9)
20. தேவர்களின் குரு...(6)
23. சனீஸ்வரரின் குரு...(4)

வலமிருந்து இடம்

03. ராம சரிதமானஸ் எழுதிய ராம்போலோவின் தமிழ்ப் பெயர் ...(3) தாசர்.
07. சரஸ்வதி தேவியின் குரு...(6)
09. இராமபிரானின் குலகுரு...(5)
14. ஸ்ரீஸ்துதி அருளியவர்...(8)
16. பெரிய திருமலை நம்பியின் குரு...(6).
19. பாஞ்சாலிசபதம் இயற்றியவர் ...(9).
21. பாண்டவர் மற்றும் கௌரவர்க்கு வில் வித்தை கற்பித்தவர்...(4).
22. அசுரர்களின் குரு...(8).

மேலிருந்து கீழ்

02. கர்ணனுக்கு வில் வித்தையைப் பயிற்றுவித்தவர்...(6)
04. தமிழில் மகாபாரதம் அருளிச் செய்தவர்...(12)
05. அனந்தாழ்வானின் குரு ...(6)
06. திருவெம்பாவை அருளியவர் ...(5) சகர்
17. கம்பர் நம்மாழ்வார் மீது பாடியது...(5) அந்தாதி

கீழிருந்து மேல்

10. விஷ்ணு சஹஸ்ர நாமம் அருளியவர்...(4)
12. திருப்பாவை அருளியவர்...(4)
15. ஆஞ்சநேயரின் குரு...(7)

தொகுப்பு : திருமதி இராஜகுமாரி வெங்கடேசன்,
ஆரணி, திருவண்ணாமலை, 99762 38430.

புதிருக்கான விடை 13ஆம் பக்கத்தில் உள்ளது.

வாசகர்கள் சரி பார்க்கவும்...

"கோவிந்தா" எனக் கூறுங்கள்!

திருமலையில் கோவிந்தன் குடிகொண்டு இருப்பதால் திருமலையில் எந்நேரமும் கோவிந்த நாம ஸ்மரணை செய்தல் வேண்டும். அனைவரையும் "கோவிந்தா" என்றே அழையுங்கள். இல்லங்களில் இருந்தாலும் "கோவிந்த நாம" பாராயணம் செய்தல் நன்று.





தமிழ் மறையான திவ்ய பிரபந்த பாசுரங்களுக்கு, இன்னிசை தந்த வள்ளல், திவ்ய பிரபந்தங்களில் திருப்பல்லாண்டிற்கும், கண்ணிநுண்சிறுத்தாம்பிற்கும், திருவாய் மொழிக்கும் தனியன் அருளியவர், யோக ரஹஸ்யம் என்ற பிரபந்தத்தை அருளிச் செய்தவர், நாலாயிர திவ்ய பிரபந்தத்தை அனுசந்திப்பதற்கு முன் திருப்பல்லாண்டை சேவிக்க வேண்டும் என்றும், திருப்பாவையையும் திருப்பள்ளி எழுச்சியையும் தினமும் காலையில் சேவிக்க வேண்டும் என்றும், திருவாய் மொழிக்கு முன் கண்ணிநுண் சிறுத்தாம்பு சேவிக்க வேண்டும் என்றும் நிர்ணயம் செய்து ஸ்ரீ வைஷ்ணவ தர்சனத்திலேயே முக்கியமான ஸ்ரீ வைஷ்ணவ தர்மங்களை நியமித்தவர் என்ற பெருமையும் ஸ்ரீமந்நாதமுனிகளையே சாரும்.

நாத ப்ரஹ்மர் என்றும், ஸ்ரீ ரங்க நாத முனிகள் என்றும் அழைக்கப்படும் ஸ்ரீமந்நாதமுனிகள், வைணவம் தழைத்தோங்க இவ்வையகத்தில் செய்த கைங்கர்யங்கள் பல. நம்மாழ்வாரை யோக சமாதியில் நேராக தரிசித்து உபதேசம் பெற்ற நாதமுனிகளை, முதலாசார்யார் என்றே கொண்டாடி மகிழ்கிறது வைணவ மரபு.

வீரநாராயண புரமென்று அழைக்கப்படும் காட்டுமன்னார் கோயிலில் சொட்ட குலத்தில் ஆனி அனுஷத்தில், திரு அவதாரம் செய்தார் நாதமுனிகள். இவரது திருக்குமாரர் ஈச்வர பட்டாழ்வான். இவரது பேரன் தான் யாமுநாசார்யார் என்கிற ஆளவந்தார். எம்பெருமான் நாதமுனிகளின் வழியாக தான் நமக்கு திராவிட வேதமான நாலாயிர திவ்ய பிரபந்தத்தைக் காட்டித் தந்திருக்கிறார்.



நாலாயிர திவ்ய பிரபந்தத்தைக் கண்டுபிடித்த நிகழ்வு

காட்டுமன்னார் கோயிலில் பலவிதமான கைங்கர்யங் களையும் உள்ளன்போடு பெருமாளுக்கு செய்து வந்த நாதமுனிகளின் உள்ளத்தை *"ஆராவமுதே அடியேனுடலும் நின்பால் அன்பாயே"* (திருவாய்மொழி 5.8.1) என்று தொடங்கி *"உழலையென்பின் பேய்ச்சி முலையூடு"* (திருவாய்மொழி 5.8.1) என்று பாடிய வைணவ அடியார்களின் திருவாய்மொழி பாசுரங்கள் ஈர்த்தது. அந்தக் கடைசி பாசுரத்தில் *"ஓராயிரத்துள் இப்பத்தும்"* என்று வருவதை கேட்டு, மீதி ஓராயிரம் பாசுரங்கள் எங்கே என்று ஏங்கியபடியே நாதமுனிகள் அப்பாசுரங்களை பாடியவர்களிடம் கேட்க, அடியோங்களுக்கு இப்பத்து பாடல்கள் மட்டுமே தெரியும் ஸ்வாமின் என அவர்கள் கை கூப்பிச் சென்றனர். அவர்கள் பாடிய பாசுரத்தில், குருகூர்ச்சடகோபன் என்று வந்ததால் திருக்குருகூர் சென்று மீதி பாசுரங்களைப் பெற்று வருவோம் என்ற ஆவலில்

புராண இதிகாசங்கள் கூறுகின்ற காலத்தை வென்றவர்கள் – மரணம் அற்றவர்கள் 1) அஸ்வத்தாமன், 2) மகாபலி, 3) கிருபாச்சாரியார், 4) ஆஞ்சநேயர், 5) விபீஷணன், 6) பரசுராமர், 7) வியாசர் ஆகிய ஏழு பேர்கள் "சீரஞ்சீவிகள்" என்று அழைக்கப்படுகிறார்கள்.

அவர் திருக்குருகூர் சென்று அங்கு இருந்தவர்களிடம் பிரபந்த பாசுரங்களைப் பற்றி கேட்ட போது, அங்கு இருப்பவர்கள் எவருக்குமே அது குறித்துத் தெரியவில்லை.

பிரபந்த பாசுரங்களை எப்படியாவது தேடிக் கண்டுபிடித்திட வேண்டும் என்ற நாதமுனிகளின் உறுதி, இறுதியில் அவரை, மதுரகவியாழ்வாரின் சீடரான பராங்குச தாசரை சந்திக்க வைத்தது. பராங்குச தாசரோ தமக்குப் பிரபந்தத்தில் தன் ஆசார்யரான மதுரகவியாழ்வார் அருளிய கண்ணிநுண்சிறுத்தாம்பு மட்டும்தான் தெரியும் என்றும், மற்ற பிரபந்த பாசுரங்கள் என்றோ மறைந்து விட்டன என்றார். கண்ணிநுண்சிறுத்தாம்பு பாசுரங்களை 12,000 முறை திருப்புளியாழ்வார் முன்பாக அமர்ந்து சிரத்தையாக சொன்னால், நிச்சயம் நம்மாழ்வார் முன்னே தோன்றி தொலைந்து போன பாசுரங்களை திரும்பத் தந்திடுவார் எனக் கூற, அப்பாசுரங்களையும் உபதேசித்தார். அந்த நாலாயிர திவ்ய பிரபந்த பாசுரங்களும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு திருப்புளியாழ்வாரிடம் இருந்த நம்மாழ்வாரின் திருவடியிலே சரண் புகுந்து 12,000 முறை கண்ணிநுண்சிறுத்தாம்பு பாசுரங்களைப் பக்தியாகச் சொல்ல, பிரத்யட்சமாகக் காட்சி கொடுத்தார், ஆழ்வார்களின் தலைவனான நம்மாழ்வார்.

நாதமுனிகள் கேட்டுக் கொண்டதற்கேற்ப, பிரபந்த பாசுரங்களை அதன் பொருளோடு பரிவோடு பரிசாக அளித்து, அதனோடு அஷ்டாங்க யோக ரகசியங்களையும் நம்மாழ்வார் அருளினார்.

யோக சாஸ்திரத்திற்கும், நாதமுனிகளுக்கும் நிரம்பவே தொடர்பு இருக்கிறது. நாதமுனிகளுக்கு திவ்ய பிரபந்த பாசுரங்களோடு யோக ரகசியங்களையும் நம்மாழ்வார் அளித்தார். அந்த யோகக் கலையைப் பயிற்சி செய்யும் விதமாக யோக சமாதியிலேயே பல காலம் நாதமுனிகள் திருக்குருகூரில் இருந்ததாகவும், அவரை மீண்டும் காட்டுமன்னார் கோயில் வீர நாராயணப் பெருமாள் அழைக்கவே அந்த யோக சமாதி நிலையிலிருந்து களைந்து அவர் வீர நாராயணபுரம் சென்றதாகவும் குறிப்புக்கள் இருக்கின்றன.

அரையர்கள் அவதரிக்கக் காரணமானவர்

திருமங்கையாழ்வார் காலம் முதல் ஸ்ரீ ரங்கத்தில் நடந்து வந்த அத்யயன உற்சவம் சில காலம் நின்று போயிருந்தது. அதனை மீண்டும் தொடங்கிட வேண்டும். பெருமாள் அதனைக் கேட்க வேண்டும் என்று 21 நாட்கள் அத்யயன உற்சவமாக நடக்க வழி வகை செய்தவர் இவரே. பிரபந்த பாசுரங்களை ராகத்தோடு தாளம் போட்டு பாடும் அரையர் சேவையைத் துவக்கியவர் இவரே ஆவார்.

தமிழ் வேதத்திற்கு நாதம் அளித்த நாதமுனிகளின் திருவடிகளை மனதில் என்றுமே நிறுத்திக் கொள்வோம்.

- திருமதி நளினி சம்பத், சென்னை, 97911 67583.

குறுக்கெழுத்துப்புதிர் 119க்கான விடைகள்

1 ஸ்ரீ	கி	ரு	ஷ்	ண	2 ப	க	வா	ன்	சி	ள	3 து
4 வி	ன்	5 ஸ்ரீ		6 மா	ர	ர்	வ	ரீ	க்	ய	7 ஹ
ல்	வா	ரா	ள்	ணி	சு	ம	8 ந	க்	கீ	ர	ர்
லி	க	மா	டா	க்	ரா	ஷ்	ர்	ட	ஷ்	சி	9 வ
பு	ப	நு	ண்	க	ம	10 பீ	11 சே	க்	கி	ழா	ர்
த்	ய	ஜ	12 ஆ	வா	ர்		13 ஏ	க	லை	வ	ன்
தூ	ரி	ர்	க	சி	தே	த	ந்	தா	14 வே		
ர்	15 கூ				ர்	தா	ந்	வ	ள	16 ஆ	17 ச
ஆ	18 தி	ரு	நா	வு	க்	க	ர	ச	ர்		ட
ழ்		தி	ர	பா	ய	ணி	ம	ர	ப்	19 சு	கோ
வா	20 பி	ர	க	ஸ்	ப	தி	ர்	ண	ரோ	21 து	ப
ர்	யா	ரி	சா	ச்	ரா	க்	22 சு	23 பை	ர	வ	ர்



யமுனை ஆற்றிலே...

திருமதி ராஜலக்ஷ்மி, கேரளா, 99461 28102.

"கங்கே ச யமுனே சைவ கோதாவரி சரஸ்வதீ
நர்மதே சிந்து காவேரீ ஜலேஸ்மின் சந்நிதிம் குரு"

அனைத்து பூஜைகளில், இச்சுலோகம் "யமுனே" என்று யமுனையை இரண்டாவதாகச் சிறப்பு நதி என்று போற்றுகிறது நம் பாரதம்.

யமுனை நதி யமுனோத்ரி என்ற இமய மலையிலிருந்து துள்ளிக் குதித்து வருகிறாள். நமது தலைநகரமான புதுதில்லியைக் கடந்து செல்கிறாள். இவளுக்கு, பகவான் கிருஷ்ணனின் சம்மந்தம் உள்ளதால் பெருமைக்குரியவளாவாள். கங்கையின் மிகப் பெரிய வற்றாத துணை நதியாக யமுனை இருக்கிறாள். இவள் யமனின் தங்கை ஆனதால் "யமுனையில் நீராடினால் யம பயம் நீங்கும்" என்று கூறுவர். ப்ரயாக்ராஜ் என்ற திரிவேணி சங்கமத்தில் யமுனை, கங்கை, சரஸ்வதி நதிகள் சேர்வது சிறப்பான ஒரு காட்சியாகும். இந்த நதி கருமை நிறத் தோற்றத்தில் பாய்ந்தோடும். அக்னி புராணம், மஹாபாரதம், பாகவத புராணம், பத்ம புராணம், தைத்ரிய சம்ஹிதை, ரிக் வேதத்தில் இவளுடைய பெருமைகள் கூறப்பட்டுள்ளன. யமுனைக்கு ஜமுனா, காளிந்தி, யாமி, சூர்ய தனயா, சூர்யஜா, ரவிநந்தினி என்ற பல பெயர்கள் உண்டு. கண்ணனின் அஷ்ட மஹிஷிகளில் யமுனை 'காளிந்தி' என்ற பெயரில் கண்ணனின் கரம் பற்றியவள்.

யமுனையும் கண்ணனும்

கண்ணன், பிறந்தவுடனே, வசுதேவர் தன் தலைமீது கண்ணனை வைத்துக்கொண்டு யமுனையைக் கடந்து சென்றப்போது அவருக்கு வழிவிட்ட யமுனை, கண்ணனின் திருக்கமலப் பாதங்களைச் சேவிக்க வேண்டும் என்ற ஆசையால் சிறிது நேரம் பொங்கி வந்து, கண்ணனின் திருப்பாதங்களை வருடினாள். பின்னர், வசு தேவருக்கு வழி விட்டாள். இதைப் பெரியோர்கள், யமுனையின் பாக்கியம் என்று போற்றுவார்கள். கம்சனுக்குப் பயப்படாமல் பகவத் கைங்கர்யம் செய்த பெருமை யமுனைக்கே உண்டு. கண்ணனுக்கு 'யமுனைத் துறைவன்' என்று ஒரு பெயரும் உண்டு.

கண்ணனின் லீலைகள் யாவும் யமுனை நதிக் கரையில்தான் நடந்தது. கண்ணன் நீராடுவது, கோபிகைகளோடு விளையாடுவது, நீர் குடிப்பது போன்ற ஒவ்வொரு செயல்களும் யமுனையைச் சார்ந்தே நடந்தது. கண்ணன் உணவு உண்டு விட்டு, கையை யமுனையில் சுத்தம் செய்வார். தேவர்கள், அந்த கையில் மீதமுள்ள பிரசாதத்தை உண்பதற்கு யமுனையில் மீனாக வடிவெடுத்தனர் என்றும் ஒரு கூற்று உண்டு.

யமுனையின் கருப்பு கண்ணனின் திருமேனியில் கலந்ததனால் கண்ணன் கருமை நிறமா? இல்லை கண்ணனின் கருமையான மேனி யமுனையில் தினமும் நீராடியதால், யமுனை கருமை நிறம் பெற்றாளா? இது விடையில்லாமல் உள்ள புதிர் என்பர்.

கண்ணனும், அர்ஜுனனும் ஒருமுறை யமுனைக் கரையில் உலாவி வந்தனர். அப்போது ஒரு அழகிய பெண் அங்கே தவமியற்றுவதைக் கண்டனர். அப்பெண்ணை நோக்கி அர்ஜுனன் "யார் நீ" என்று வினவ, அவள், தான் "யமுனை" என்றும், பகவான் விஷ்ணுவை திருமணம் செய்ய தவம் இருப்பதாக வும் கூறினாள். அர்ஜுனன், கண்ணன் விஷ்ணுவின் அவதாரம் என்று கூற, கண்ணனையே திருமணம் செய்துக்கொண்டாள். யமுனை நதி, கவிஞர்களுக்கு ஒரு விருந்து. ஏனெனில், கண்ணனின் லீலைகளுடன் வரும் எல்லா வரிகளிலும் அவள் இடம் பெறுவாள். கண்ணனின் ராஸக்ரீடை, ஜலக்ரீடை போன்ற

திவ்யமான லீலைகளை நேரில் கண்டு நீராய் கரைந்தவள். இந்த பாக்கியம் வேறு எந்த நதிகளுக்கும் கிடைக்கவில்லை. சூர்தாஸ், மீரா மற்றும் பல கிருஷ்ண பக்தர்கள் யமுனையை கண்ணனின் விளையாட்டு மைதானமாகக் கவிபாடுகிறார்கள்.



ரக்ஷா பந்தன் - ராக்கி பண்டிகை

யமன், தன் தங்கையைக் காண வெகு நாட்கள் கழித்து வர, யமுனை மிக மகிழ்ச்சியுடன் அவருக்கு விருந்து வைத்தாள். பின்னர் தன் அண்ணனுக்காக 'ராக்கி' என்ற காக்கும் ரக்ஷையைக் கட்டினாள். இது அண்ணன் தங்கை உறவை உணர்த்தும் "ரக்ஷா பந்தன்" என்ற பண்டிகையானதாகக் கூறுவர்.

பாரத நாட்டில் 'புஷ்கரம்' என்ற திருவிழா, நதிகளின் முக்கியத்துவத்தை கூறும் விழாவாகும். இதனை12 நாட்கள் கொண்டாடுவர். குரு பகவான் கடக ராசிக்குள் நுழையும்போது யமுனை நதிக்கு புஷ்கரம் வரும். இந்த முறை ஜூன் மாதம் யமுனைக்கு புஷ்கரம் வருகிறது.

யமுனோத்ரி, மதுரா, ப்ருந்தாவனம், புதுதில்லி போன்ற யமுனை பாயும் கரைகளில் 'கும்பமேளா' போல் கொண்டாடுவார்கள். யமுனையில் ஸ்நானம், தானம், சான்றோர்களுக்கு தர்ப்பணம் மற்றும் யமுனா தேவிக்கு பூஜை, ஆரத்தி செய்வது சிறப்பு.

வட பாரதத்தில் 'காட்' என்று நீளமாக விஸ்தார மாகப் படித்துறை அமைந்திருக்கும். இங்கே குளிப்பதற்கும், தர்ப்பணம் செய்வதற்கும் இடங்களும் உண்டு. பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகிக்காமல் நதிக்கரையைத் தூய்மையாகக் காப்பது நம் கடமை. நதியில் நீராடும் போது, முதலில், கைகளால் அந்நீரை எடுத்து தலையில் தெளித்து கொண்டு, கை கூப்பி வணங்கி, பின்னர் நதியில் இறங்கிக் குளிக்கவேண்டும். முதலில், கால்களை நதியில் வைக்கக்கூடாது. குளிக்கும் போது, துப்பவோ, சிறுநீர் கழிக்கவோ கூடாது. நதி நீரில் நன்கு மூழ்கி நீராடி நதியை வணங்க வேண்டும்.

பின்னர், நதிக்கு இலையால் ஆன விளக்கு அல்லது மண் விளக்கு ஏற்றி, மஞ்சள் குங்குமம், மலர்கள் இட்டு நதியில் விடவேண்டும். நதியில் உள்ள மீன்களுக்குப் பொரி போன்ற நல்ல உணவு அளிக்க வேண்டும். பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்து, தம் சக்திக்கு ஏற்றபடி தானம் செய்வது நன்று. படித்துறை இல்லாத இடங்களில் நதியில் இறங்குவதைத் தவிர்ப்பது நல்லது. ஏனெனில், சில இடங்கள் ஆழமாகவும் இருக்கும். யமுனைக் கரையில், மாலை வேளையில் பஜனை, ஆரத்தி களும் நடைபெறும். நதிக்கரையில் தியானம் செய்வதும் சிறந்ததாகும். புஷ்கரத்திற்குச் செல்லும் போது சைவ உணவை உட்கொள்வதும், கிருஷ்ணர் ஆலயங்களுக்குச் செல்வதும் சிறப்பாகும்.

'வ்ரஜ பூமி' என்றழைக்கப்படும் மதுரா, பிருந்தா வனம், கோகுலம், பர்ஸானா போன்ற கிராமங்களில் மிகக் கோலாகலமாகக் கொண்டாடுவர். பல வகையான பூஜைகளும், நிகழ்ச்சிகளும் நடை பெறும். இந்தப் புஷ்கரத்தில் 'பிண்ட ப்ரதானம்' செய்து தம் முன்னோர்களை வழிபட பித்ரு தோஷம் விலகும். யமுனையில் நீராடினால் குல தோஷம், நாக தோஷம், கிரஹ தோஷம், பாப கர்மங்கள் போன்றவையும் தொலைந்து போகும் என்று முன்னோர்கள் கூறுவர். காலை 4–7 மணிக்குள் ஸ்நானம் செய்வது மிகச் சிறப்பு. தீப தானம், கோதானம், அன்னதானம் போன்றவை சிறந்தது. புஷ்கர காலத்தில் ஹரித்வார், யமுனோத்ரி, ப்ரயாக்ராஜ், யமுனாநகர் போன்ற இடங்களில் குடும்பத்தினரோடு காலையில் ஸ்நானம், நண்பகல் தர்ப்பணம், பின்னர் தியானம், மாலையில் ஹாரதி என்று 12 நாட்களும் செய்து மகிழ்வர்.

இவ்வாறு புஷ்கரத்தில் நீராடி, வழிபட்டு, பித்ருக்களுக்கு நன்றி செலுத்தி, ஆசீர்வாதம் பெற்று, தானம் செய்தால் நம் பாபங்கள் நீங்கி, நல்ல ஞானம், செல்வம், ஆரோக்கியம் மற்றும் மோக்ஷம் பெறலாம் என்பது திண்ணம்.

திரு.ஏ.கே.கோபி, கள்ளக்குறிச்சி, 94438 79592.

ஸ்ரீவைகுண்ட கத்யமும் ஆழ்வார்களின் பாசுரங்களும்



போதலர் புன்னை மல்லிகை மௌவல் புதுவிரை
மதுமலரணைந்து
சீதவொண் தென்றல் திசைதொறும் கமழும்
–பெரிய திருமொழி 9–1–3

நிலந்தாவிய எம்பெருமான் தனது வைகுந்தமன்னாய்
கலந்தார் வரவெதிர் கொண்டு வன் கொன்றைகள்
கார்த்தனவே
–திருவிருத்தம் –68

பைம்பொழில் வாழ்குயில்காள்!
மயில்காள்! ஒண்கருவிளைகாள்!
வம்பக் களங்கனிகாள்! வண்ணப்பூவை
நறுமலர்காள்!
– நாச்சியார் திருமொழி 9–4

என்றும் இரவும் பகலும் வரிவண்டிசைபாட
குன்றின்முல்லை மன்றிடை நாறும்
– பெரிய திருமொழி 9–6–9

செவ்வாய்க் கிளி நான்மறைபாடு தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே
–பெரிய திருமொழி 3–2–6

அச்சோலைகளில் ஆங்காங்கே முத்து, பவளம், மாணிக்கங்கள் பதிக்கப்பட்ட படிகளைக் கொண்ட அழகான குளங்கள் பல உள்ளன. அமிர்தத்தின் தன்மையினை ஒத்ததான தெளிவான நீரினால் நிறைந்துள்ள அக்குளங்களில் வண்ணமயமான பல மலர்கள் மிதந்து பரவசப்படுத்துகின்றன. அழகான உயர்ந்த ராஜஹம்சப்பறவைகள் மற்றும் பலவிதமான பறவைகள் அக்குளங்களிலே ஆனந்தத்தோடு நீந்திய வண்ணம் காணப்படுகின்றன. குளங்களின் நடுவிலே முழுவதும் முத்துக்களால் அமைக்கப்பட்ட மண்டபங்கள் பல உள்ளன

எழுந்தன மலரணைப் பள்ளிகொள் ளென்னம்
ஈன்பனி நனைந்தத மிருஞ்சிறகுதறி
– திருப்பள்ளியெழுச்சி 2

செங்காலன்னம் திகழ்தண் பணையில்
பெடையோடும் கொங்கார் கமலத் தலரில்சேரும்
– பெரிய திருமொழி 9–6–2

முன்றில் பெண்ணைமேல் முளரிக்கூட்ட கத்து
அன்றிலின் குரல் அடருமென்னையே
– பெரிய திருமொழி 11–1–6

எம்பெருமான் விளையாடுவதற்காக தனி மண்டபங்களும், பிராட்டிமார்கள் விளையாடுவதற்காக தனியான மண்டபங்களும், எம்பெருமான் பிராட்டிமார்களுடன் விளையாடுவதற்கென்று தனியான மண்டபங்களும், பலவிதமான அலங்காரங்களுடன் புதுமையாக ஆங்காங்கே காணப்படுகின்றன.

அங்கே நவரத்தினங்கள் பதிக்கப்பட்ட ஏராளமான தூண்களையுடைய திருமாமணி மண்டபம் ஒளிவீசி பிரகாசிக்கிறது. பலவண்ண மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட அம்மண்டபத்தில் சுகமான நறுமணம் வீசிக் கொண்டிருக்கிறது. திருமாமணி மண்டபத்தின் நடுவிலே ஆதிசேஷன் படுக்கையிலே பிராட்டிமார்கள் பர்யந்தம்.

திவ்ய ஆபரணங்களுடனும் அலங்காரங்களுடனும் கைங்கர்யம் செய்து கொண்டிருக்க, சர்வ திவ்ய ஆயுதங்களுடனும் பீதகப்பட்டாடையுடனும் வனமாலை திருமார்பிலே தவழ எம்பெருமான் வைகுந்த நாதன் தம்முடைய தாமரைபோன்ற திருமுக மண்டலத்தில் பரமகாருண்யத்துடனே அமிர்தமயமான அருட்பார்வையும் புன்னகையும் ஒளிவீசித் திகழ்ந்து நித்யசூரிகள் புடைசூழ லோக பரிபாலனம் செய்து, அடியார்களுக்கு அந்தமில் பேரின்பம் அருளியவண்ணம் உள்ளதை எம்பெருமானார் திருக்கண்களால் தம்முடைய ஸ்ரீவைகுண்ட கத்யத்தில் ஸ்ரீவைஷ்ணவர்கள் பெற்ற பாக்கியத்தால் அருளிச் செய்துள்ளார்.

ஆதிசேஷன்

மஹதி திவ்ய யோக பர்யங்கே அனந்த போகிநி
ஸ்ரீமந்வைகுண்டஸ்வர்யாதி திவ்யலோகம்

ஸ்ரீவைகுண்டத்திலே எம்பெருமான் நித்ய சூரிகள் சூழ்ந்து கைங்கர்யம் செய்திருக்க திருமாமணி மண்டபத்தில் ஆதிசேஷன் திருப்படுக்கையிலே பிராட்டியரோடு சேவை சாதித்து லோக பரிபாலனம் செய்து அருளுகிறார்.

செங்கமலத் திருமகளும் புவியும் செம்பொன்
திருவடியினிணை வருட முனிவரேத்த
வங்கமலி தடங்கடலுள் அனந்தனென்னும்
வரியரவினணைத் துயின்ற மாயோன்காண்மின்

– பெரிய திருமொழி 7–8–1

அரவரசப் பெருஞ்சோதி அனந்தனென்னும்
அணிவிளங்கு முயர்வெள்ளை யணையைமேவி

– பெருமாள் திருமொழி 1–1–1

பரஞ்சோதி

ஸ்வயா ப்ரபயா அதிநிர்மலயா அதிசீதளா
ஸ்வச்சயாய மாணிக்யாபயா

திருவனந்தாழ்வான் மேலே பள்ளி கொண்டு அருளும் எம்பெருமான் தம்முடைய தேஜஸ் மயமான ஒளியினால் மிகவும் தெளிவாகவும் குளிர்ச்சியுடனும் மாணிக்கம் போல் பிரகாசித்து அனைத்துலகங்களையும் நியமித்தருள்கிறார்.

நதத்ர ஸூர்யோபாதி ந சந்த்ரதாரகம்
நேமோவித்யுதோ பாந்தி குதோஸமக்நி:
தமேவ பாந்தமநுபாதி ஸர்வம்
தஸ்யபாஸா ஸர்வமிதம் விபாதி – கடோபநிஷத்

சர்வேஸ்வரனின் ஜோதிர்மயமான தேஜஸின் அளவில்லா பிரகாசத்தினை நோக்குகையில் சூரியன், சந்திரன், மின்னல், நட்சத்திரங்கள், அக்னி பெற்றுள்ள பிரகாசம் ஒன்றுமேயில்லை. அவை எல்லாம் பரம்பொருளின் தேஜஸின் ஒளியிலிருந்து பெறும் ஒரு சிறு அம்சத்தினாலே பிரகாசிக்கின்றன.

பரஞ்சோதி நீபரமாய் நின்னிகழ்ந்து பின் மற்றோர்
பரஞ்சோதி இன்மையாலே படியோவி நிகழ்கின்ற
பரஞ்சோதி நின்னுள்ளே படருலகம் படைத்த எம்
பரஞ்சோதி கோவிந்தா பண்புரைக்கமாட்டேனே

– திருவாய்மொழி 3–1–2

ஆயர் கொழுந்தாய் அவரால் புடையுண்ணும்
மாயப் பிரானை என் மாணிக்கச் சோதியை

– திருவாய்மொழி 1–7–6

குழுமித் தேவர்குழாங்கள் தொழச் சோதி
வெள்ளத்தின் உள்ளே
எழுவதோருரு என்னெஞ்சுள்ளெ முமார்க்கு
மறிவரிதே

– திருவாய்மொழி 5–5–10

யந்மங்கலாய மஹதே ஜகதா முசந்தி
த்ரைவிஷ்ட பாந்யபி பதாநி யதாச்ரயாணி
வந்தாமஹே ஸரஸிஜேஷண மத்விதீயம்
வேதாந்த வேத்யம் அநிதம் ப்ரதமம் மஹஸ்தத்

– கூரத்தாழ்வான், ஸ்ரீவைகுண்டஸ்தவம்–4

வேதாங்கங்களினால் அறியப்படுவதும், மங்கலத்தை அளிப்பதும், தாமரை போன்ற திருக்கண்களைக் கொண்டதுமான தேஜஸாக எம்பெருமான் திருக்காட்சி தந்தருளுகிறான்.

திருமேனி

ப்ரத்யோக்ரோந் மீலித ஸரஸிஜ ஸத்ருஸ
நயநயுகளம் ஸ்வச்ச நீல ஜீமுத சங்காஸம்
அத்யுஜ்ஜ்வல பீதவாஸஸம்

எம்பெருமானின் திருக்கண்கள் அன்றலர்ந்த தாமரை மலரினைப் போன்று மிகவும் குளிர்ச்சியாக

உள்ளது. அவனின் திருமேனியானது ஆகாயத்தின் வெளிர்நீல ஒளிகொண்டு பிரகாசிக்கிறது. அவன் திருமேனியில் சாற்றியுள்ள பீதகப் பட்டாடையானது கண்கள் கூசும் விதமாக ஒளிவீசுகிறது.

திருமுக மண்டலம்

முக்த அம்புஜசாருலோசனம் ஸ விப்ரமப்ரூலதம்
உஜ்ஜ்வல அதரம் ஸுசிஸ்மிதம்தேகாமளகண்டம்
உந்நஸம்

எம்பெருமான் வில்லினைப் போன்ற வளைந்த அடர்த்தியான புருவங்களின் கீழே அன்றலர்ந்த தாமரையினை ஒத்த திருக்கண்களையும், எடுப்பான திருமூக்கினையும், மென்மையான கன்னங்களையும், அழகான செவ்வாய் உதடுகளில் தூய்மையான புன்முறுவலையும் கொண்டவனாய்த் திகழ்கிறான்.

கோலநீள் கொடி மூக்கும் தாமரைக்கண்ணும்
கனிவாயும்
நீல மேனியும் நான்கு தோளும் என் நெஞ்சம்
நிறைந்தனவே

– திருவாய்மொழி 5–5–6



ததஸ்த்ரித$_3$ண்டீ$_3$ ஸ சிகே$_2$ாபவீத
காஷாய யுக்தோ மநுரத்நஜாபீ
வர்ணாச்ரமாசார பரச்சகாசே
ராமாநுஜார்யோ யதிஸார்வபௌ$_4$ம: ॥

(51)

அதற்குப்பின், யதிகட்கிறைவரான இராமாநுஜர் த்ரிதண்டத்தையுடையவராய், சிகை, யக்ஜோபவீதம், காஷாயம் ஆகியவற்றோடு கூடியவராய், மந்த்ர ரத்னமான துவயத்தை அனுசந்திப்பவராய், வர்ணாச்ரமாசாரங்களின்படி நடப்பவராக விளங்கினார்

– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது

கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து
செவ்வரியோடி நீண்டஅப்
பெரியவாய கண்கள் என்னைப் பேதைமை
செய்தனவே

– அமலனாதிபிரான் 8

தொக்கச்சோதித் தொண்டைவாயும் நீண்ட
புருவங்களும்
தக்க தாமரைக்கண்ணும் பாவியேன் ஆவியின்
மேலனவே

– திருவாய்மொழி 5–5–5

குண்டு நீருறை கோளரீ மதயானை கோள்
விடுத்தாய் உன்னைக்
கண்டு மாலுறுவோங்களை கடைக் கண்களால்
இட்டு வாதியேல்

– நாச்சியார் திருமொழி 2–3

முற்றத்தூடு புகுந்து நின் முகம் காட்டிப்
புன்முறுவல் செய்து
சிற்றிலோடு எங்கள் சிந்தையும் சிதைக்கக்
கடவையோ கோவிந்தா

– நாச்சியார் திருமொழி 2–9

ப்ரூவிப்ரமேண ம்ருது சீதவிலோகிதேந
மந்தஸ்மிதேந மதுராஷரயா ச வாசா
ப்ரேமப்ரகர்ஷ பிசுநேந விகாஸிநா ச
ஸம்பாவ இஷ்யஸி கதா முகபங்க ஜேந

– கூரத்தாழ்வான், ஸ்ரீவைகுண்டஸ்தவம் 69

தேவரீருடைய அழகான திருப்புருவங்கள் நெளியும் படியாக திருக்கண்களால் குளிர நோக்கி புன்முறுவல் செய்து தேவரீர் திருவுள்ளத்திலே அடியேன் பொருட்டு பெருக்கெடுக்கும் அளவற்ற கருணையின் மேலீட்டினால் மதுரமான வார்த்தைகள் வெளிப்படுவதான தேவரீரின் ஆனந்தமயமான திருமுக மண்டலத்தின் பிரகாச காந்தியினை அடியேனுக்குத் தரிசனமாகத் தந்தருள வேண்டும்.

திருவாபரணங்கள் :

அதிமநோஹர கிரீடமகுட சூடா அவதம்ஸ
மகரகுண்டல க்ரைவேயக ஹார கேயூர கடக
ஸ்ரீவத்ஸ கௌஸ்துப முக்தாதம உதர பந்தன
பீதாம்பர காஞ்சீகுண நூபுர ஆதிபி: அத்யந்த
ஸுகஸ்பர்ஸை: திவ்யகந்தை பூஷணை: பூஷிதம்
ஸ்ரீமத்யா வைஜயந்த்யா வநமாலயா விராஜிதம்

எம்பெருமான் சிரசிலே மிகுந்த அழகுடனே கிரீட மகுடமும் சூடாமணியும், காதுகளில் தோடும் மகரகுண்டலமும், கழுத்திலிருந்து மார்புவரை நீண்டதான ஹாரமும், தோள்களிலே கேயூரம் வளையாபரணமும், திருக்கரங்களிலே கடகம் என்கிற வளையல்களும், மார்பின் நடுவிலே ஸ்ரீவத்சம் என்கிற மச்சமும், நீலமணிகளாலான கௌஸ்துபமும், முத்துமாலையும், இடுப்பிலே பீதாம்பரமும் உதரபந்தநமும், அரைஞாண்கயிறும், கால்களிலே நூபுரம் எனப்படும் சிலம்புகளையும் தரித்துக் கொண்டு, நறுமணம் வீசும்படியாகவும் அணிந்து அலங்கரித்துக் கொண்டு வைஜயந்தி மலர் மாலையுடன் திருவாபரணங்கள் அனைத்தும் அழகாகவும் திருக்காட்சி தந்தருளுகிறான்.

மின்னி ஒளிபடைப்ப வீழ்நாணும் தோள்வளையும்
மன்னிய குண்டலமும் ஆரமும் நீள்முடியும்
துன்னு வெயில் விரித்த சூளாமணியிமைப்ப
மன்னு மரகதக் குன்றின் மருங்கே

– பெரிய திருமடல்

ஒதக்கடலின் ஒளிமுத்தின் ஆரமும்
சாதிப்பவளமும் சந்தச் சரிவளையும்

– பெரியாழ்வார் திருமொழி 1–3–6

கச்சொடு பொற்சுரிகை காம்பு கனவளை
உச்சி மணிச்சுட்டி ஒண்தாள் நிரைப்பொற்பூ

– பெரியாழ்வார் திருமொழி 1–3–8

மின்னு நூலும் குண்டலமும் மார்வில் திருமறுவும்
மன்னு பூணும் நான்கு தோளும் வந்தெங்கும்
நின்றிடுமே

– திருவாய்மொழி 5–5–2

சிலம்பும் செறிகழலும் சென்றிசைப்ப விண்ணா
றலம்பிய சேவடிபோய்

– மூன்றாம் திருவந்தாதி 90

உடையார்ந்த வாடையன் கண்டிகையன் உடை
நாணினன்
புடையார் பொன்நூலினன்,பொன்முடியன்
மற்றும் பல்கலன் நடையாவுடைத் திருநாரணன்

– திருவாய்மொழி 3–7–4

தேட்டரும் திறல் தேனினைத் தென்னரங்கனைத்
திருமாதுவாழ்
வாட்டமில் வனமாலை மார்வனை வாழ்த்தி

– பெருமாள் திருமொழி 2–1

வைகுண்ட தரிசனம் தொடரும்...

கீழோர்க்கு அஞ்சேல்

புதிய ஆத்திசூடி 16



கீழோர் என்றால் கீழ்த்தரமான குணமுடையவர்கள், ஒழுக்கத்தில் கீழானவர்கள், மோசமான நடத்தை உடையவர்கள் என்றுதான் பாரதி குறிப்பிடுகிறாரே தவிர ஏழை எளியவர் என்றோ, வாழ்க்கைத் தரத்தில் கீழானவர்கள் என்றோ குறிப்பிடவில்லை. ஒழுக்கத்தில் கீழானவர்கள் எவ்வளவு பெரிய செல்வந்தராயினும், எவ்வளவு அதிகாரத்தில் உள்ளவராயினும், உடல் வலிமை பெற்றிருப்பவராயினும் அவர்களது பலத்தைப் பார்த்து அஞ்சக் கூடாது, பயப்படக் கூடாது என்கிறார்.

பாதகம் செய்பவரைக் கண்டால் நீ பயங்கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா

என்று சீறிச் சொல்கிறார். தீமையைக் கண்டு அஞ்சாமல், அவசியமே நேர்ந்தாலும் கூட ஒழுக்கக் கேடானவர்களுக்கு நாம் துணை போகக் கூடாது. நயவஞ்சகர்கள், பொய்யர்கள், துரோகிகள், ஏமாற்றுபவர்கள் கூட்டத்தை விரட்டியடிக்க வேண்டிப் பாடுகிறார் பாரதி.

"வஞ்சகர், தீயர், மனிதரை வருத்துவோர் நெஞ்சகத்தருக்குடை நீசர்கள் இன்னோரை வெம்மை யோடொருத்தல் வீரர் தம் செயலாம்" என்று குறிப்பிடுகிறார். *"வில்லினை எடடா – கையில் வில்லினை எடடா அந்தப் புல்லியர் கூட்டத்தைப் பூழ்தி செய்திடடா"* என்று வில்லினை எடுத்து கீழோர் கூட்டத்தை ஒழித்துக் கட்டுமாறு கண்ணன் அர்ஜுனனுக்குக் கூறுவதாக நமக்குக் கூறுகிறார். பாஞ்சாலியைக் கொடுமைப் படுத்தியவர்களைக் கூறுபோடாமல் *"நெட்டை மரங்கள் என நின்றார்கள்"*, *"பொட்டைப் புலம்பல் புலம்பினர்"* என்று பாரதி பாண்டவர்களைச் சாடுகின்றார். ஆகவே குழந்தைகளே அநீதியைக் கண்டு பயப்படாமல் நீதிக்குத் தலை வணங்குங்கள்.

- டாக்டர் கவிஞர் இரா. உமா பாரதி, சென்னை, மகாகவி பாரதியார் வம்சாவளி, 73389 97938



மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

தெலுங்கு மூலம் :
பேராசிரியர் கே.சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் :
டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

சென்ற மாத இதழின் தொடர்ச்சி...

வைகுண்டத்தை விடுத்து மகாலட்சுமித் தாயார் சென்று விட்டதால் ஸ்ரீமந்நாராயணன் லட்சுமி தேவியின் இதயத்தில் தான் இருந்து கொண்டு, அந்த லட்சுமியைத் தவறாமல் என் இதயத்தில் வைத்துக் கொள்வேன் என்று எண்ணினார். பிறகு வைகுண்டத் தில் இருந்து வேங்கடாத்திரிக்கு வந்து சேர்ந்தார் என சூதர் விவரித்தார். சௌனகாதி முனிவர்கள் வேங்கடாத்திரியின் மேல் விஷ்ணு எந்த மனநிலையில் இருந்து வந்தார் என வினவினர். அவர்களுடைய ஆவலை அறிந்து மகிழ்ந்து சூதர், முனிவர்களே! ஸ்ரீ வராக ஸ்வாமி புஷ்கரணிக்கு தெற்குப் புறத்தில் ஒரு புளிய மரத்தின் அடியில் இருந்த புற்றினில் ஸ்ரீ ஹரி மறைந்து தியானத்தில் இருந்தார். ஸ்வாமி பூலோகத் திற்கு வந்த காரணத்தால் சோழ அரசு மிகவும் வளம் பெற்று விளங்கியது. பருவம் தவறாமல் மழை பொழிந்து நல்ல விளைச்சல் கிடைத்தது. குடும்ப உறவுகள் மேம்பட்டுச் சிறப்பாக விளங்கியது. பெற்றோர் மீது பக்தியுள்ள பிள்ளைகள் பிறந்தார்கள்.

கொல்காப்பூரில் இருந்த லட்சுமி தன் பதியான ஹரி பூலோகத்தில் வேங்கடாத்திரியில் உள்ள மரத்தடியில் புற்றில் தியானத்தில் உள்ளார் என்பதை அறிந்து வருத்தப்பட்டாள். எனக்காக ஸ்வாமி வைகுண்டத்தை விடுத்து புற்றிலே பசியோடு வாடி வருந்துகின்றாரே! இப்படிப்பட்ட நிலையில் நான் அங்கு சென்றால் நிச்சயம் ஸ்வாமி என்னை ஏற்றுக் கொள்வார் என சிந்திக்க, மறுபுறம் என் முடிவை நான் மாற்றிக் கொள்ள மாட்டேன் என்ற பிடிவாதத்தோடு இருந்தார்.

அப்போது லட்சுமி தேவியின் மனநிலையை அறிந்த பிரம்மா பசு வடிவமும், ருத்ரர் கன்றின் வடிவமும் தாங்கி லட்சுமி தேவியின் முன்பு வந்து நின்றனர். பசுவும் கன்றுமாக வடிவம் தாங்கி வந்துள்ள பிரம்மா ருத்ரரின் மனதைப் புரிந்து கொண்ட லட்சுமிதேவி அவைகளைப் பிடித்துக் கொண்டு சோழ அரசனின் அந்தப்புர வீதியில் பசுவையும் கன்றையும் விற்கலானார்.

அப்பொழுது அரசி அந்த பசு கன்றினைப் பார்த்து விருப்பப்பட்டு அவற்றை வாங்கிக் கொண்டாள். அத்துடன் அவைகளை தங்களிடம் உள்ள மாடுகளோடு சேர்த்து பார்த்துக் கொள்ளும் படி பசு மேய்ப்பாளருக்கு ஆணை பிறப்பித்தாள்.

பிரம்மா ருத்ரர் பசு கன்றுகளாக மாறி இருப்பதினால் இனி அவர்கள் மூலமாகவே புற்றில் தியானம் செய்து கொண்டிருக்கும் ஹரியைப் பார்த்துக்கொள்ளச் செய்வேன். இனி எனக்கு அவரைப் பற்றிய கவலை இல்லை என்று சொல்லி தான் புறப்பட்டு வந்த இடத்திற்குச் சென்றுவிட்டார்.

அதன் பிறகு பிரம்மாவின் அம்சமான அப்பசு மற்ற மாடுகளுடன் சேர்ந்து மேய்ச்சலுக்குச் சென்று விட்டு வேங்கட கிரியில் ஒரு புற்றில் தியானத்தில் அமர்ந்திருக்கும் ஹரிக்கு தானாகவே புற்றில் பாலைச் சுரந்தது. ஸ்வாமியின் பசியைப் போக்கியது. பாலினை அளித்த பிரம்மா ருத்ரரின் உதவியை நினைத்து ஹரி மகிழ்ந்தார்.

ஒரு நாள் அரசி தான் புதியதாக வாங்கிய பசுவின் பாலை தன் குழந்தைகளுக்குக் கொடுக்க விரும்பினாள். அதற்கேற்ப கோபாலகன் பசு கன்றினை அந்தப்புரத்திற்கு அழைத்து வந்தான். அப்பசுவிடமிருந்து பால் கறப்பதற்கு முயற்சிக்கும் போது பால் சுரக்கவில்லை. இதைக் கண்ட ராணி பால் மடி பார்த்தால் நிறைந்து காணப்படுகிறது. ஆனால் பால் மட்டும் வரவில்லையே என ஆச்சரியப்பட்டாள். சில நாட்கள் காத்திருந்தும் பால் சுரக்கவே இல்லை. உடனே கோபாலகனை அழைத்து "கோபாலகா! குடம் போல் மடி இருந்தும் பால் சிறிதும் சுரக்காமல் இருப்பது என்ன? காட்டில் உன் பசிக்காகப் பாலைக் கறந்து குடித்து விடுகிறாயா என்ன? என்று கேட்டாள். அதற்கு அம்மா தங்கள் மீது சத்தியம் நான் அவ்வாறு செய்ய வில்லை. ஒரு வேளை கன்று பாலைக் குடித்து விட்டதோ என்னவோ! என்றான்.

அதற்கு அரசி என்ன? இங்கு வீட்டில் இருக்கும் கன்று பால் குடித்தது என்கிறாயா? பொய் கூறு கின்றாய் என்று கோபத்தோடு கூறினாள். அதன் பிறகு கோபாலகனைக் கட்டிப்போட்டு அடித்து பின்பு எச்சரித்து அனுப்பி வைத்தாள். கோபாலகன் அழுது கொண்டே அரசி தன்னிடம் ஒப்படைத்த அந்த பசுவின் பின்னாலேயே சென்றான். பசு வேங்கட கிரியில் ஸ்ரீஹரி இருந்த புற்றின்மீது தன் மடியை வைத்து அதில் பாலைச் சுரந்தது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த கோபாலகன் கோபம் கொண்டு கையில் இருந்த கோடாரியை எடுத்து அப்பசுவைத் தாக்கச் சென்றான்.

அச்சமயத்தில் புற்றிலிருந்த விஷ்ணு மூர்த்தி வெளியில் வந்து பசுவின் மீது விழ இருந்த அந்த அடியைத் தடுக்கச் சென்றார். அப்போது கோடரி ஹரியின் நெற்றியில் பட்டு ரத்தம் பீறிட்டு வந்தது. இதைக் கண்ட கோபாலகன் அச்சத்தினால் அங்கேயே விழுந்து இறந்து போனான்.

இக்காட்சியைக் கண்ட பசு சேஷாத்ரி மலையில் இருந்து இறங்கி சோழ அரசனான பூபதி அரண் மனைக்குச் சென்றது. அங்கே கண்ணீர் விட்டு அழுது புரண்டது. அதைக் கண்ட பூபதி அங்கிருந்த சேவகர் களை அழைத்து அதற்குண்டான துன்பத்தை அறிந்து வருமாறு அப்பசுவின் பின்னே அனுப்பி வைத்தான்.

பெருமை அறிவோம்...

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

திருமலையில் பக்தர்களுக்கு தடைவிதிக்கப்படுவன

- திருமலையில் புகைபிடித்தல், போதை தரும் பொருட்கள், மாமிச உணவுப்பொருட்கள் உட்கொள்வதற்கு முழுமையாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
- எம்பெருமான் தரிசனம் மற்றும் தங்கு வசதிக்காக தளாலிகளை அணுகாதீர்கள்.
- தெருவில் விற்கும் போலி பிரசாதங்களை வாங்காதீர்கள்.
- பிச்சைக்காரர்களை உற்சாகப்படுத்தாதீர்கள்.
- கோயில் வளாகத்திற்குள் துப்புதல் போன்ற செயல்களைச் செய்யாதீர்கள்.
- பிற மத பிரசாரம் செய்யாதீர்கள்.
- பல்வேறு வகையான அரசியல் கூட்டங்கள், சுவரொட்டிகள், போராட்டங்கள், கடை அடைப்புகள் முதலானவைகளுக்கு திருமலையில் தடைவிதிக்கப்பட்டுள்ளன.
- விலங்குகள் வதை செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
- திருமலையில் சூதாட்டம், சீட்டாட்டம் முதலானவைகளுக்கு முழுமையாகத் தடை விதிக்கப்பட்டுள்ளன.
- கோயிலுக்குள் அலைபேசி, புகைப்படக்கருவி முதலான மின்னணுக்கருவிகளை எடுத்துச் செல்லவும், ஆயுதங்களைக் கொண்டு செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

– செயலாட்சித் தலைவர்



புராண வரலாறு:

தானாக தோன்றியது நைமிசாரண்யம். பார்வதிக்கு பரமேச்வரன் கூறுகிறார்:

ஒரு காலத்தில் சௌனகர் முதலான ரிஷிகள் பிரமனிடம் சென்று, யாகம், தானம், தவம் முதலான புனிதச் செயல்களைச் செய்வதற்கு ஏற்ற சிறந்த தலம் எது? என்று கேட்க, பிரமன் தர்ப்பைப்புல்லால் ஒரு சிறிய சக்கரத்தை உருவாக்கி தனது தவ ஆற்றலால் அதற்குச் சக்தியைக் கொடுத்து, அதனை உருளச்செய்து, அது எந்த இடத்தில் வீழ்கிறதோ, அந்த இடமே மேற்கூறிய புனிதச் செயல்களைச் செய்வதற்கு ஏற்ற தலம் என்று கூற, அவ்வாறு அந்தச் சக்கரம் வீழ்ந்த இடமே நேமிசம் என்று பெயர் பெற்றது. நேமி என்றால் சக்கரம். சக்கரம் வீழ்ந்த இடம் காடாக அமைந்தமையால் (நேமி வீழ்ந்த இடம்) நைமிசாரணியம் என்று பெயர்பெற்றது.

இன்னொன்றும் சொல்வர்.

ரிஷிகளின் வேண்டுகோளின்படி பிரமன், அவர்களிடம் வான்வழியாகச் செல்லும் ஒரு விமானத்தைக் கொடுத்து, அந்த விமானத்தின் சக்கரம் விழும் இடமே புனிதமான இடம் என்று கூற. அவ்வாறு வீழ்ந்ததாலும், நைமிசாரண்யம் என்று பெயர் பெற்றது.

அலகந்தா நதிக்கரையில், சக்கரம் வீழ்ந்ததால், அந்த நதிக்கரையே புனிதம் பெற்றது. சக்கரம் வீழ்ந்த இடத்தில் பெரும் பள்ளம் ஏற்பட்டு, அதில் ஊற்றெடுத்த நீர் சக்கர தீர்த்தம் என்று பெயர் பெற்றது. இந்தத் தீர்த்தத்தில் நீராடினால், மிகப் பெரும் பயன்களைப் பெறலாம்.

இத்தலத்தில் எம்பெருமான் காடு வடிவாகவே காட்சி அளிக்கிறான். ஒருமுறை பிரமதேவன் எம்பெருமானிடம் தான் பெற்ற வேதங்களை எல்லாம் ஹயக்ரீவன் என்ற அசுரனிடம் பறிகொடுத்து பகவானை வேண்ட, பகவான் வேதவியாசரின் அவதாரம் நிகழ இருப்பதைக் குறிப்பிட்டு, அவரால் பிரமனின் துன்பம் நீங்கும் என்று அருளினார். அதன்படி வேதவியாசர் அவதரித்து, இங்கு வந்து, இங்கே வேதங்களை நான்கு பிரிவாகப் பகுத்தார்.

இத்தலத்தில் வேதவியாசர் 18 புராணங்களையும், 5ஆம் வேதமான பாரதத்தையும் இயற்றி வேதக் கருத்துகள், குறைந்த அறிவுடைய மனிதர்களுக்கும் நன்கு விளங்குமாறு செய்தார்.

வியாசரின் புதல்வரான சுகாச்சாரியாரின் பெருமையை உணர்ந்த பரீட்சித்து சுகப்ரம்மத்தை இத்தலத்தில் சந்தித்து இத்தலத்தைப் போற்றி, சுகரை நோக்கி, "ஒருவன் நன்னிலை அடைவதற்குச் செய்ய வேண்டியது யாது" என்று கேட்டான்.

அதற்கு சுகர் துருவன் இத்தலத்தில் தவம் செய்து, பகவானின் கிருபையைப் பெற்றதாகவும், மது என்ற மன்னன் இங்கே தவம் செய்து அயோத்திக்கும் அரசனாகும் பேறு பெற்றதாகவும், ரிஷிகள் இங்கு "தீர்க்கச்சத்ரம்" என்ற யாகத்தைச் செய்து, மகாபாரதத்தை உபதேசமாகப் பெற்றதையும், சக்கரவர்த்தித் திருமகனாகிய இராமன், இத்தலத்தில் பத்து அசுவமேத யாகங்கள் செய்து பயன்பெற்றதாகவும், கிருதயுகத்தில் பகவான் இங்கு தவம் செய்த கயாசுரனை அழித்து, அவன் உடலை



99 திருநைமிசாரண்யம் (நிம்ஸார்)

- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

மூன்று துண்டுகளாகச் செய்து, கயா, பதரி, நைமி சாரண்யம் என்று மூன்று இடங்களில் ஒவ்வொன்றை யும் எறிந்து, கயா, பதரி போன்று நைமிசாரணியத்தி னையும் பிதிர்க்கடன் செய்யும் இடமாக உயர்த்திய தாக தமிழ்த்திவ்யசூரி சரித ஆசிரியர் கூறுகிறார்.

சிறப்புகள்

திருமங்கை ஆழ்வாரால் பத்துப்பாசுரங்களில் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற பெருமை உடை யது. ஸ்ரீ அஹோபில மடம் 43 வது பட்ட ஸ்ரீமத் அழகிய சிங்கர் (தேவனார் விளாகம் ஸ்ரீமத் அழகிய சிங்கர்) சஞ்சாரமாக இங்கு வந்த போது, இங்கேயே தன் பூத சரீரத்தை விடுத்துப் பரமபதித்தார். இவருடைய பிருந் தாவனம் மிக ஆச்சர்யமாக நிர்வகிக்கப்படுகிறது.

பெருமாள்	: தேவராஜப் பெருமாள் (ஸ்ரீஹரி) (கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம்)
தாயார்	: ஸ்ரீ ஹரி லக்ஷ்மித்தாயார் – புண்டரீக வல்லித் தாயார்.
விமானம்	: ஸ்ரீ ஹரி விமானம்.
தீர்த்தம்	: சக்கர தீர்த்தம், கோமுகி நதி, நேமி தீர்த்தம் (கோமதி தீர்த்தம் என்பர்), திவ்ய விச்ராந்தி தீர்த் தம் (திவ்ய சாந்தித் தீர்த்தம் என் றும் கூறுவர்)
தலவிருக்ஷம்	: தபோவனம்
பிரத்யக்ஷம்	: இந்திரன், அதர்மன். சந்திரன், தேவரிஷி, வேத வியாசர், சூத புராணிகர்
மங்களாசாஸனம்	: திருமங்கையாழ்வார்

விசேஷம்

திவ்ய சூரிசரித ஆசிரியர் கூறுகிறார்:

வனத்தினுள் சூத புராணிகன்
முகமாய், அறம் எலாம்
வண்தவம் இழைக்கும் முனித்திரள் கேட்ப
மொழிந்து அருள் எந்தை

என்று புராணங்கள் தோன்றியதற்கும் இத்தலத்து எம்பெருமானே காரணம் என்கிறார். வியாசர் இங்கு புராணங்கள் இயற்றிதை எடுத்துக்காட்டும் முறை யில், "வியாஸகட்டை" என்னும் இடத்தில், கோயில் உள்ளது. அவரும் சுகாச்சாரியரும். இங்கே புராணங்களை மற்றவர்க்கு எடுத்துக் கூறி, பாரதம், பாகவதம் முதலியவற்றை இயற்றியதாகக் கூறுவர்.

நைமிசாரண்யத்தின், ஒரு பகுதியில், சுகரின் மிகப்பெரிய வெண்கலச்சிலை இங்கு வழிபடப் பெற்று வருகிறது. இக்கோயிலை, 'புராண மந் திர்' என்று வழங்குவர். இவ்வூரில், இராமாயணத் தொடர்பைக் காட்டும் முறையில். மிகப் பெரிய அனுமனின் வடிவம், இராமனையும், இலக்குவனை யும் தமது இரு தோள்களிலும் தாங்கிய நிலையில் விளங்குவது குறிப்பிடத்தக்கது. இவ்விடத்தை "ஹநுமான் கட்டை" என்று வழங்குவர்.

திவ்ய தேச வாழ்த்துப் பாசுரம்

உயிர் தொறும் உளனாய் வேதத்து உச்சியில்
நிறைந்து துய்ய கயம் அழைத்திடு முன்னே
எய்திக் கராவினை வதைத்து, வேதன் அயம் உறு
கடிலன் ஆகண்டலனுடன் அமரர் போற்ற
நயமிசாரணியத்து எய்து நாரணன் கழல்கள் வாழி

தியானச்லோகம்:

ஸ்ரீமந் நைமிச காநநேதுபகவாந் ஸ்ரீதேவராஜோ
ஹரி:।
லக்ஷ்மீ சோபிச சாந்தி தீர்த்த நிகடஸ்தாயீ
விமாநே ஹரௌ।।
தத்ரேந்தோர் வரத: ஸுரேந்திர ஹரிதம் ஸம்வீக்ஷ்ய
மாணோபவத் தேவேந்த்ரம் நரகாத் த்ரஸந்தமதிகம்
ஸம்ரக்ஷிதா ரக்ஷது
(ஸ்ரீ விஷ்ணு ஸ்தலாதர்சம்)

பாசுரம்:

ஊனிடைச் சுவர் வைத்து, என்பு தூண் நாட்டி,
உரோமம் வேய்ந்து, ஒன்பது வாசல், தான்
உடைக் குரம்பைப் பிரியும் போது, உன்றன்
சரணமே சரணம் என்று இருந்தேன், தேன்
உடைக் கமலத் திருவினுக்கு அரசே !
திரைகொள் மாநெடுங்கடல் கிடந்தாய்,
நானுடைத் தவத்தால் திருவடி அடைந்தேன்,
நைமிசாரணியத்துள் எந்தாய்

– திருமங்கையாழ்வார்

ஓர் அறிவும் இல்லாத என்போல்வார்க்கு
உய்யலாம் பேரறிவு உண்டேனும் பிறர்க்கு
அரிது - பார் அறிய நைம்மிசாரண்ணியத்து
நாதர் அடியாரோடு இம்மி சார்வுண்டாயினால்

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் பாசுரம்



15. நாமாக்கள்

933. *ஓம் அநந்தஶ்ரீ:நம:*

அளவற்ற செல்வங்களை உடையவன்.

ஓம் இந்த்ராணீ:நம:

இந்தி ராணிக்கு ஆத்மாவாக இருப்பவள்.

934. *ஓம் ஜிதமந்யு:நம:*

கோபத்தை வென்றவன்.

ஓம் லக்ஷ்மீ:நம:

பகவான், அநிருத்தனாகும் போது பெரிய பிராட்டியாராகத் தோன்றுபவள்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

பக்தர்களின் கவனத்திற்கு...

- திருமலைக்குச் செல்லும் மலைவழிப்பாதையில் வாகனத்திலோ, நடந்தோ செல்லும் பக்தர்கள் தேவை அற்ற குப்பைகளை அதற்கான குப்பைத் தொட்டிகளில் மட்டுமே போடுங்கள். கண்ட இடங்களில் தூக்கி எறியாதீர்கள்.
- வனவிலங்குகள் வனத்தில் சுதந்திரமாகத் தமது உணவுகளைப் பெற்றுக்கொள்ளும். ஆகையால் திருமலை வழிப்பாதையில் வனவிலங்குகளுக்கு உணவை அளிக்காதீர்கள்.
- காடு என்பது அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானது. எனவே காட்டினைப் பாதுகாத்து அடுத்தத் தலைமுறையினருக்கும் நாம் பாதுகாத்து அளித்திட வேண்டும்.

935. *ஓம் பயாபஹ:நம:*

பக்தர்களின் பயத்தைத் தீர்ப்பவன்

ஓம் மேதா:நம:

ஜ்ஞானஸ்வரூபிணி

936. *ஓம் சதுரஸ்ர:நம:*

பக்தர்களுக்காக எல்லாவற்றையும் செய்பவன்

ஓம் ச்ரத்தா:நம:

சாத்விக ச்ரத்தையை அளிப்பவள்

937. *ஓம் கபீராத்மாநம:*

அறிய இயலாஸ்வரூபன்

ஓம் ஸரஸ்வதீ:நம:

வாக்குக்கு அதிதேவதையாக இருப்பவள்

938. *ஓம் விதிஸ:நம:*

ஸ்தோத்ரங்கட்கு எட்டாதவன்

ஓம் ஸ்வதா:நம:

பித்ருக்களின் தேவியான ஸ்வதாவுக்கு ஆத்மாவாக இருப்பவள்

939. *ஓம் வ்யாதிஸ:நம:*

விரும்புவோர்க்கு விரும்பும் பலனை அளிப்பவன்

ஓம் ஸ்வாஹா:நம:

அக்னி தேவியான ஸ்வாஹாவுக்கு அந்தர்யாமிநீ

940. *ஓம் திஸ:நம:*

தேவர்கட்குக் கட்டளை இடுபவன்

ஓம் ரதி:நம:

மன்மதனின் பார்வையான ரதிக்கு ஆத்மாவாக இருப்பவள்.

ஶ்ரீமதே ஶ்ரீஹரிலக்ஷ்மீ புண்டரீகவல்லீ நாயிகா ஸமேத ஶ்ரீ தேவராஜ (ஶ்ரீஹரி) பர ப்ரம்மணே நம:

குறிப்பு:

லக்னௌ பாலமு ரயில் பாதையில் சாண்டிலா என்கிற ஸ்டேஷனில் இருந்து வடக்கே 40 கி.மீ தொலைவில் இந்த ஆலயம் அமைந்துள்ளது.

திவ்ய தேச வைபவம் தொடரும்...



யோகமும் தியானமும் அவசியமா!

திருமதி சரோஜா ஜனகராஜ், கோயம்புத்தூர்,
89409 91234

யோகா என்பது ஆரோக்கியமான உடலுடனும், ஆரோக்கியமான மனத்துடன் வாழும் ஒரு கலை ஆகும். தனிமனித ஆற்றல் முழுமையாக மலர உதவுவது யோகா ஆகும். உடல், மனம், ஆன்மா என்னும் இம்மூன்று பகுதிகள்தான் மனிதன். இம்மூன்றையும் இணைத்து சமநிலையில் வைக்க உதவுவதே யோகா.

பண்டைய காலங்களில், மனிதர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர். அவர்கள் மனதுக்கும் உடலுக்குமிடையே நெருக்கமான ஒரு புரிதல் இருந்தது. எனவே மனம் ஒன்றுபட்ட போது உடலை வளைப்பதும் முறுக்குவதும் எளிதாக இருந்தது. அவர்களைப் பொறுத்தவரை, யோகா என்பது நோய்களை அகற்று வதற்கான ஒரு வழிமுறையாக மட்டும் இன்றி, உடல், சுற்றுப்புறம் இரண்டையும் சுகாதாரமாக வைத்திருந்தாலும் கூட, யோகா மூலம் சிந்தனை செயல் முறையைத் தூய்மையாகவும் சுத்தமாக வும் வைத்திருக்க முடியும் என்பதை உணர்ந்திருந்தார்கள். தற்கால நவீன வாழ்க்கை முறையில், மன அழுத்தம், உடல் உழைப்பின்மை மற்றும் ஆரோக்கிய மற்ற உணவு பழக்கங்களால் ஏற்படும் நோய்களைத் தடுக்க யோகா மிகவும் அவசியமாகிறது. இது உடல், மனம் மற்றும் ஆன்மீகத்தை இணைக்கும் ஒரு கலை என்றும் கூறலாம்.

இன்றைய அவசர உலகத்தில் ஏற்படும் பதற்றம், பயம், சோர்வு மற்றும் மன அழுத்தத்தைக் குறைத்து மன அமைதியைத் தருகிறது. உடல் எடையைச் சீராக வைப்பது, வளர்சிதை மாற்றத்தை அதிகரிப்பது மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்துகிறது. முதுகு வலி, மூட்டு வலி போன்ற பிரச்சனைகளுக்குத் தீர்வாக அமைகிறது, உடல் வளைவுத்தன்மை மற்றும் வலிமையை அதிகரிக்கிறது. தூக்கமின்மை பிரச்சனையைப் போக்கி, நிம்மதியான உறக்கத்தைத் தருகிறது. கோபம், சோம்பல் போன்ற எதிர்மறை உணர்வுகளைக் கட்டுப்படுத்தி, நேர்மறையான மன நிலையை உருவாக்குகிறது.

நம்முடைய பெருமைமிகுந்த பாரம்பரியம் தந்திருக் கும் விலைமதிப்பற்ற பரிசு யோகாவாகும். மனதையும், உடலையும், சிந்தனையையும், செயலையும், நிதானம், திருப்தி, இயற்கைக்கும் மனிதனுக்குமான ஒத்திசைவு ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது.

யோகாவும் இளைஞர்களும்

ஆரோக்கியமான வாழ்க்கைக்கான ஒரு கலையாக வும், அறிவியலாகவும் யோகா பார்க்கப்படுகிறது. ஆரோக் கியமாக இருக்க விரும்பும் ஒவ்வொருவருக்குமானது யோகா. நோய்களில் இருந்து விலகி இருக்க விரும்பும் அனைவருக்குமானது யோகா. உள்ளார்ந்த திறன்களை யும், தன்னம்பிக்கையையும் பெருக்கிக்கொள்வதற்கு யோகா ஒரு சிறந்த வழியாகும். இதனை வாழ்க்கை முறையில் செய்து கொள்ளப்படும் ஒரு மாற்றம் என்று சொல்லமுடியும்.

இளைய சமுதாயத்திற்கு யோகா அவசியமாகும். இளைஞர்கள் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் ஏராளமான சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். யோகா நிச்சயமாக அவர்களுக்கு ஒரு மடைமாற்றாக இருக்கும். உண்மையான யோகி அன்றாடம் எழக்கூடிய சவால்களைத் திறம்படக் கையாளக் கூடியவராக இருப்பார். உடல், மனம், சமூகம், தார்மீகம், ஆன்மீகம்

ஆகிய அனைத்துக் கூறுகளிலும் ஆளுமையை வளர்த்து எடுக்க யோகா அமைகிறது. மனிதனை ஒரு புதிய ஆளுமையுடன் அது உருவாக்குகிறது. முழு அமைப்பி லும் மாற்றங்களை உருவாக்கி, கவனத்தை ஒருமுகப் படுத்தி, அமைதியை மிகுவித்து, அமைதியாகவும் சலனமின்றியும் இருக்கச் செய்கிறது. தற்கால தினசரி வாழ்க்கைக்கு யோகா மிகவும் அவசியமானதாகும்.

யோகா தற்போது உலகத்தின் கவனத்தை ஈர்த்து உள்ளது. பல்வேறு விதமான வாழ்க்கைப் பாதைகளில் பயணிப்போருக்கும் யோகா பற்றிய விழிப்புணர்வு அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. நலத்தை மேம்படுத்தி அதனைப்பாதுகாப்பதற்கு மட்டுமில்லாமல் பல்வேறு விதமான நோய்களை தடுப்பதற்கும் இந்த விழிப்புணர்வு உதவுகிறது. பதஞ்சலி முனிவர் அஷ்டாங்க யோகத்தை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம் மற்றும் சமாதி என வகைப்படுத்தினார். இதனை திருமூலர் திருமந்திரத்தி லும் விவரித்து உள்ளார்.

ஆசனங்கள்

உடல் அங்கங்களை நீட்டி மடக்கி ஆசனங்களைக் குறிப்பிட்ட நிலைகளில், குறிப்பிட்ட தோற்றப் பாங்குக ளில் செய்வது உடலையும் மனதையும் நிலைபடுத்துவ தற்கு உதவக்கூடியது. தசைநார்களின் பொதுவான தொனியை நிலைநிறுத்துவது ஆசனங்களின் நோக்கம் ஆகும். அங்கஸ்திதிகளின் செயல்பாட்டை ஆளுகை செய்வது உடல் மட்டுமல்ல மனம், நரம்பு ஆகியவற்றின் இயக்கமும் ஆகும். ஆசனங்களை மிகுந்த சிரமப்படாமல் சௌகரியமான முறையில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தொடர்ந்து செய்துவர வேண்டும்.

யோகாவில் மூச்சுப் பயிற்சி (பிராணாயாமம்) என்பது நுரையீரலை வலுப்படுத்தி, மனதை அமைதிப் படுத்தி, பிராண சக்தியை (உயிர் ஆற்றல்) அதிகரிக்கும் அடிப்படை நுட்பமாகும். சுவாசம், நாடி சுத்தி மற்றும் பஸ்திரிகா போன்றவை முக்கிய பயிற்சிகளாகும். தினமும் 5–10 நிமிடங்கள் ஆழமான மூச்சுப் பயிற்சி செய்வது மன அழுத்தத்தைக் குறைத்து, நுரையீரலின் திறனை மேம்படுத்தும்

தியானம் செய்ய சிறப்பான இடமோ அல்லது கடினமான பயிற்சிகளோ தேவையில்லை. தினமும் 10–15 நிமிடங்கள் ஒதுக்கி, அமைதியான இடத்தில் அமர்ந்து இந்த எளிய முறைகளைப் பின்பற்றலாம். வசதியாக அமர்ந்து கண்களை மூடிக் கொள்ளுங்கள். உங்கள் சுவாசம் உள்ளே போவதையும், வெளியே வருவதையும் கவனியுங்கள். மூச்சை மாற்ற முயற்சி செய்யாதீர்கள். இயல்பான சுவாசத்தை மட்டும் கவனியுங்கள். எண்ணங்கள் சிதறினால், மீண்டும் கவனத்தை சுவாசத்திற்கு கொண்டு வாருங்கள். உங்களுக்கு முன்னால் ஒரு நெய் விளக்கு அல்லது மெழுகுவர்த்தி ஒளியை வையுங்கள். அந்த ஒளியின் மீது கவனத்தை நிலை நிறுத்துங்கள். கண்களுக்குச் சிரமம் ஏற்பட்டால் கண்களை மூடிக்கொண்டு, அந்த ஒளியை உங்கள் புருவ மத்தியில் காட்சிப் படுத்துங்கள்.ஏதாவது அமைதியான இசை அல்லது 'ஓம்' மந்திரத்தை ஒலிக்கவிட்டு, அந்த ஒலியை மட்டும் கவனித்து தியானம் செய்யுங்கள்.

யோகாவைத் தொடர்ந்து பயிற்சி செய்து வந்தால் நமது நடத்தையிலும், மனப்பாங்கிலும் சாதகமான மாற்றங்கள் ஏற்படும். யோகா பயில்பவர் அவரது வீட்டிலும், சமூகத்திலும் மனித உறவுகளை மேம்படுத்திக்கொள்ள முடிகிறது. உலகம் முழுவதிலும் நடைபெற்ற பல்வேறு ஆராய்ச்சிகளின் மூலம் யோகாவிற்கு மருத்துவ ரீதியிலான குணங்களும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. உடற்செயலியல், மனம் தொடர்புடைய குறைபாடுகள் உட்பட வாழ்க்கை முறையோடு தொடர்புடைய பல்வேறு குறை பாடுகளைத் தவிர்ப்பதற்கும், சமாளிப்பதற்கும் இருக்கும் இதன் வலிமை தான் யோகா இன்று பிரபலமாக இருப்பதற்கு காரணம்.

ஒரு தேசத்தின் வளர்ச்சி அந்நாட்டு மக்களின் ஆரோக்கியத்தின் மீதுதான் அமைந்து இருக்கிறது. ஒரு தேசத்தில் உள்ள இளைஞர்கள் சிறப்பாகவும், வலிமையாகவும் இருந்தால் தேசத்தின் ஆரோக்கியமும் நன்றாக இருக்கும். அந்த தேசம் நீண்ட தொலைவிற்கு சோர்வின்றிப் பயணிக்கவும் முடியும். எனவே இளைஞர்களின் ஆரோக்கியம் என்பது அதீதமான முக்கியத்துவம் உடையதாகிறது.








ஜ்யேஷ்டாபிஷேக உத்ஸவத்தில்...
திருமலையப்ப ஸ்வாமி வைர அங்கி சேவை
26-06-2026



ஜ்யேஷ்டாபிஷேக உத்ஸவத்தில்... திருமலையப்ப ஸ்வாமி முத்து அங்கி சேவை 27-06-2026















ஜ்யேஷ்டாபிஷேக உத்ஸவத்தில்...

திருமலையப்ப ஸ்வாமி தங்க அங்கி சேவை

28-06-2026





25-04-2026 முதல் 27-04-2026 வரை திருமலையில் நடைபெற்ற ஸ்ரீபத்மாவதி ஸ்ரீஸ்ரீநிவாச பரிணயோத்ஸவ மஹோத்ஸவம் திருக்காட்சிகள். இப்பரிணயோத்ஸவத்தில் பங்கு கொண்ட தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. எம். ரவிச்சந்திரா ஐ.ஏ.எஸ். அவர்கள், கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு. சி.எச். வெங்கையா சௌத்ரி ஐ.ஆர்.எஸ். அவர்கள் மற்றும் தி.தி.தே. அதிகாரிகள்



23-04-2026 அன்று திருப்பதி ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமிக்கு புனர்பூச நட்சத்திரத்தில் நடைபெற்ற புஷ்பயாக மஹோத்ஸவத் திருக்காட்சி



25-04-2026 அன்று கடப்பா மாவட்டம், ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி ஆலயத்தில் "சீதா ஜெயந்தி" சிறப்பாக கொண்டாடப்பட்ட போது



23-04-2026 அன்று திருமலையில் இராமானுஜருக்கு நடைபெற்ற கந்தப்பொடி உத்ஸவத் திருக்காட்சி



28-04-2026 அன்று திருவேங்கடமுடையானை தரிசித்த மேதகு இந்திய துணைக் குடியரசுத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு ஸ்வாமி சித்திரப்படத்தை வழங்கும் தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் உடன் தி.தி.தே. உயர் அதிகாரிகள்

- திரு.தாமல் வங்கீபுரம் சடகோபன், சென்னை.

இறைவனை வாழ்த்தினார் வரம் வேண்டாத பெரியாழ்வார்

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரையில் ஆழ்வார்கள் முதல் இடம் பெறுகின்றனர். அவர்களுக்கு எம்பெருமான் மயர்வற மதிநலம் அருளினன். அந்நலத்தால் அறிவு முதிர்ந்து பக்தி ஆகி அவ்வுணர்வை அவர்கள் எதிர் பொங்கி மீதளிப்ப என தியானத்தின் மிகுதியாலே வெளியிட்டு அருளியவையே அருளிச்செயல் ஆயிற்று என மேலோர் திருவுள்ளம் ஆனது பற்றியே மற்ற ரிஷிகள், முனிவர்கள், கவிகள் போலன்றி ஆழ்வார்கள் சுய முயற்சியால் செய்யாது ஈச்வர கருணையால் பெற்ற அறிவு, அநுபவம் இரண்டும் என்பது விசேஷம்.

இவர்களில் பெரியாழ்வார் மற்றவர்கள் போன்றவர் அல்லர். ஆழ்வார்கள் அனைவரும் எம்பெருமான் கருணையினால் மட்டுமே விசேஷ கடாக்ஷம் பெற்று அநுபவமும் அடைந்தனர். அவர்கள் அந்த அநுபவத்துக்குப் போக்குவீடாக பிரபந்தங்களை நம் போல்வார் உய்வதற்காக அருளினர். எனினும் அவர்கள் எம்பெருமானிடம் ஆத்ம சமர்ப்பணம் பண்ணி, ஸ்வரூபம் நிறம் பெற மிகவும் விழைந்தனர். ஆனால் பெரியாழ்வார் அவ்வாறன்றி தொடக்கம் முதலே எம்பெருமானிடம் ஸ்வரக்ஷணம் அல்லது தன் ஆத்ம உய்வு பற்றி வேண்டினாரல்லர். மாறாக எப்போதும் எம்பெருமான் மங்கலத்தையே விரும்பி வேண்டியிருந்தார். அவ்வளவன்றி எம்பெருமான் ஸ்வரூப ரூபங்களுக்கு ஹானி, தீங்கு நேரக்கூடாது என்ற பதைப்பும், அச்சமும் கொண்டு அதையே தம் பாசுர விஷயம் ஆக்கினார்.

அருளிச்செயலை அற்புதமாயும், அபூர்வமாயும் விளக்கி வரும் நம் ஆசார்யர்களில் தனிச்சிறப்புடையோர் பிள்ளை லோகாசார்யரும் அவர்தம் திருத்தம்பியாரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும் ஆவர். இவர்கள் மங்களாசாசனம் பற்றித் தரும் விளக்கங்கள் மிக்க சுவை உடையன.

பாண்டிய அரசரின் பரத்துவம் பற்றிய ஐயத்துக்குத் தெளிவு தர எம்பெருமான் வடபெரும் கோயில் உடையானுக்குப் புஷ்ப கைங்கர்யம் செய்துவந்த விஷ்ணுசித்தர் கனவில் சென்று, அந்த ஐயம் தீர்க்க அமைக்கப்பட்ட வித்வத் ஸதஸ்ஸில் நீர் சென்று நம் பரத்துவத்தை நிலைநாட்டும் என்று கட்டளை இட, விஷ்ணுசித்தர், அந்த அறிஞர் குழாத்தில் வேத வேதாந்த பரிசயமற்ற அடியேன்



எப்படிப் போவேன், மலர் மாலை தேவரீருக்கு ஸமர்ப்பிப்பது ஒன்றே அறிவேன் என்றார். அது உமக்குப் பாரமோ, நாமன்றோ வேதார்த்தத்துக்குக் கடவோம் என்று பெருமாள் நிர்பந்திக்க, ஆழ்வாரும் மதுரை மாநகர் எழுந்தருளி, அங்கு வித்வான்கள் ஆக்ஷேபிக்க, செல்வ நம்பி ஸமாதான உரைக்குப் பின் ஸகல வேதவேதாந்த இதிஹாஸ புராணங்களையும் விசதமாக தாழாதே சார்ங்க மழைபோல் எடுத்துரைத்து திருமால் மேன்மையை அனைவரும் ஏற்கப் பண்ணினார்.

இவ்வாறு பெரியாழ்வார் பெருமாளைக் கண்டதும் தமக்கு ஏதும் வேண்டாது, அவனது அழகு சௌகுமார்யத்துக்கு ஒரு ஹானி வரக்கூடாது என்ற அச்சத்திலேயே பாடியதை மாமுனிகள் *''பொங்கும் பரிவாலே வில்லிபுத்தூர் பட்டர்பிரான் பெற்றான் பெரியாழ்வார் என்னும் பெயர்''* என்று ஏத்துகிறார்.

மாமுனிகள் உபதேசரத்தின மாலையில் பெரியாழ்வார்க்கு மட்டுமே ஐந்து பாசுரங்கள் இட்டார். ஆழ்வார்களின் பக்தஜனங்கள் அனைவரின் தலைவர் நம்மாழ்வார்க்கும் இரண்டே பாசுரங்கள் என்பது உய்த்துணரத்தக்கது. இவ்வாறு பெரியாழ்வார்க்கு தனிச் சிறப்பு ஏற்பட அவர் எம்பெருமானை மங்களாசாசனம் செய்வதையே இறுதிப்பயனாகக் கருதி அதிலேயே ஊற்றமாய் இருந்தார்.

இவ்விஷயத்தை, ஸ்ரீவசனபூஷண சாஸ்திரத்தில் பிள்ளை உலகாசிரியர், 'அவர்கள் எல்லாரையும் போலல்லர் பெரியாழ்வார். அவர்களுக்கு இது (மங்களாசாசனம்) காதாசித்கம் (எப்போதாவது உள்ள அநுஷ்டானம்); இவர்க்கு இது நித்யம்' என்று தெளிவுபடுத்துகிறார். மேலும், உணர்வில், 'அவர்களுடைய ஆழங்கால் தானே இவர்க்கு மேடாயிருக்கும்' என்று ஆழ்வார்கள் மற்றவர்கள் எல்லாரையும் விடப் பெரியாழ்வாரின் இறையன்பு, பரிவு மிகமிக ஆழமானது என்று காட்டினார். ஆனது பற்றியே மாமுனிகளும் *''மங்களாசாசனத்தின் மற்றுள்ள ஆழ்வார்கள் தங்கள் ஆர்வத்தளவு தானன்றி பொங்கும் பரிவாலே வில்லிபுத்தூர் பட்டர்பிரான் பெற்றான் பெரியாழ்வார் என்னும் பெயர்''* என்று பெரியாழ்வார் பகவானிடம் காட்டியது பரிவு, பொங்கும் பரிவு என்றும் விசேஷித்து விளக்கினார்.

இவ்விஷயத்தை உலகாசிரியர், 'பய நிவர்த்தகங்களுக்குப் பயப்படுவது, ப்ரதி கூலரையும் அநுகூலர் ஆக்கிக்கொள்ளுவது, அதீத காலங்களில் அபதானங்களுக்கு உத்தர காலத்திலே வயிறெரிவது, ப்ராப்தி பலமும் இதுவே என்பது, அநிமிஷரைப் பார்த்து 'உறகல் உறகல்' என்பதாய்க் கொண்டு இதுதானே யாத்ரையாய் நடக்கும்' என்று அருளிச் செய்தார்.

கிருஷ்ண லீலைகளை அநுபவித்துப் பாடும் பெரியாழ்வார் அக்குழந்தைக்குத் தீங்கிழைக்க ஒவ்வோர் அசுரன் வரும் போதும் கிருஷ்ண விஜயத்தைப் புகழும்போதே இப்படிப்பட்ட ஆபத்தில் தப்பினாயே என்று வாழ்த்துகிறார். எல்லாம் துவாபர யுகத்தில் நடந்தது ஆயினும் இவர் தம் காலம் என்பது மறந்து, வாழ்த்துவார். திருஷ்டி கணிப்பால், கண்ணன் பற்றிக் குறைகள் சொல்லும் ஆய்ச்சியரைக் கடிந்து கொள்வார். அவதார நிலை தாண்டி அர்ச்சையில் பாடும்போதும் பரிவார். பரத்வம் பாடினாலும் பதைப்பும் பரிவும் உண்டு. பெரியாழ்வார் திருமொழி இறுதிப் பதிகம் 'சென்னி ஓங்கு'விலும் இதைக் காணலாகும்.

சேதனனுக்கு ஸ்வரூபம் ரக்ஷியமாய் (காக்கப் படுபவதாய்) இருத்தல், பெருமாளுக்கு ஸ்வரூபம் ரக்ஷகனாய் இருத்தல். உலகாசிரியர் இதை விளக்குகையில், *''ஜ்ஞான தசையில் ரக்ஷக ரக்ஷக''* "பாவம் தன் கப்பிலே கிடக்கும்; பிரேம தசையில் தட்டு மாறிக் கிடக்கும்" என்று அருளிச் செய்தார். அதாவது, அவன் ஸ்வரூபத்தை அநுஸந்தித்தால் அவனைக் கடகாகக் கொண்டு(பாதுகாப்பாகக் கொண்டு) சேதனன் தன்னைக் காத்துக்



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

வாகன ஓட்டுனர்களின் கவனத்திற்கு...

- திருமலைக்கு சொந்த வாகனத்தில் வரும் பக்தர்கள் கூடுமானவரை ஓட்டுனர்களுக்குப் போதிய ஓய்வினை அளித்திடுங்கள். வாகன ஓட்டுனர்களின் பாதுகாப்பே நமது பாதுகாப்பாகும்.
- மலைவழிப்பாதையில் வாகனங்களை ஓட்டும் போது கவனமாகச் செயல்படவும். பிற வாகனங்களை முந்திச் செல்லாதீர்கள்.
- அனைவரும் கட்டாயமாக சீட் பெல்டை அணியுங்கள்.
- திருமலைக்கு இருச்சக்கர வாகனத்தில் வருபவர்கள் தலைக்கவசத்தை அணியுங்கள். தலைக்கவசமே உயிர் கவசமாகும்.

கொள்வான். அவன் அழகு, மென்மை, மேன்மைகளைக் கருதினால் தன்னை அவனுக்குப் பாதுகாவலனாக நினைப்பான். பிள்ளை திருநரையூர் அரையர் என்னும் ஆசார்யர் தமிழ்நாட்டில், திருச்சி மாவட்டத்தில், தொட்டியம் வட்டத்தில், காவிரி ஆற்றின் கரையில் அமைந்துள்ள புகழ்பெற்ற வைணவத் தலமான தொட்டியம் வேத திருநாராயணப் பெருமாளை வேற்று மதத்தினர் தீ இட்டுப் பொசுக்க முனைந்த போது, தாமும் தம் மனைவி மக்களும் பெருமாள் மேல் விழுந்து கவிழ்ந்து தம் உயிரை விட்டு, பெருமாளைக் காக்க முனைந்தது இப்பரிவினால்.

முன்பு நடந்த அபாயங்களுக்கு இப்போது அஞ்சுவது, கண் மூடி உறங்க முடியாத ஆதிஸேஷனை 'உறகல் உறகல்' எனத் தூங்காது இருக்கச் சொல்வது எல்லாம் பெரியாழ்வார் பெருமாளுக்குக் காட்டிய பரிவின் வெளிப்பாடே.

உலகாசிரியர், 'ப்ராப்தி பலமும் இதுவே' என அருளியது அற்புதம். ஆழ்வாருக்கு வைகுந்த வானாடோ பிறவாமையோ அன்று இந்த ப்ரேம ஸமாதிகளே பிராப்தி பலம் என்கிறார்.

பெரியாழ்வார் திருமொழி இறுதிப் பதிகம் சென்னி ஓங்குவில் ''மருப்பொசித்தாய்! மல்லடர்த்தாய்! என்றென்று உன் வாசகமே உருப்பொலிந்த நாவினேனை உனக்கு உரித்தாக்கினையே!'' என்று கிருஷ்ணாவதார சேஷ்டிதங்களை நினைவு கூர்ந்து இனியராகிறார் உலகாசிரியர், 'அல்லாதார்க்கு ஸத்தா ஸம்ருத்திகள் தர்சன, அநுபவ, கைங்கர்யங் களாலே; இவர்க்கு மங்களாசாசனத்தாலே' என ஸாதிக்கிறார்.

ஆழ்வார்கள் பிறர் தம்தாம் அநுபவ, ஆனந்த, பேற்றுக்காக எம்பெருமானைப் போற்றினர். சிறு கைங்கர்யமாவது கொடு என்று வேண்டினர். இவரோ "எல்லாம் எம்பெருமானை வாழ்த்தவே" என்று இருந்தார்.

திருப்பல்லாண்டு பல சுருதியில், வைகுந்தம் சென்று சேர்ந்தும் ''பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்து ஏத்துவர் பல்லாண்டே'' என அங்கும் அவனை வாழ்த்துவதே பயன் என அறுதியிட்டார்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.



82. ப்ரபந்ந காயத்ரி என்ற பெயர் கொண்ட திவ்ய ப்ரபந்தம் எது?

இராமானுச நூற்றந்தாதி.

83. ஸ்வாமி வரவரமுனிகளின் நித்யாநுஷ்டான வைபவத்தை விரிவுபடுத்தி பூர்வதினசர்யை, உத்தர தினசர்யை என்ற க்ரந்தங்களை அநுக்ரஹித்த விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம் செய்தவர் யார்?

எறும்பியப்பா என்னும் தேவராஜ குரு.

84. முதன்முதலாக ஸ்ரீபாஷ்ய வ்யாக்யானத்தை அருளிய ராமாநுஜர் சிஷ்யர் யார்?

ஸோமாசியாண்டான் முதன்முதலான வ்யாக்யானம் அனுக்ரஹித்தார். பிற்காலத்தில் ஸுதர்ஸநஸூரி என்னும் சுருதப்ரகாசிக பட்டர் என்ற ஆசார்யர் ஸ்ரீபாஷ்யத்துக்கு விசேஷமான வ்யாக்யானம் க்ருபை செய்தார்.

85. எம்பெருமானார் தர்சன ஸம்ப்ரதாயத்தில் நடமாடும் மஹாபாஷ்யம் என்று கொண்டாடப் படும் ப்ரபந்ந திவாகரர் யார்?

ஸ்வாமி கூரத்தாழ்வான்.

86. காஞ்சீபுரத்தில் யாதவப்ரகாசனிடம் வித்யா ப்யாஸம் செய்யும் சமயத்தில் பெரிய நம்பிகள் மூலமாக அனுஸந்திக்கப்பட்ட ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில் இளைய ஆழ்வாருக்கு ப்ரேரணை உண்டு பண்ணிய சுலோகம் எது?

ஸ்தோத்ர ரத்னம் 11வது சுலோகம் – ஸ்வாபாவிகாநவதிகாதிசயே...

– தெலுங்கில் : கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே.நடாதூர் பாஷ்யாசார்ய ஸ்வாமி, ஸ்ரீபெரும்பூதூர்.
தமிழாக்கம் : திருமதி குமுதா வரதராஜன், சென்னை.

சென்ற இதழின் தொடர்ச்சி...

(உலகுக்கோர் தஞ்சமென உதித்தருள்வோன்) நாராயணன் நரனோடு சேர்ந்தது போல் ராமாநுஜ முனிவர் தமக்குச்சீடராக ஆன அனந்தாழ்வானோடு சேர்ந்து முறைப்படியே சாஸ்த்ரார்த்த உபதேசத்தையும், அனுட்டானத்தை யும் தம் விருப்பத்தின்படியே நிறைவேற்றிக் கொண்டு வந்தார். ராமாநுஜருடைய உபதேசத்தைக் கேட்டு அதற்குச் சேரும்படி சாஸ்த்ரார்த்தங்களை முறைப்படியே ஊற்றத்துடன் ஆசரித்து வரும் அனந்தாழ்வானிடமும் பலர் சீடரானார்கள். பின்பு அனந்தாண்பிள்ளை ஆசாரியர் என்று நாற்றிசையும் பரவும் பெயருடையவரானார்.

திருவேங்கடவனே ஸ்ரீவைஷ்ணவ பிரம்மசாரியாய் வேடம் தரித்து திருமலைக்கு வரும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அனந்தாழ்வான் பெருமையை நிலைநாட்ட அவர்களிடம் அனந்தாழ்வானின் குணப் பெருமை பற்றி ஆத்மாக்களுக்கு இருக்க வேண்டிய நற்பண்புகள் அனைத்துக்கும் இடமாய் இருப்பவராய், அறியாமை ஆகிய இருளை அகற்றுமவராய், தம்மைப்பற்றிய சீடர்களுக்கு உயர்ந்த தஞ்சமாய் இருப்பவர் அனந்தாழ்வான் என்றும், ஸ்ரீராமாநுஜருடைய திருவடித் தாமரைகளுக்கு இணையானவரும், அது காரணமாக நல்லோர்களால் தலைக்கு அணியாக தரிக்கப்படுமவரான அனந்தாழ்வான் என்றும் அருளியது காண்க. உலகுக்கோர் தஞ்சமென தோன்றிய இத்தகைய ஆசார்யருக்குப் பல்லாண்டு பாடுவோமாக.

(உலகுண்ட மாலடியை உகந்து உய்ந்தோன்) ''உலகமுண்ட பெருவாயா'' (6-10-1) என்று நம்மாழ்வார் அருளியபடியே பிரளயத்தில் உலகங்களை உண்ட ஸர்வேச்வரனான திருவேங்கடவனின் திருவடிகளில் உகந்து வந்து கைங்கர்யம் செய்து உய்ந்தவர் அனந்தாழ்வான். எவ்வாறெனில் - ஒரு சமயம், இராமாநுசர் ஸ்ரீரங்கத்தில் நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழியில் "எந்தை...சிந்து பூ மகிழும் திருவேங்கடத்து ....அண்ணலே" (3-3-2) என்ற பாசுரத்துக்கு விளக்கம் அளித்து வந்தார்.

தமது கோஷ்டியில் உள்ளவர்களை அழைத்து, ஆரியர்காள்! பரமபதத்திலுள்ள நித்யஸூரிகளும் தங்கள் தலைவரான ஸ்ரீஸேனைமுதலியாருடன் கூட இங்குப் பெருமாள் திருவாராதனத்துக்குத் திவ்யமான புஷ்பங்களைக் கையில் ஏந்தி வந்து இத்திருமலையில் உள்ள பகவானுடைய எல்லை இல்லாத வாத்ஸல்யம், ஸௌசீல்யம் முதலான குணங்களை அனுபவித்து அதனால் உண்டான ஆனந்தத்தினால் இத்திருமலை பகவானுக்கு மிக்க திருமுக மலர்த்தியை உண்டாக்கித்



அப்பிள்ளை அருளிய
ஆழ்வார் ஆசார்யர்கள்
வாழித் திருநாமமும் உரையும்

திருமலை அனந்தாழ்வான்

தொண்டு செய்ய ஏற்ற இடம் ஆகையால் திருவேங்கடமுடையான் முக மலர்த்திக்காக நந்தவனம் ஒன்றினை நிருமித்து நறுமணம் மிக்க மலர்களாலும், திருத்துழாயினாலும் மாலைகளைத் தொடுத்து ஸமர்ப்பித்துக் கைங்கர்யம் செய்ய விரும்புமவர்கள் யாரேனும் இக்கோஷ்டியில் உளரோ? என்று எல்லாப் பெரியவர்களையும் இராமாநுசர் வினவினார்.

அங்கு பெரியோர் கோஷ்டியில் யாரும் திருமலைக் குளிருக்கு அஞ்சி பதிலளிக்காமல் இருந்தனர். அக்கோஷ்டியில் இருந்த அனந்தாழ்வான் பெருமானுக்கு அடியவனானவன், அல்பமான இக்குளிருக்கு அஞ்சி நடுங்கலாமா. பரமபதம் கிடையாமல் போகுமே என்ற பயத்தாலும், எல்லை அற்ற நற்குணங்கள் நிறைந்த ஆசார்யருடைய ஆணையை மீறுவதனால் உண்டாகும் பயத்தாலும் சிறிதேனும் நடுங்க வேண்டாமா. இதுதானா சீடனுக்கு உரிய லக்ஷணம். இது மிகவும் நன்றாயிருக்கிறது.

ஆசார்யர் நியமித்த காரியம் அன்றோ உய்வு பெற விரும்பும் சீடனுக்கு மேன்மையைத்தருவது என்று எல்லாம் தன் மனத்தில் சிந்தித்து உடனே எழுந்து நின்று கைகூப்பிக்கொண்டு, ஸ்வாமீ எம்பெருமானாரே! அடியேன் திருவேங்கடமுடையானுக்குப் புஷ்ப கைங்கர்யம் செய்ய ஸித்தமாய் இருக்கிறேன். அடியேனை நியமித்தருள வேணும் என்று தம்முடைய அவதாரத்துக்குப் பயனாகிய கைங்கர்யத்தில் ஊற்றத்தை விண்ணப்பித்தார்.

இராமாநுசரும் மிகவும் மகிழ்ச்சி அடைந்து அனந்தாழ்வானை கொண்டாடி அணைத்துக் கொண்டு நீரே ஆண்பிள்ளை என்று கௌரவித்து அவரைத் திருமலைக்கு அனுப்பினார். அவரும் மனைவியோடு திருமலைக்குச் சென்று திருவேங்கடவனைத் தினமும் சேவித்துக் கொண்டு, விசாலமான ஒரு நந்தவனமும், அதற்கு நீர் பாய்ச்ச உதவும் ஓர் ஏரியையும், நடைவாவியும் உண்டாக்கி, புஷ்ப கைங்கர்யம் முதலான பல தொண்டுகள் செய்து வந்தார். திருவேங்கடவன் திருவடியை உகந்து உய்ந்தார் என்பது வரலாற்று மாலை வழி அறியலாம். அத்தகைய அனந்தாழ்வான் பல்லாண்டு வாழ்க.

(இலகு சித்திரைதன்னில் சித்திரையோன்)

இலகுதல் – விளங்குதல் – சிறப்பாயிருத்தல். சித்திரைக்குச் சிறப்பாவது தமிழ் மாதங்களில் முதல் மாதமாகும். சித்திரை நக்ஷத்ரமும் பௌர்ணமியும் சேர்ந்து வந்தது சித்திரை மாதமாகும். இராமன் சித்திரை மாதத்தில் பிறந்தான். இதுபற்றியே *"சைத்ர பௌர்ணமாஸ்யஸ்மிந்''* என்கிறார் வால்மீகி. இராமனுக்கு பட்டாபிஷேகம் செய்வதற்காகக் குறித்த மாதமும் சித்திரை.

இதுபற்றியே தசரதன் *"சைத்ர ஸ்ரீமாந் அயம் மாஸ:''* என்கிறபடியே இந்த சித்திரை மாதமானது மிகச் சிறந்தது என்கிறார். அப்படிப்பட்ட மாதத்தில் ஆழ்வார்களில் மதுரகவியாழ்வாரும், ஆசார்யர்களில் இராமாநுசரும், முதலி ஆண்டானும் மற்றும் ஸோமாஸியாண்டானும் இம்மாதத்தில் அவதரித்தனர். இத்தகைய பெருமை பெற்ற மதுரகவி அவதரித்த திருநக்ஷத்ரத்தில் அனந்தாழ்வான் அவதரித்தது சிறப்புடையதாகும். வசந்த காலத்தில் சித்திரை மாதம் நேர்பட்டாப் போலே சித்திரை நக்ஷத்ரமும் நேர்பட்டது என்பர். சித்ரா நக்ஷத்ரம் பவதி என்று ச்ருதி சொல்லுகிற படியே சித்திரை நக்ஷத்ரமானது சிறப்பானது. அத்தகைய சித்திரையில் அவதரித்தவராகையாலே "சித்திரையோன்'' எனப்பட்டார். அவருக்குப் பல்லாண்டுப் பாடுவோமாக.

(எந்தை எதிராசர் இணையடியோன்)

யதிகளுக்குத் தலைவரான இராமாநுசர் நம்முடைய இருப்பு, வளர்ச்சி முதலானவற்றுக்கு எல்லாம் காரணமாய், யதிகள் யாவரிலும் மேம்பட்டிருப்பவர். அவர் ஸந்யாஸ ஆச்ரமம் மேற்கொள்ளும்போது தேவப்பெருமாள் இட்ட பெயர் எதிராஜர். அவருடைய திருவடிகள் அழகு முதலானவற்றால் பூர்ணமாயிருந்து எல்லாராலும் பற்றப்படுமதானது. இரண்டு தாமரைப்பூவை நிறைத்து வைத்தாப் போலே இருக்கிற சேர்த்தி பற்றி இணையடி என்றும், அவரைப்பற்றினவர் அனந்தாழ்வானாகையாலே "இணையடியோன்" என்று வழங்கலாயிற்று.

ஒரு சமயம் சில ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமலை யாத்ரைக்கு வரும்போது வழியில் திருவேங்கடவன் ஒரு ஸ்ரீவைஷ்ணவ பிரமசாரியாய் வந்து புளியோரை பிரசாதத்தைக் கொடுத்தபோது அவர்கள் அவனை யாருடைய சிஷ்யன் என்று கேட்டனர். அவனும்

திருமலை அனந்தாழ்வான் என்னும் ஆசார்யரின் சிஷ்யன் என்று சொல்ல, அவர்கள் ஆசார்யர் தனியனைக்கேட்டனர். *''அகிலாத்ம...''* என்ற தனியனைச்சொல்ல, அதில் ஆசார்யர் பெயர் இல்லாமையால் மேலும் அவர்கள் வினவினர்.

அப்போது திருவேங்கடவனான அந்த பிரமசாரி *''ஸ்ரீமத் ராமாநுஜாசார்ய ஸ்ரீபாதாம்போருஹத்வயம், ஸதுத்தமாங்க ஸந்தார்யம் அனந்தார்யமஹம் பஜே''* என்ற தனியனைச்சொன்னபடியே ஸ்ரீராமாநுஜ ஆசார்யருடைய திருவடித்தாமரை இணையானவர் என்று திருவேங்கடவன் தாமே இட்டருளிய தனியனுடையமெய்ம்மையினால் அனந்தாழ்வானுக்கு இராமாநுசருடைய திருவடித் தாமரையாம் தன்மை சொல்லப்பட்டது. இது பற்றியே "எதிராசர் இணை அடியோன்" என்றபடி. அத்தகைய அனந்தாழ்வானுக்குப் பல்லாண்டு.

(அலர்மேல் மங்கை திருவுக்கு அப்பனார்) பாத்மபுராணத்தில் கூறியபடியே பிருகு முனிவர் திருமாலின் திருமார்பை உதைத்ததினால் கோபம் கொண்ட திருமகள் வைகுந்தத்தை விட்டு பாதாள உலகம் சென்று சேர்ந்தாள். அங்கு வாசம் செய்யும் கபில முனிவர் திருமகளுக்குக் கோவில் கட்டி ஆராதனை நடத்தி வந்தார். இதை அறிந்த திருமால் பன்னிரண்டு வருடங்கள் தவமிருந்து பதிமூன்றாம் ஆண்டில் கார்த்திகை மாதம் சுக்லபக்ஷம் பஞ்சமி திதி வெள்ளிக்கிழமை உத்ராட நக்ஷத்ரம் அன்று மைத்திரம் என்ற முஹூர்த்தத்தில் அத்தாமரைத் தடாகத்தின் நடுவே ஒளித்திரட்சி ஒன்று தோன்றியதைக் கண்டார்.

அதன் நடுவில் பொற்றாமரை மலர்களால் நிருமிக்கப்பட்ட உயர்ந்ததோர் தேர் தென்பட்டது. அத்தேரினில் ஆயிரம் இதழ்கள் பொருந்தியதோர் தாமரை மலர் போன்ற திருக்கண்களும், செந்தாமரைப்பூப்போன்ற இருபாதங்களும், கமல மலரின் மணம் வீசுகின்ற திருவாயும், கோவைக் கனி போன்ற உதடுகளும், புன்சிரிப்பும் தானுமாய்ப் பலவகை ஆபரண, பீதாம்பரங்கள் அணிந்து நறுமணம் மிக்க செங்கழுநீர் மலர்மாலையைக் கழுத்தில் அணிந்து கொண்டு தோன்றினாள் அலர் மங்கையான திருமகள். அத்தகைய திருமகளுக்கு தகப்பன் ஸ்தானத்தில் இருந்தார் அனந்தாழ்வான். திருவேங்கடவன் அனந்தாழ்வானிடம் பெண் கேட்ட போது அவரும் ஸம்மதித்து அருளியதால் திருவேங்கடவனுக்கு மாமனார் மட்டுமின்றி, திருமகளுக்குத் தந்தையானார். அதுமுதற்கொண்டு அலர்மேல்மங்கையின் தந்தை என்றும், திருவேங்கடவனுக்கு மாமனார் என்றும் எங்கும் அனைவராலும் அழைக்கப் படலானார். இதுபற்றியே "அப்பனார் வாழியே" எனப்பட்டது.

(அனந்தாழ்வான் திருவடிகள் அனவரதம் வாழியே) அனந்தாழ்வான் விஷயமாக திருவேங்கடமுடையான் அருளிய தனியனில் நற்பண்புகள் அனைத்துக்கும் இடமானவர் என்றும், அறியாமையாகிய இருளை அறவே அகற்றுபவர் என்றும், சீடர்களுக்கு உயர்ந்த தஞ்சமானவர் என்றும் இருக்கும் அனந்தாழ்வானை வணங்குகிறேன் என்றும், ஸ்ரீமத்ராமாநுஜாசார்யருடைய திருவடித் தாமரைகளுக்கு இணையானவராதலால் சேவிக்கிறேன் என்றும் அருளியது காண்க.

ஸ்ரீவேங்கடாசல இதிஹாஸமாலாவில் ஆறாவது ஸ்தபகத்தின் இறுதியில் அனந்தாழ்வான் விஷயமாக சதுஸ்லோகீயில் அருளியபடியே திருவேங்கடவன், அருளாளப்பெருமாள் எமபெருமானார், ராமாநுஜர் ஆகியோரிடம் பேரன்பு பூண்டவரானவர் அனந்தாழ்வான். அவர் திருவடிகளைத் தஞ்சமடைய வேண்டும் என்றது காண்க.

மேலும், அனந்தாழ்வானின் திருப்பேரரான நாராயணாசார்யர் அருளிய ஸ்ரீஅனந்தார்ய அஷ்டச்லோகீயில் உயர்ந்த ஆதிசேஷனாகிற அனந்தாழ்வான் செய்த கைங்கர்யங்களைச் சுட்டிக்காட்டி, அத்தகைய ஆசார்யரை வணங்குகிறேன் என்கிறார். மற்றும் பிற்காலத்தில் குன்னத்தூர் அநந்தார்யர் குமாரரான வரதாசார்யர் அருளிய அநந்தார்ய மங்கள தசச்லோகீயிலும் அவர்தம் கைங்கர்யங்களை அனுபவித்து அவர் திருவடிகளைக்கொண்டாடுகிறார். இத்தகைய ஆசார்யரான திருமலை அனந்தாழ்வான் திருவடிகளுக்கு அநவரதம் வாழ்த்துக் கூறி பல்லாண்டு பாடுவோமாக.

- ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

அதர்மத்தினால் அழிந்த ஜயத்ரதன்

திரு. எஸ். ஸ்ரீதுரை,
காஞ்சீபுரம்,
9486139685

யத்ர யோகேச்வர க்ருஷ்ணோ யத்ர பார்த்தோ தநுர்தர:
தத்ர ஸ்ரீர்விஜயோ பூதிர் த்ருவா நீதிர் மதிர் மம

யோகங்களுக்கெல்லாம் தலைவனாகிய ஸ்ரீகிருஷ்ணரும், காண்டீபம் ஏந்திய அர்ஜுனனும் எங்கே இருக்கிறார்களோ அவ்விடத்தில் செல்வம், வெற்றி, அசாதாரண சக்தி, நல்லொழுக்கம் போன்றவையும் குடியிருக்கும் என்பது மேற்கண்ட சுலோகத்தின் எளிய பொருளாகும்.

ஸ்ரீகிருஷ்ண பகவானின் அன்பும் ஆதரவும் கிடைத்ததனால் பாண்டவர்கள் பெற்ற நன்மைகள் எண்ணிலடங்காதவையாகும். அவற்றில் ஒன்றே சிந்துராஜன் ஜயத்ரதனின் சம்ஹாரமாகும்.

எம்பெருமான் ஸ்ரீகிருஷ்ணரின் துணையும், வழிகாட்டுதலும் இருந்த காரணத்தினால்தான் ஜயத்ரதனின் சம்ஹாரம் சாத்தியமாயிற்று என்றால் அது மிகையாகாது.

சிந்துதேசத்தின் அரசனாகிய விருத்தக்ஷத்திரன் மிகுந்த தவம் செய்து பெற்ற மகனே ஜயத்ரதன்.

ஜயத்ரதன் பிறந்த சமயத்தில் வானில் ஒலித்த ஓர் அசரீரி, சிந்துராஜனே! உன்னுடைய மகன் பெரும் வீரனாக விளங்குவான். அதே சமயம், இவ்வுலகிலேயே மிகச் சிறந்த வீரன் ஒருவனால் தலைவெட்டப்பட்டு இவன் உயிர் இழக்க நேரிடும் என்று கூறியது. அசரீரியின் வாக்கைக் கேட்ட விருத்த க்ஷத்திரன், என் மகனின் தலை பூமியில் விழுவ தற்குக் காரணமானவன் எவனாயினும் அவன் தலை சுக்கு நூறாக வெடித்துச் சிதறட்டும் எனச் சாபம் கொடுத்தான்.


பிறந்த எவர் ஒருவரும் ஒரு நாள் மரணத்தைத் தழுவுதல் இயற்கைதான். ஆயினும், விருத்த க்ஷத்திரன் புத்திரபாசத்தினால் தூண்டப்பட்டு இப்படி ஒரு சாபத்தைக் கொடுத்தான். தனது சாபத்திற்கு பயந்து தன்னுடைய மகன் ஜயத்ரதனைக் கொல்வதற்கு யாரும் துணிய மாட்டார்கள் என்ற அசட்டு நம்பிக்கையே இதற்கு காரணமாகும்.

வருடங்கள் கடந்தன. வயோதிகப் பருவத்தை அடைந்த விருத்தக்ஷத்திரன் தன்னுடைய மகன் ஜயத்ரதனிடம் ராஜ்ஜியத்தை ஒப்படைத்துவிட்டு, பின்னாளில் மகாபாரத யுத்தம் நடைபெறவிருந்த குருக்ஷேத்திரத்தின் அருகிலுள்ள சியமந்தபஞ்சகம் என்ற இடத்தில் ஒரு பர்ணசாலையை அமைத்துக் கொண்டு அதில் தவமியற்றி வந்தான்.

மகாபாரத யுத்தத்தில் கௌரவர்களுக்கு ஆதரவாகத் தன்னுடைய படைகளுடன் வந்தான் ஜயத்ரதன். அந்த யுத்தத்தில் பீஷ்மபிதாமகர் வீழ்த்தப்பட்ட பின்னர் துரோணாச்சாரியார் கௌரவப் படைகளுக்குத் தலைமை வகித்தார்.

பன்னிரண்டாம் நாள் போரில் எப்படியாவது பஞ்சபாண்டவர்களில் மூத்தவராகிய தரும புத்திரரைப் பிடித்துவிட்டால் பாண்டவ சேனைகள் சரணடைந்துவிடும் என்ற குறுகிய சிந்தனையுடன் கௌரவர்கள் தீட்டிய திட்டம் நிறைவேறாததால் அன்றைய போரின் முடிவில் தனது அதிருப்தியை துரியோதனன் வெளிப்படுத்தினான். அவனைச் சமாதானப்படுத்திய துரோணர் மறுநாள் ஆவன செய்வதாகக் கூறினார்.





பதின்மூன்றாம் நாள் போரின் தொடக்கத்தில் எதிரிகளால் எளிதில் பிளக்க முடியாத பத்ம வியூகத்தில் கௌரவப் படைகளை துரோணர் நிலை நிறுத்தினார். கௌரவர்களின் திட்டப்படி சம்சப்தர்கள் என்ற மன்னர்கள் சிலர் அர்ஜுனனை எதிர்ப்பது போல் போக்குக்காட்டி வெகுதூரம் செல்ல, அர்ஜுனனும் அவர்களைத் தொடர்ந்து போர்க் களத்தின் தென்புறத்தில் வெகுதூரம் சென்று விட்டான். (வில்லிபாரதத்தில் துரோணாச்சாரியார் சக்கர வியூகத்தை அமைத்ததாகக் கூறப்படுகிறது)

அர்ஜுனனும் அருகில் இல்லாத நிலையில், பத்ம வியூகத்தினைத் தகர்த்துக் கொண்டு முன்னேறக் கூடிய மற்றொரு வீரனாகிய அபிமன்யுவை யுதிஷ்டிரர், பீமன் ஆகியோர் முன்னே அனுப்பினர்.

என்னால் பத்மவியூகத்தைப் பிளந்து கொண்டு செல்ல முடியும். ஆனால், அந்த வியூகம் மூடிக் கொண்டால் அதனை மீண்டும் பிளந்து கொண்டு வெளியே வர இயலாது என்று அபிமன்யு கூறினான். கவலைப்படாதே அபிமன்யு. உன்னால் பிளக்கப் பட்ட பத்மவியூகத்தினுள் உன்னைப் பின் தொடர்ந்து வரும் நாங்கள் அனைவரும் நுழைந்து விடுவோம் என்று யுதிஷ்டிரர் உள்ளிட்டோர் நம்பிக்கை அளிக்கவும், பெரியோர்களை வணங்கி ஆசி பெற்றுக்கொண்டு அபிமன்யு போர்க்களத்தில் ஒரு சிங்கத்தைப் போல நுழைந்தான்.

ஆனால், பத்மவியூகத்தைப் பிளந்துகொண்டு அவன் உள்ளே சென்றவுடன், சிந்து தேசத்து அரசன் ஜயத்ரதன் தனது படைகளுடன் வந்த பாண்டவர் தரப்பில் வேறு யாரும் உட்புகாதவண்ணம் தடுத்துவிட்டான். பத்மவியூகத்தினுள் தனியாகச் சென்ற அபிமன்யு மிகவும் உக்கிரமாகப் போர் புரிந்தான். அச்சமயம் துரோணர், அசுவத்தாமன், கர்ணன், கிருபாச்சாரியார், கிருதவர்மா, பிருஹத்பலன் ஆகிய ஆறு போர்வீரர்கள் சூழ்ந்து கொண்டு அபிமன்யுவைத் தாக்கினர்.

உக்கிரமாக நடைபெற்ற அந்தப் போரில் தனது ஆயுதங்களை எல்லாம் இழந்த அபிமன்யு தன்னுடைய தேரின் சக்கரத்தைக் கையிலேந்தி மிகவும் அதிசயிக்கத்தக்க வகையில் மீண்டும் போர் புரிந்து மிகவும் களைப்புற்றிருந்தான். அச்சமயத்தில் துச்சாதனனின் மகனாகிய துர்மாசனன் என்பவன் அபிமன்யுவின் தலையில் கதாயுதத்தால் அடிக்கவும் அவன் வீரசுவர்க்கம் எய்தினான். அபிமன்யுவின் இறுதிக் கணங்களை மிகவும் உருக்கமாக வர்ணிக்கும் வில்லிபாரதப் பாடலை இங்கே காணலாம்

மாயனாம் திருமாமன் தனஞ்சயனாம் திருத்தந்தை
வானோர்க்(கு) எல்லாம்
நாயனாம் பிதாமகன் மற்(று) ஒரு கோடி நராதிபராம்
நண்பாய் வந்தோர்
சேயனாம் அபிமனுவாம் செயத்திரதன் கைப்படுவான்
செய்கை வெவ்வே(று)
ஆயநாள் அவனிதலத்(து) அவ்விதியை
வெல்லும்வகை யார்வல் லாரே

இயல்பிலேயே மாவீரனாகிய அபிமன்யுவின் மாமன் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா, வில்லுக்கு விஜயன் என்று பேர்படைத்த அர்ஜுனன் அவனுடைய தந்தை. அவ்வர்ஜுனனும் தேவேந்திரனின் அருளால் பிறந்தவன். எனவே வானோர்களின் அரசனாகிய தேவேந்திரன் அபிமன்யுவின் பாட்டனாராகிறான். பல்வேறு தேசங்களின் மன்னர்கள் எல்லாம் பாண்டவர் தரப்புக்காகப் போரிட வந்திருக்கிறார்கள். இவ்வாறு இருக்கையில், மேற்கண்ட அனைவருடைய அபிமானத்தையும் ஆதரவையும் பெற்றிருந்த அபிமன்யு ஜெயத்திரதனால் கொல்லப்பட வேண்டும் என்று விதி அமைந்து விட்டதே.

இவ்வுலகில் தலைவிதியை வெல்லக் கூடியவர் யாரேனும் உண்டோ? மேற்கண்ட பாடலில் அபிமன்யு ஜெயத்திரதனால் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது. பத்ம வியூகத்தைப் பிளந்து கொண்டு உள்ளே நுழைந்த அபிமன்யுவுக்குத் துணையாகப் பஞ்ச பாண்டவர்கள் தரப்பைச் சேர்ந்த எவர் ஒருவரும் நுழையமுடியாத

வண்ணம் தடுத்த ஜெயத்திரதனே அவ்வபிமன் யுவைக் கொன்றதாக வில்லிபாரதம் கூறுகின்றது.

துச்சாதனன் மகனாகிய துர்மாசனன்தான் அபிமன்யுவைக் கொன்றவன் என்றே வைத்துக் கொண்டாலும் சரி. இல்லை அந்த ஜெயத்திரதனே அவனைக் கொன்றதாக எடுத்துக்கொண்டாலும் சரி... போர் நெறிகளுக்கு உட்படாத அதர்மமான வழியில் இளம் வீரனாகிய அபிமன்யு வீழ்த்தப் படுவதற்கு சிந்துதேசத்து அரசன் ஜயத்ரதன் முக்கியக் காரணகர்த்தாவாக மாறிவிட்டான்.

அன்றைய தினத்துப் போரின் முடிவில் பாசறைக்குத் திரும்பிய அர்ஜுனன் தன்னுடைய மகன் அபிமன்யுவின் வீரமரணத்தைப் பற்றிக் கேள்வியுற்று, அம்மரணத்திற்குக் காரணமான ஜயத்ரதனை மறுநாள் மாலை சூரிய அஸ்தமனத் திற்கு முன்பு கொன்று பழி தீர்ப்பேன்; அவ்வாறு ஜயத்ரதனைக் கொல்ல முடியவில்லை என்றால் நான் பிராணத்தியாகம் செய்வேன் என்று சபதம் செய்தான்.

பதினான்காம் நாள் முழுவதும் ஜயத்ரதன் அர்ஜுனன் முன்பு தோன்றாமல் பார்த்துக் கொண் டால் தனது சபதப்படி அர்ஜுனன் பிராணத் தியாகம் செய்துவிடுவான். அதன் மூலம் பாண்டவர்களின் பலம் குறைந்து தங்கள் தரப்பு எளிதாகப் போரில் வென்றுவிடும் என்று கணக்கிட்ட துரியோதனாதி யரின் எதிர்பார்ப்புகள் தவிடுபொடி ஆகும்படி ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா தம்முடைய சக்கராயுதத் தினால் சூரியனை மறைக்க, ஜயத்திரதனும் பதுங்கு குழியிலிருந்து வெளிப்பட்டான். எம்பெருமான் தம்முடைய சக்கராயுதத்தினைச் சட்டென்று விலக்கிக்கொள்ள மீண்டும் சூரியன் அனைவரு டைய கண்களுக்கும் தெரிந்தது.

பகவானின் கட்டளைப்படி ஓர் அம்பினால் ஜயத்ரதனின் சிரத்தை அறுத்த அர்ஜுனன் அந்தச் சிரமானது தரையில் விழாமல் நேரடியாக அவனுடைய தந்தை விருத்தகூஷத்திரனின் கரங்களில் விழுமாறு செய்தான்.

தன்னுடைய கைகளில் வந்து விழுந்தது தன் மகனின் தலையே என்பதை அறியாத விருத்தகூஷத் திரன் அருவருப்புடன் அந்தச் சிரத் தினைக் கீழே தள்ளினான். உடன் அவனுடைய தலை யும் வெடித்துச் சிதறியது.

அதர்ம நெறியில் செல்பவர்களை எம்பெருமான் எப்படியும் தண்டித்தே தீருவான் என்பதற்கு ஜயத்ர தனின் சரித்திரமே சாட்சியாக விளங்குகின்றது என்றால் அது மிகையாகாது.

ஸ்ப்தகிரி ஏப்ரல் 2026 விடைகள்

1. எம்பெருமனார்.
2. கும்பகோணம்.
3. அருளாளப் பெருமாள், எம்பெருமானார்.
4. அனந்தாழ்வான்.
5. மாண்டூக முனிவர்.
6. ஆதிசங்கரர்.
7. ஸ்வாமி வேதாந்த தேசிகர்.
8. திருவரங்கச் செல்வன்.
9. செஞ்சுலட்சுமித் தாயார்.
10. சகாதேவன்.
11. கார்த்திகை மாதம், பரணி நட்சத்திரம்.
12. திருவரங்கத்து அமுதனார்.
13. கூரத்தாழ்வான்.
14. சூரிய ஒளி.
15. கருடன்.



போட்டி எண். 45

வினாடி வினா

சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றிப் பெற்றவர்கள்

1. செல்வி அநந்யா மதுசூதனன்
   திருவல்லிக்கேணி, சென்னை.
2. செல்வி அ. ஆதித்தியா,
   உக்காடம், கோவை.
3. செல்வி அ. அம்ரிதா,
   வரதம் பாளையம், ஈரோடு.



ஜூன் 2026
ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.



மேஷம்

நினைத்த காரியத்தைச் சாதித்துக் கொள்வீர்கள். தொழிலில் விஸ்தரிப்பு செய்யலாம். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். நண்பர்கள், உறவினர்கள் உதவி செய்வர். குடும்பத்தில் விரைவில் சுபகாரியங்கள் நடக்கும். கர்ப்பிணிப் பெண்கள் பிரயாணத்தைத் தவிர்க்கவும். தாராளப் பணப்புழக்கம் உண்டு. நினைத்ததைச் சாதிக்கும் இனிய மாதம் இது.



ரிஷபம்

தொழிலில் எதிர்பார்த்த தன லாபம் உண்டு. வேலைப் பளு அதிகரிக்கும். நினைத்த இடத்தில் இடமாற்றம் கிடைக்கும். நண்பர்கள், உறவினர்கள் உதவி செய்வர். தாயாரின் ஆரோக்கியத்தில் எச்சரிக்கை தேவை. தீர்த்த யாத்திரை செய்வீர். நல்ல தரிசனம் கிடைக்கப் பெறுவீர். குடும்பத்தில் சுபச் செலவுகள் நடக்கும். புத்திசாலித்தனத்துடன் செயல்பட வேண்டிய மாதம் இது.



மிதுனம்

குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். நினைத்தது சாதிப்பீர்கள். மாணவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கும். வெளிநாட்டு வேலை வாய்ப்பு உண்டு. தாராளப் பணப்புழக்கம் உண்டு. ஆரோக்கியத்தில் இருந்த குறைபாடு நீங்கும். தொழில் போட்டியில் வெற்றி உண்டு. எதிரிகளால் தன லாபம் கிடைக்கும். நல்ல மனிதர்கள் நட்பு கிடைக்கும். புதிய சாதனையைச் செய்யும் நல்ல மாதம்.



கடகம்

மனைவி, குழந்தைகளுக்கு நன்மை உண்டு. குடும்ப உறுப்பினர்களுடன் பேசும்போது விவாதத்தைத் தவிர்க்கவும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தொழிலில் எதிர்பார்த்த நல்ல உயர்வு உண்டு. செலவினங்கள் அதிகமாகும். எதிர்பார்த்த தனலாபம் உண்டு. புது முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். தோஷ பரிகாரங்கள் செய்ய ஏற்ற மாதம் இது.




சிம்மம்

குடும்ப ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. புதிய முயற்சிகளுக்குத் தடை உண்டாகும். மாணவர்கள் நன்கு முயற்சித்தால் மட்டுமே நல்ல மதிப்பெண் பெற முடியும். தொழில் அலைச்சலால் தூக்கம் குறையும். செலவும், திருஷ்டியும் அதிகமாகும். உங்களின் ஒரு காரியம் நடப்பதற்கு முன்பு வெளியில் சொல்ல வேண்டாம். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய மாதம்.




கன்னி

தொழிலில் புதிய முயற்சிகள் செய்யலாம். மனைவியின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. திருஷ்டியால் சுய தேவைகள் தாமதமாகும். தந்தையின் ஆரோக்கியம் பாதிக்கும். செலவிற்கு ஏற்ற வரவு உண்டு. குழந்தைகளால் நல்ல அனுகூலம் உண்டு. படித்தவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு.




துலாம்

தொழிலில் புதிய மாற்றங்கள் நிகழும். தொழில் விஸ்தரிப்பில் நல்ல லாபம் கிடைக்கும். உடல் உஷ்ணம் உண்டாகும். விரைவில் குழந்தை பாக்கியம் உண்டு. வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வும், இட மாற்றமும் உண்டு. தொழிலில் பழைய பாக்கிகள் வசூல் ஆகும். நல்ல ஏற்றம் தரும் மாதம் இது.




விருச்சிகம்

குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். பூர்வீகச் சொத்து பிரச்சனைகள் தீரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தொழிலில் வேலைப்பளு அதிகரிக்கும். தொழில் போட்டியில் வெற்றி கிடைக்கும். மாணவர்கள் கடுமையாக உழைத்து நல்ல மதிப்பெண்கள் பெறுவர். வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. வெற்றி மேல் வெற்றி கிடைக்கும் மாதம் இது.




தனுசு

தொழிலில் அலைச்சல் அதிகமாகும். அடிக்கடி பயணம் செய்ய வேண்டி இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு இடம் மாற்றம் கிடைக்கும். தொழில் போட்டியில் கஷ்டப்பட்டு வெற்றி பெறுவீர். பழைய பாக்கிகள் வசூலாகும். குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. மாணவர்கள் கல்விக்காக வெகு தூரம் செல்ல வேண்டும். அலைச்சலுடன் முன்னேறும் மாதமிது.




மகரம்

இதுவரை இருந்த அனைத்து பிரச்சனைகளுக்கும் நல்ல தீர்வு ஏற்படும். உங்கள் ஆரோக்கியத்திற்குத் தகுந்த மருத்துவம் கிடைக்கும். விரைவில் திருமணம் நடக்கும். உடல் உஷ்ணம் உண்டாகும். மாணவர்கள் சென்ற வருடத்தை விட இவ்வருடம் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தீமைகள் அழிந்து நன்மைகள் பெறும் இனிய மாதம் இது.



கும்பம்

தொழிலில் எதிர்பார்த்த தன லாபம் உண்டு. கடன் வாங்கி வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. குழந்தைகளால் சந்தோஷம் உண்டு. புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வாழ்க்கைத் துணையின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். எதிர்பாராத நன்மைகள் பெறும் இனிய மாதம் இது.



மீனம்

ஆரோக்கிய குறைபாடுகளுக்கு நல்ல மருத்துவம் கிடைக்கும். சுபகாரியங்கள் நடக்கும். வீடு, மனை, புதுவாகனம் வாங்கும் யோகம் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். தொழிலில் புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். பூர்வீகச் சொத்து பிரச்சனைகள் தீரும். நல்ல யோகமான இனிய மாதம் இது

ஸ்ரீ உ. வே. டாக்டர் அத்தங்கி ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, சென்னை

எச்சிலை நச்சியதற்கும் முக்தி!

சென்ற இதழின் தொடர்ச்சி...

பறவையான ஜடாயு மஹாராஜர் முக்தி அடையும் பொருட்டு உபாயங்கள் எதையும் செய்யாதவர்; செய்வதற்கு தகுதியுமற்றவர்; மேலும் ப்ரஹ்மபுத்ரருமாய், அந்தணருமான புலஸ்த்யருடைய வம்சத்தில் பிறந்தவனான இராவணனாலே வெட்டப்பட்டு உயிர்நீத்தவர்; இப்படிப் பல தடைகளிருப்பினும் ஸ்ரீராமனின் தனிப்பட்ட அருளாலேயே அவர் பரமபதமடைந்தார் என்பதை கூரத்தாழ்வான் எண்ணி வியந்து தமது அதிமாநுஷஸ்தவத்தில் (18) அருளிச்செய்தார். அந்த ஸ்ரீராமபிரானை முழுவதுமாகக் கற்றுணர்ந்த நம்மாழ்வார் தம்முடைய இன்னருளால் தெருவில் சுற்றித்திரியும் ஒரு நாயையும் எந்தத் தடையுமின்றி பரமபதம் அடையச்செய்திருப்பது கருத்தில் கொள்ளத்தக்கது. அதிலும் அந்த நாய் ஸ்ரீவைஷ்ணவர்களுடைய எச்சிலை உண்டால் மோக்ஷம் கிடைக்கும் என்று அறிந்து அந்தச் செயலைச் செய்யவில்லை. அது தன் பசிக்காகவே உண்டது.



ஆனாலும் அதனையே கொண்டு ஆழ்வார் அந்த நாயும் முக்தியடையும்படி செய்துள்ளார். ஸ்ரீராமனின் உயிர்போன்ற சீதா பிராட்டியைக் காப்பதற்காகத் தம்முயிரையும் கொடுத்து உதவி புரிந்த ஜடாயு எனும் பறவை அரசனுக்கு ஸ்ரீராமன் தானே முக்தியளித்தார். நம்மாழ்வாரோ, தமக்கு எந்தவொரு உதவியும் புரியாமல் இருப்பினும், தம் கருணையினால் ஒரு நாய்க்கும் தமது தொண்டர்களின் மூலம் முக்தியடையும்படி அருளினார். இது ஆழ்வார்க்கேயமைந்த தன்னேற்றம். (ஆழ்வாருடையவும், அவரடியாருடையவும் உள்ள தொடர்பினால் எம்பெருமான் தானே மோக்ஷமளிக்கிறான்).

இத்தகைய பெருமையினால், நம்மாழ்வார் என்பவர் உண்மையில் ஆழ்வார்தானா அல்லது எம்பெருமான் விஷ்ணுவா எனும் ஐயம் ஏற்படுவதைப் பெரியோர்கள் கீழ்கண்ட பாடலினால் வெளிப்படுத்தினர் –

சேமம் குருகையோ செய்ய திருப்பாற் கடலோ
நாமம் பாராங்குசனோ நாரணனோ - தாமம்
துளவமோ வகுளமோ தோளும் இரண்டோ நான்கும்
உளவோ பெருமான் உனக்கு

ஆழ்வாரையே நோக்கி இவ்வாறு கேட்கப்படுகிறது – உமது இருப்பிடம் திருக்குருகூரா அல்லது திருப்பாற்கடலா; உம்முடைய திருநாமம் பாராங்குசனா அல்லது நாரணனா; தேவரீர் திருக்கழுத்தில் அணிந்து இருப்பது மகிழ்மாலையா அல்லது திருத்துழாய் மாலையா; உம்முடைய திருத்தோள்கள் இரண்டுதானா அல்லது உமக்கு நான்கு திருத்தோள்கள் உள்ளதா?

எம்பெருமான் ஆழ்வாரின்பால் கொண்டுள்ள நிகரற்ற பேரன்பினாலேயே இவ்வரிய செயல் சாத்தியமானது எனும்

கருத்தை சித்தர், *"பெருமான் மகுடஞ் சாய்க்கும் படிக்கு கவி சொல்லும் ஞானத் தமிழ்க்கடலே"* என்று வெளிப்படுத்துகிறார். மிகவும் மேன்மை கொண்டிருக்கும் எம்பெருமான், *"ஸ ஏகாகீ ந ரமேத"* (மஹோபநிஷத்) என்கிறபடியே தனி ஒருவனாய் (தன்னொப்பாரில்லாதவனாய்), அனைத்து இன்பங்களும் நிரைவாகப் பெற்று இருப்பதனால், பொதுவாகத் தம்மைக் குறித்து பலர் பலவிதத்திலும் பெருமைகளைச் சொல்லி துதி செய்யும்போதும், சிறிதும் சலனமற்று எவ்வித உணர்வுகளையும் வெளிப்படுத்தாமல் இருப்பர்.

ஆனால் நம்மாழ்வார் பாசுரங்களை ஒவ்வொன்றாக விண்ணப்பிக்கும்போது எம்பெருமான் அதில் மிகவும் ஈடுபட்டுக் கேட்டு, மட்டற்ற இன்பம் தலையெடுத்து, தாம் சூடி உள்ள மகுடமும் அசையும்படியாகத் தலை அசைத்து அசைத்து, தாமும் பாடியனுபவித்து மகிழ்ந்தார். இதை ஆழ்வாரே பாசுரத்தில் *"தென்னாவென்னும் என்னம்மான்"* (திருவாய் மொழி 10.7.5) என்று அருளிச்செய்கிறார்.

எம்பெருமான் ஆழ்வார் பாசுரத்தின் ஒரு சிறுபகுதியையும் மிகுந்த மதிப்புடன், கவனத்துடன் கேட்டு உகந்து அடங்கி நிற்பர் என்றும், ஆனால் மற்றையோர்கள் துதிக்கும் போது அதற்கடங்காது அதைக்கடந்து நிற்பர் எனும் பொருளை கம்பர் *"வேதத்தின் முன் செல்க போதக்கடல் எங்கள் தென்குருகூர் புனிதன் கவி ஓர் பாதத்தின் முன் செல்லுமே தொல்லை மூலப் பரஞ்சுடரே"* (சடகோபர் அந்தாதி 2) என்று சுவைபடக் கூறினார்.

ஆழ்வாரின் பாசுரங்கள் காதல்/பக்தியை வெளிப்படுத்தும் சாதாரண பாடல்களல்ல; சிறந்த வேதாந்த ஜ்ஞானத்தையே மேலான, இனிமையான தமிழிலே வெளிப்படுத்துமவை என்பதை உணர்த்தும் பொருட்டு "ஞானத் தமிழ்க்கடலே" என்று சித்தர் குறிப்பிடுகிறார். வடமொழி வேதங்கள் நான்கிற்கும் சமமாக தமிழிலே நான்கு வேதங்களாகவே நான்கு திவ்ய ப்ரபந்தங்களை ஆழ்வார் அருளிச் செய்தார். இவை முழுவதும் வேதாந்தத்தின் சாரமானக் கருத்துகளையே எளிய தமிழிலே வெளிப்படுத்துகின்றன.

எம்பெருமானாலேயே மயர்வற மதிநலம் அருளப்பெற்று ஆழ்வார் இந்த திவ்யப்ரபந்தங்களை அருளிச்செய்தார். ஜ்ஞானம் கனிந்த நலம் அதாவது ஞானத்தின் முற்றிய நிலையான உயர்ந்த பக்தியிலே நிலைநின்று ஆழ்வார் பாசுரங்களை அருளிச் செய்தார். ஆகவே ஆழ்வாருக்கும் அவர் அருளிச் செய்த திவ்ய ப்ரபந்தங்களுக்கும் வாசியின்றி பெருமைகள் ஒத்து இருக்கும். "த்ராவிட வேதஸாகரம்" என்று நாத முனிகள் திருவாய்மொழியைத் தமிழ் வேதக் கடலாகக் கொண்டாடினார். கூரத்தாழ்வான் "பராங்குச பயோதி:" என்று நம்மாழ்வாரையே அளவிறந்த பெருமையை உடைய கடலாக வர்ணித்தார். இத்தொடர்பில் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் தமது திருவரங்கக்கலம்பகம் எனும் நூலில் சாதித்த பாசுரம்,

மறைப்பாற்கடலைத் திருநாவின் மந்தரத்தால் கடைந்து
துறைப்பாற் படுத்தித் தமிழாயிரத்தின் சுவையமிர்தம்
கறைப்பாம்பணைப் பள்ளியான் அன்பர் ஈட்டம் களித்து அருந்த
நிறைப்பான் கழலன்றிச் சன்மவிடாய்க்கு நிழல் இல்லையே

வேதமெனும் பாற்கடலைத் தமது உயர்ந்த நாக்கு எனும் மந்தரமலையால் கடைந்து, தமிழ் யாப்பெனும் துறைகளில், மிகவும் இனியதாய் தெவிட்டாத சுவை கொண்ட அமுதம் போன்ற 1000 பாசுரங்கள் கொண்ட திருவாய்மொழி திவ்ய ப்ரபந்தத்தை, நஞ்சுடைய ஆதிசேஷனாகிற படுக்கையில் பள்ளி கொண்டிருக்கும் எம்பெருமானின் அன்புத் தொண்டர்கள் மகிழ்ந்து அனுபவிக்கும் பொருட்டு நிறைவாக அருளினவரான நம்மாழ்வாரின் திருவடிகளைத் தவிர பிறவி நோயால் ஏற்பட்ட தாபத்திற்கு நிழல் வேறொன்றில்லை.

ஆழ்வாரின் திருநாவினால் வெளிவந்த அனைத்து திவ்யப்ரபந்தங்களையுமே அவரின் எச்சில்பட்ட, தூய்மையான, உயர்ந்த சேஷப்ரசாதம் என்று மனிதர்கள் உணர்ந்து, மிகவும் விரும்பி அனுபவித்தால், அதுவே முக்தியெனும் பேரின்ப வெள்ளத்தை ஐயமின்றி உறுதியாக நல்கிவிடும். அதை உணரமுடியாத ப்ராணிகளிடத்தும் ஆழ்வார் தமது இன்னருளால் தம்மோடு ஏதோ ஒரு தொடர்பை ஏற்படுத்தி முக்தியையே அருளுகிறார்.

முற்றும்...

படிமக் கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை, 9443171383.

ஸ்ரீராமர் தன் தந்தையின் ஆணைப்படி வனவாசம் சென்றபோது சீதா தேவியை, இராவணன் கவர்ந்து செல்ல, இராமர் வானர சேனைகள் படைச்சூழப் போர் தொடுத்தார். இராவணன் வதத்தால் ஸ்ரீராமருக்கு பிரம்ம ஹத்தி, வீரஹத்தி, சாயாஹத்தி எனும் மூன்று தோஷங்கள் ஏற்பட்டன. இம்மூன்று தோஷங்களில் இருந்து விடுபட ஸ்ரீராமர் திருராமேச்சுவரம், திருமறைக்காடு, திருப்பட்டீச்சுரம் ஆகிய தலங்களுக்குச் சென்று சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து, தோஷநிவர்த்தி பெற்றார் என்பது இத்தல புராணங்கள் உரைக்கும் வரலாற்றுச் சுவடுகளாகும்.

அனுமன் எடுத்து வந்த காசி இலிங்கங்கள்

ஸ்ரீராமர் பிரம்மஹத்தி தோஷ நிவர்த்தி பெறவும், போரில் உயிர் விட்ட அனைத்து ஆன்மாக்கள் விமோசனம் அடையவும் சமுத்திரக்கரையில் (திருராமேசுவரம்) வைத்து வழிபட முக்தி தலமான காசியில் இருந்து சிவலிங்கம் ஒன்று கொண்டு வர அனுமனிடம் பணித்தாராம்.

அண்ணலின் ஆணைப்படி அனுமன் காசிக்குச் சென்று அங்கிருந்து விஸ்வ இலிங்கத்துடன் புறப்பட்டார். அச் சமயத்தில் அவரின் முன் எழுந்தருளிய நாரதர் அனுமனிடம் இலங்கை போரில் நீயும் பலரை வதம் செய்து உள்ளதால், நீயும் ஒரு இலிங்கத்தை பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்யும்படி அருளிச் சென்றார். அதனைத் தொடர்ந்து நாயகன் வேண்டுகோளின்படி ஒரு இலிங்கமும், தான் பூஜை செய்ய மற்றொரு இலிங்கமும் ஆக இரண்டு இலிங்கத் திருமேனிகளை தனது இருகரங்களில் எடுத்து வந்தார். ஆதலால் சிறிது கால தாமதம் ஆகி விட்டது.

காலத்தில் பூஜை நடைபெறவும், தனது பதியின் பிரம்மஹத்தி தோஷம் நீங்கவும் இறைவன் அருளாணை வண்ணம், சீதா தேவி மணலால் ஆன சிவலிங்க வடிவம் ஒன்றை தனது திருக்கரங்களால் அமைத்துத் தந்தார். அதனை இத்தலத்தில் இராமபிரான் பிரதிஷ்டை செய்து வழிபட்டு பேறு பெற்றார் என்பது ஐதீகம். இம்மூர்த்தி இராமபிரான் வழிபட்டதால் திருராமநாத ஸ்வாமி என்று அழைக்கப்படுகிறார்.

மேலும், அனுமனின் ஆற்றலை யாரும் குறைத்து மதிப்பிடக்கூடாது என்று அனுமன் காசியிலிருந்து கொண்டு வந்த சிவலிங்கங்களில் ஒன்றினை காசிவிஸ்வநாதர் எனும் பெயரிலும், மற்றொன்று ஆஞ்சநேயர் கோயிலிலும் பிரதிஷ்டை செய்து இராமர் வழிபட்டார் என்று இத்தல வரலாறு இயம்புகிறது.

இராமேசுவரம் வரலாற்று தொடர்புடைய சிற்பங்கள் பல ஆலயங்களில் உள்ளது. அதில் சில வற்றை இங்கு காணலாம்.



சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்



விரிஞ்சிபுரத்தில் உள்ள தூண் சிற்பம்
வேலூர் மாவட்டம்

திருஇராமேசுவர தலவரலாற்றுச் சிற்பக் காட்சி - இடம் - இராமேசுவரம்



அனுமனும், காசி இலிங்கங்களும்



தண்ணீரின் முக்கியத்துவம்

''நீர் இன்று அமையாது உலகு'' என வள்ளுவப் பெருந் தகையும், ''மாமழைப் போற்றுதும் மாமழைப் போற்றுதும்'' என இளங்கோவடிகளும், ''வாழ உலகினில் பெய்திடாய்'' என ஆண்டாளும் நீரின் அவசியத்தை உணர்ந்து எழுதி இருக்கிறார்கள். மேலும், அனைத்து உயிரினங் களுக்கும் அடிப்படை தேவை யாக அமைந்து தினசரி வாழ்க்கைக்கு இன்றியமையாத தாகத் திகழ்கின்றது. ஆண்டாள் ''தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து'' என்று பாடியதற்கிணங்க மாதம் மும்மாரி மழை பொழிந்தால், பூமி செழித்து, வளங்கள் பெருகி, மக்கள் அனைவரும் பசிப்பிணி இன்றி, நோய் நொடி இன்றி நலமோடு வாழ்வார்கள். எனவே தண்ணீர் இன்றி ஆரோக்கியம் கூட இல்லை என்றே கூறலாம்.

மனித இரத்தத்தில், குறிப் பாக அதன் திரவப் பகுதியான பிளாஸ்மாவில் சுமார் 90% முதல் 92% வரை தண்ணீர் உள்ளது. இந்த நீர் சத்துக்கள், ஹார் மோன்கள் மற்றும் ஆக்சிஜனை உடல் முழுவதும் கொண்டு செல்லவும், கழிவுகளை வெளி ஏற்றவும், உடல் வெப்ப நிலையைச் சீராக பராமரிக்கவும் உதவுகிறது. ஒட்டுமொத்த இரத்தத்தின் அளவை சீராக வைக்க போதுமான அளவு தண்ணீர் குடிப்பது அவசியம். போதுமான தண்ணீர் குடிக்காதபோது, இரத்தத்தின் அளவு குறைந்து, இரத்த ஓட்டம் தடிமனாகி, இதயம் மற்றும் சிறுநீரக செயல்பாட்டை பாதிக்கிறது. உடலில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் போது, தலைவலி, சோர்வு மற்றும் இரத்த அழுத்தம் மாறுபாடு போன்ற பிரச்சனைகளும் ஏற்படக்கூடும்.

மே மாத நடுப்பகுதி முதல் ஜூலை மாத நடுப் பகுதி வரை (கிரிஷ்ம ருது – கோடைக்காலம்) வறண்ட மற்றும் நீரிழப்பை ஏற்படுத்தும். வெப்பத்தின் காரணமாக வாத தோஷம் அதிகரிக்கும். வெப்பத்தால் பித்தம் அதிகரித்தாலும், முதன்மையாகத் திரளும் தோஷமாக வாதமே கருதப்படுகிறது.

ஜூலை மாதத்தின் நடுப்பகுதி முதல் (வருஷ ருது – பருவமழை) திடீரென ஏற்படும் மழை, குளிர் மற்றும் ஈரப்பதம் காரணமாக வாத தோஷம் அதிகரிக்கிறது (அதன் சமநிலையின்மையின் உச்சத்தை அடைகிறது). அதே சமயம், புளிப்பான, அமிலத்தன்மை கொண்ட சூழல் காரணமாக உடலில் பித்த தோஷம் குவியத் தொடங்குகிறது.

பல பிரதேசங்களில் ஜூன் மாதம் பெரும்பாலும் கோடை வெப்பத்தின் உச்சத்தையோ அல்லது பருவமழையின் தொடக்கத்தையோ குறிப்பதால், பள்ளி செல்லும் வயதுடைய குழந்தைகளிடையே குறிப்பிட்ட நோய்கள் பெருகி வளர ஒரு சூழலை உருவாக்குகிறது. குழந்தைகள் பள்ளிகளில் கூடுவதால், கொசுக்களால் பரவும் நோய்கள், நீரினால் பரவும் தொற்றுகள் மற்றும் சுவாசப் பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். மற்றும் விடுமுறை முடிந்து பள்ளி செல்லும் குழந்தைகள் புதிய உடை, புதிய குடிநீர் பாட்டில் என அனைத்தையும் புதியதாகக் கொண்டு செல்வது தற்காலத்தில் எழுதப்படாத நியமமாகும்.

பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு ஆரோக்கியமான குடிநீர் தருகிறோம் என்ற நிலையில் பெற்றோர்கள் பிளாஸ்டிக் பாட்டில்களில் குடிநீர் கொடுக்கிறார்கள். அந்த தண்ணீர் புறச் சூழ்நிலைகளின் சீதோஷ்ண நிலை காரணமாக பல இரசாயன வினை

ஆயுர்வேத மருத்துவர்
டாக்டர்.கி.ஜ.நிகிலா வெங்கட், கோவை, 89409 91234

மாற்றம் நடைபெறுவதற்கும் வாய்ப்பாக உள்ளது. இளம் வயது முதல் இப்படி இரசாயன வினை மாற்றம் நடைபெற்ற தண்ணீரை காலை முதல் மாலை வரை குடிப்பதோடு அல்லாமல் தற்காலத்தில் வீடுகளிலும் எந்த நேரமும் பிளாஸ்டிக் பாட்டில்களில் தண் ணீரை சேகரித்து குடிக்கும் பழக்கத்தினாலும் குழந்தைகள் முதற்கொண்டு பெரியவர்கள் வரை ஆரோக்கியம் சீர் கெடுகிறது என்பதை உணர்ந்து பிளாஸ்டிக்கை தவிர்த்து நல்ல வளமிக்க குடுவைகளில் தண்ணீரை சேகரித்து குடிப்பதற்கு பழக வேண்டும். குழந்தைகளுக்கும் நல்ல குடுவைகளில் தண்ணீர் குடிக்க பழக்குவதால் வருங்கால சமுதாயம் ஆரோக்கியமாக இருப்பதற்கு அடிக்கோள் நாட்டியதாக அமையும்.

பாட்டில் தண்ணீரில் உள்ள தீய விளைவுகள் என்ன என்பதை அறிவதும் அவசியமாகிறது.

இரசாயனக் கசிவு :

நெகிழிப் புட்டிகள் காலப்போக்கில், ஆண்டிமனி, தாலேட்டுகள் மற்றும் பிஸ்பெனால் ஏ போன்ற நச்சுக்களை நீரில் கசியச் செய்யலாம். குறிப்பாக வெப்பத்திற்கு உள்ளாகும் போது.

நுண்பிளாஸ்டிக்குகள்:

குழாய் நீருடன் ஒப்பிடும் போது, புட்டி நீரில் நானோ மற்றும் நுண்பிளாஸ்டிக்குகளின் அளவு கணிசமாக அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவை மனித உடலுக்குள் நுழையக்கூடும்.

உடல்நலக் கேடுகள் :

இவற்றைத் தொடர்ந்து உட்கொள்வது, குடல் புண்கள் மற்றும் சிறுநீரகக் கற்கள் ஏற்படும் அபாயத்தை அதிகரிக் கிறது. சில ஆய்வுகள் இந்த இரசாயனங்களை ஹார்மோன் சீர்குலைவு, வளர்சிதை மாற்றப் பிரச்சனைகள், புற்றுநோய் அபாயங்களுடன் தொடர்புபடுத்துகின்றன.

சுற்றுச்சூழல் பாதிப்பு:

கனிசமான நெகிழிக் கழிவுகளை உருவாக்கி, சுற்றுச் சூழல் மண்டலங்களுக்குத் தீங்கு விளைவிப்பதுடன், இதை உற்பத்தி செய்வதற்கும், கொண்டு செல்வதற்கும் பெரு மளவு ஆற்றல் தேவைப்படுகிறது. தற்காலத்தில் குளத்து நீர், கிணற்று நீர் போன்றவை காண்பதற்கு அரிது. ஆகவே நம் உபயோகத்தில் உள்ள ஆற்று நீர் மற்றும் மழை நீரின் நன்மைகளை அறிந்து உபயோகித்தல் நலம். ஆயுர் வேதத்தின்படி, ஓடும் நதி நீர் இலேசானதாகவும், புத்துணர்ச்சி அளிப்பதாகவும், தூய்மையானதாகவும் கருதப்படுகிறது. உயர்தரமான, சுத்தமான ஆற்று நீர் உடலை வலுப்படுத்துவதாகவும், உடல் திசுக்களை சக்தி வாய்ந்த இயற்கை சுத்திகரிப்பானாகவும் செயல்படுகிறது.

பாறைகளில் பட்டு வேகமாகப் பாயும் நீர், செரிமானத்திற்கு இலகுவாக இருப்ப தால், கப தோஷத்தால் ஏற்படும் மந்தத் தன்மையைக் குறைக்க உதவுகிறது என்று அஷ்டாங்க ஹிருதய சூத்திர ஸ்தானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய நீர் ஊட்டமளிப்பதாகவும், எளிதில் செரிக்கக் கூடியதாகவும், வலிமை தருவதாகவும் விவரிக்கப்படுகிறது. இருப்பி னும் பொதுவாக அருந்துவதற்கு முன்பு அது சுத்திகரிக்கப்பட வேண்டும்.

உணவோடு தண்ணீர் குடிக்கலாமா?

உணவு சாப்பிட்ட பிறகு தண்ணீர் அதிக மாகக் குடிப்பதால் அஜீரணம் ஏற்படுவதற் கும், கபம் அதிகரிப்பதற்கும், உடல் பருமன் ஏற்படுவதற்கும் காரணமாகிறது. உணவு சாப்பிடுவதற்கு முன்பாக தண்ணீர் குடிப்ப தால் வயிற்றில் உள்ள அக்னி குறைவதற் கும், சரியாக சாப்பிட முடியாமல் உடல் இளைப்பதற்கும் காரணமாகிறது. உணவு சாப்பிடும் போது அவ்வப்போது மிகக் குறைந்த அளவு தண்ணீரை குடிப்பதனால் உணவுகள் நன்கு கலப்பதற்கும் செரிமானத்திற்கும் உதவியாக இருக்கும்.

ஆகவே உணவுக்கு முன்போ பின்போ அதிக தண்ணீர் குடிக்காமல் மிகக் குறைந்த அளவு தேவைக்கேற்ப குடிப்பதும், உணவின் இடையே தண்ணீர் தேவைப்படும் போது மிகவும் குறைந்த அளவு குடிப்பதும் செரிமானத்திற்கும், ஆரோக்கியம் மேம்படு வதற்கும் உதவியாக இருக்கும்.

தண்ணீரின் குணம் அதனைச் சேகரித்து வைத்திருக்கும் பாத்திரங்களைப் பொறுத்து பலன் தரும் என்பது ஆயுர்வேத சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2026, ஜூலை மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்



05–07	திருச்சானூர் ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி அவதார உத்ஸவம்.
16	பூரி ஜெகந்நாதர் ரத யாத்திரை.
17	திருமலையப்ப ஸ்வாமி ஆனிவர ஆஸ்தானம்.
17–19	ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி சாக்ஷாத்கார வைபவம்.
24–26	திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம். 25 சயன ஏகாதசி.
25–28	திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
26	துளசி மாகாத்மியம்.
29	குரு பௌர்ணமி, வியாச பௌர்ணமி.

தங்கப் பாத்திரம்

தங்கப் பாத்திரத்தில் தண்ணீரை சேகரித்து வைப்பதால் தண்ணீரின் சுவை இனிப்பாகவும், மூன்று தோஷங்களையும் சமன் செய்யும் குணமும் பெற்றிருக்கும். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, கருவுறும் தன்மையையும் வீரியத்தையும் அதிகரிக்கும். உடலில் சக்தியை மேம்படுத்தும், நினைவாற்றலையும் மேம் படுத்தக் கூடியது.

வெள்ளிப் பாத்திரம்

வெள்ளிப் பாத்திரத்தில் தண்ணீரைச் சேமித்து வைப்பது ஒரு இயற்கையான சுத்திகரிப்பானாகச் செயல்படுகிறது. அதில் உள்ள மிகச்சிறிய வெள்ளி அயனிகள், பாக்டீ ரியா, வைரஸ்கள் மற்றும் பூஞ்சைகளைக் கொல் வதோடு, நுண்ணுயிர்க் கொல்லியாகவும் செயல் படுகின்றன. இது உடலைக் குளிர்ச்சி அடையச் செய்வதாகவும், பித்த தோஷத்தைச் சமநிலைப் படுத்துவதாகவும், செரிமானத்தை மேம்படுத்து வதாகவும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப் பதாகவும் ஆயுர்வேதம் கூறுகிறது. அதே சமயம், இது தண்ணீரைப் புத்துணர்ச்சியுடனும், லேசான இனிப்புச் சுவையுடனும் வைத்திருக்கிறது.

செம்பு/தாமிரப் பாத்திரம்

செம்பு/தாமிரப் பாத்திரத்தில் தண்ணீரை சேகரித்து வைப்பதால் தண்ணீர் உஷ்ண குணம் உடையதாக மாறுகிறது. மிகச்சிறிதளவு கார்ப்பு மற்றும் இனிப்பான சுவையுடன் தண்ணீர் அமைகிறது. பித்த, வாத தோஷத்தை குறைக்கும் குணம் இந்த தண்ணீருக்கு உண்டு. மலம், வாயுவின் அளவை குறைக்கவல்லது.

பித்தளை பாத்திரம்

பித்தளை பாத்திரத்தில் தண்ணீரை சேகரித்து வைத் தால் தண்ணீரின் சுவை சிறிது கார்ப்பு தன்மையுடன் இருக்கும். பித்தளையில் சேகரிக்கும் தண்ணீர் ஜீரணத் திற்கு கடினமானதாகவும், கப தோஷங்களை அதிக ரிக்கச் செய்வதாயும் அமைகிறது. நீண்ட நாள்கள் பித் தளை பாத்திரத்தில் தண்ணீரை வைத்து குடிப்பதனால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கவும் உதவுகிறது.

இரும்பு பாத்திரம்

இரும்பு பாத்திரத்தில் தண்ணீரை சேகரிப்பதால் தண்ணீரின் குணம் முழுமையாக மாறுபட்டு குடிப்பதற்கு தகுதியற்றதாகிறது. அப்படிப்பட்ட தண்ணீரை குடிப்ப தால் ரத்த பித்தம், அரிப்பு மற்றும் அஜீரணக் கோளாறு கள் ஏற்படும். இரும்பு பாத்திரத்தில் தண்ணீரை சுட வைத்து குடித்தால் அதன் விளைவாக அரிப்பும், அக்னி யில் மந்தத்துவமும் மற்றும் உடல்நலம் வெளியேற்றப் படுவதாயும் அமைகிறது.

மண் குடுவை

தண்ணீரை மண் குடுவையில் சேகரித்து வைப்பதி னால் பல பலன்கள் தரக்கூடியதாகும். மண் குடுவையில் சேகரிக்கும் தண்ணீரில் உள்ள தேவையற்ற மலங்கள் சுத்திகரிக்கப்படுகிறது. உடலில் உள்ள தாதுக்களை நல்ல முறையில் பாதுகாக்கிறது. உடலின் வீரியத்தை மேம்படுத்துகிறது. உடலில் சக்தியை மேம்படுத்தி நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குகிறது.

அத்தி மர குடுவை

தண்ணீரை அத்தி மரத்தினால் உருவாக்கப்பட்ட குடுவையில் சேகரிக்கும் பொழுது அதன் குணம் மிகவும் உன்னதமானதாக அமைகிறது. அந்தத் தண்ணீர் மிகவும்



உடலுக்கு ஏற்றதாக அமைகிறது. பித்தத்தைக் குறைத்து உடலில் ஆசையை அதிகப்படுத்துகிறது. மேலே குறிப் பிடப்பட்ட அனைத்து தகவல்களும் ஆயுர்வேத நூல்க ளில் ஒன்றான சுசேனா அவர்கள் எழுதிய ஆயுர் வேத மகோ ததி என்னும் நூலில் கொடுக்கப்பட்டு உள்ளது.

எவர்சில்வர் பாத்திரம்

தற்கால ஆய்வுகளின்படி எவர் சில்வர்–உயர்தர துருப்பிடிக்காத எஃகு கலவை பாத்திரத்தில் தண்ணீரைச் சேமிப்பது, உயர்தர துருப்பிடிக்காத எஃகைப் போலவே, இரசாயனங்கள் கசியாமல் நீண்ட காலத்திற்கு தண்ணீரைப் புத்துணர்ச்சியுடன் வைத்து இருக்கும் ஒரு சுகாதாரமான, மந்தமான மற்றும் வினைபுரியாத சேமிப்பு முறையாக முதன்மையாகச் செயல்படுகிறது.

தாமிர பாத்திரம்

தாமிர பாத்திரத்தில் தண்ணீர் வைத்துக் குடிப்பது நலம் பயக்கும். ஏனென்றால், தாமிரம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் அயனிகளை (ஒலிகோடைனமிக் விளைவு) வெளியிட்டு சுத்திகரிப் பானாகச் செயல்படும். ஆனால், எவர் சில்வர் நீரின் ஊட்டச்சத்து மதிப்பை மாற்றுவதில்லை. இதனால், இது ஒரு பாதுகாப்பான மற்றும் நடுநிலையான சேமிப்புத் தேர்வாக அமைகிறது. ஆகவே, தண்ணீர் நமக்கு எத்தகைய நன்மைகளை அளிக்கிறது, நாம் எப்படிப்பட்ட தண்ணீர் உட்கொள்ள வேண்டும், எப்படிப்பட்ட தண்ணீர் தவிர்க்க வேண்டும் என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிந்து இருப்போம். ரிக் வேதம் *"ஆப: ஸர்வஸ்ய ஃபேஸஜி"* தண்ணீர் அனைத்திற்கும் மருந்தாக அமைகிறது என்கிறது. எனவே ஆரோக்கியமான தண்ணீரை அருந்தி, ஆரோக்கியமான வாழ்வை வாழ்ந்திடுவோம்.

ஆரோக்கிய பாதையில் பயணிப்போம்...



எங்கும் நிறைந்த இறைவன்

எட்டுத் திசையும் பதினாறு கோணமும் எங்கும் ஒன்றாய் முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை, மூடரெல்லாம் கட்டிச் சுருட்டித் தம் கக்கத்தில் வைப்பார் கருத்தில் வையார் பட்டப் பகலை இரவென்று கூறிடும் பாதகரே

– பட்டினத்தார்



பொருள் : எட்டுத் திசையிலும், பதினாறு கோணத்திலும் அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் நிறைந்து தோன்றும் சோதியை மெத்தப் படித்து அறிவீனர்கள் அனைவரும் அந்தச் சோதிக் கடவுளை கட்டிச் சுருட்டித் தம் கக்கத்தில் வைத்தது போலப் பேசுவார்கள். ஆனால், மனத்தில் உறுதியாக வைக்க மாட்டார்கள்.

வாழ்வியலுக்கான கருத்து : இறைவன் எள்ளுக்குள் எண்ணெய் போல எங்கும் நிறைந்திருக்கிறான். இறைத் தத்துவங்களைக் கூறும் நூல்களைப் படித்து விட்டு, மெத்தப்படித்த மேதாவிகள் எல்லாரும் இப்புத்தகங்களில் தான் வாழ்கிறார் என்று சொல்வது அறியாமையாகும். இறைவனை உள்ளம் ஒன்றி வழிபட வேண்டுமே தவிர, எங்கும் உள்ள இறைவனை ஓரிடத்தில் இருக்கின்றார் என்பது மூடத்தனமேயாகும்.

-தொகுப்பு : முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை

ஒருநாட்டின் மன்னர் இரவில் மாறுவேடத்தில் நகர்வலம் வந்தார். காவலர்களும் கூடவே சென்றனர். திடீரென்று சூறைக் காற்றுடன் பெரும் மழை பெய்தது. வீதிகளில் வெளிச்சத்துக்காக ஏற்றி வைத்திருந்த விளக்குகள் அணைந்துவிட்டன. இருட்டில் காவலர்களிடமிருந்து பிரிந்து மன்னர் வழிதவறி எங்கோ போய் விட்டார். தூரத்தில் வெளிச்சம் ஒரு புள்ளியாகத் தெரிய, அதை நோக்கி நடந்தார் மன்னர். அங்கே ஒரு குடிசைக்குள் கிழிந்த ஆடை அணிந்த ஒரு மனிதன் இருந்தான். மாறுவேடத்தில் இருந்தாலும், மிடுக்கான தோரணையுடன் மன்னர் குடிசைக்குள் நுழைந்தார்.

அவரைப் பார்த்தும், அந்த மனிதன் எந்தச் சலனமும் இல்லா மல் அமர்ந்திருந்தான். அவன் நடவடிக்கை மன்னருக்குக் கோபம் வந்தது. 'உன் வீட்டுக்கு வந்திருக்கிறேன். நீ மரியாதையே இல்லாமல், ஒரு வணக்கம் கூடச் சொல்லாமல் உட்கார்ந்து இருக்கிறாயே?' என்றார். அவனோ, 'மழையிலிருந்து தப்பிக்க நீதான் என் வீட்டுக்குள் அடைக்கலம் புகுந்திருக்கிறாய். உனக்கு ஏன் நான் வணக்கம் சொல்ல வேண்டும்?' என்றான்.

மன்னரால் இதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவர் எப்போதும் நகர்வலம் செல்லும்போது இடுப்பில் ஒரு பொற்காசு மூட்டையை வைத்திருப்பார். அதை அவனிடம் பிரித்துக் காட்டி, 'பார்த்தாயா? நான் எவ்வளவு பெரிய ஆள் தெரியுமா? இப்போது எனக்கு வணக்கம் சொல்வாயா?' என்றார். அவன் அலட்சியமாக, 'இப்படி ஒரு ஏழை பக்கத்தில் இருந்தும், ஒரு மூட்டை பொற்காசை நீயே வைத்திருக்கிறாயே, உனக்கு எப்படி வணக்கம் சொல்வது?' என்றான். மன்னர் கோபமாக அதிலிருந்து ஒரு பொற்காசை எடுத்து அவனிடம் வீசி. 'இப்போது வணக்கம் சொல்வாயா?' என்றார். அவன் அந்தக் காசை எடுக்கவில்லை. ஒரு மூட்டை பொற்காசைக் கையில் வைத்திருக்கிறாய். அற்ப மாக ஒற்றைக் காசை எடுத்து வீசு கிறாயே, உனக்கா வணக்கம் சொல் வேன்?' என்றான்.

மன்னர் இன்னும் உக்கிரமா னார். பாதி மூட்டையை அவனருகே பிரித்துக் கொட்டிவிட்டு, 'சரி பாதியை உனக்குக் கொடுத்து விட் டேன். இப்போதாவது வணக்கம் சொல்வாயா?' என்றார். அவன் முகத்தில் இப்போது மெல்லிய புன்னகை. 'உன்னிடம் இருக்கும் அளவுக்கு என்னிடமும் இப்போது பொற்காசுகள் உள்ளன. இருவரும் சமமாகி விட்டோம். எனக்குச் சரிசம மாக இருக்கும் உன்னை எதற்கு நான் வணங்க வேண்டும்?' என்று கேட்டான்.

மன்னருக்கு கோபம் கண்ணை மறைத்தது. மிச்சமிருந்த மூட்டை யும் அவனிடம் வீசினார். 'என்னிடம் இருந்த எல்லாப் பொற்காசுகளை யும் கொடுத்துவிட்டேன். இப்போ தாவது எனக்கு வணக்கம் சொல்' என்றார். அவன் சிரித்துக் கொண்டே, 'இப்போது என்னிடம் ஒரு மூட்டை தங்கம் இருக்கிறது. உன்னிடம் ஒன்றுமே இல்லை. நியா யமாகப் பார்த்தால் நீதான் எனக்கு வணக்கம் கூற வேண்டும்' என்றான். மன்னர் திகைத்துப் போனார்.

நிரந்தரமான மரியாதை என்பது பணத்தைக் கொடுத்து வாங்கும் பொருள் இல்லை. எத்தனைதான் அள்ளிக் கொடுத்தா லும் பலர் திருப்தி அடைவதில்லை. உண்மையான அன்பையும் மரியாதையையும் பிறருக்குக் கொடுங்கள். அதுவே பலமடங்காக திரும்பக் கிடைக்கும்.




– திரு.இரா. அருண்குமார், புதுச்சேரி, 99448 02769



சிறுவர் உலகம்

எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்



சித்திரத்தைப் பாருங்கள் !



வண்ணம் தீட்டுங்கள் !!

கோவிந்தனை சரணடைந்தால்
கோடிபுண்ணியம்



இந்தச் சிறுமிக்கு படிப்பில் வந்த சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள அவளுடைய ஆசிரியரை அடைய பாதையைக் காட்டுங்கள்!



		0	2	2	9	6
→	↑	4	6	3	4	
19	28	20	38	8	10	27
10	11	17	28	13	12	9
12	13	14	12	15	14	16
26	34	30	28	22	20	18
11	15	11	26	24	22	10
15	32	30	28	15		
15	14	32	34	→		

இரண்டு இரண்டாக கூட்டிக்கொண்டு போய் அடுத்துள்ளதை இணைத்து பாருங்கள்!




சித்திரத்தின் ஆதாரமாக யார் என்று பெயர் கூறுங்கள்!





சிறார்களே, மேலே உள்ள சித்திரங்களைப் பாருங்கள்! இவற்றைப் பார்த்தால் எந்த திவ்யதேசம் உங்களுக்கு நினைவிற்கு வருகிறது? உங்கள் விடையைக் கீழேகொடுத்திருக்கும் விடையோடு ஒப்பிட்டு பாருங்கள்!



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

ஸப்தகிரி போட்டி எண்-47

ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!

1. சுவாதி நட்சத்திரத்தில் விஷ்ணுமூர்த்தியின் அவதாரத் திருநாமம்.....
2. நைமிசாரண்ய திவ்ய தேசத்தை மங்களாசாசனம் செய்த ஆழ்வார் .....
3. யோக ரகசியம் எனும் பிரபந்தத்தை அருளியவர் .....
4. திராவிட வேத சாகரம் என நாதமுனிகளால் கொண்டாடப்பட்ட பிரபந்தம் .....
5. இராமானுஜருக்கு எதிராஜர் எனும் திருநாமம் இட்டவர்.....
6. திருக்கோட்டியூர் நம்பி அவதரித்த மாதம், நட்சத்திரம் .....
7. நம்மாழ்வார் மீது சடகோபர் அந்தாதி அருளியவர் .....
8. கீழோரைக் கண்டு அஞ்சுதல் கூடாது எனக் கூறியவர்.....
9. "இணையடியோன்" என்றழைக்கப்படும் ஆசாரியர் .....
10. சிந்து தேசத்து அரசனான விருத்தக்ஷேத்திரனின் மகன் .....
11. பெரியாழ்வாரின் திருவரசு அமைந்துள்ள திவ்யதேசம் .....
12. அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரின் சகோதரர் திருநாமம்.....
13. நாதமுனிகளால் தொகுக்கப்பட்ட பாசுரங்களின் தொகுப்பு .....
14. வேதவியாசர் 18 புராணங்களைத் தொகுத்ததாகக் கருதப்படும் திவ்யதேசம் .....
15. எம்பெருமானுக்கு கண்ணேறு படாமலிருக்க பல்லாண்டு பாடியவர் .....




- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்தியக் குடி மக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்தப் பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலை பேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.06.2026. விடையை எழுதுங்கள்!

திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!

போட்டிக்கான நிபந்தனைகள்

ஸப்தகிரி சந்தா எண்
போட்டியாளர் பெயர்
ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை
போட்டியாளரின் வயது
போட்டியாளர் முழு முகவரி
தொலைபேசி எண்



சக்கரத்தைச் சுற்றுங்கள்!



அதே வண்ணக் கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!

விடைகள்

1) கலைமகள், 2) முருகன், 3) கிருஷ்ணபரமாத்மா, 4) ராகவேந்திரர், 5) சாந்தோஷ், 6) புளோரிடா, 7) ஒலிம்பிக், 8) பாலபிஷேக ஜெயந்தி.



'திதி'களை தெரிந்துக் கொள்வோமா!

அமாவாசை முதல் பௌர்ணமி வரை (15 நாட்கள்) வளர்பிறை காலத்தை சுக்ல பக்ஷம் என்றும், பௌர்ணமிக்கு முதல் அமாவாசை வரை (15 நாட்கள்) தேய்பிறை காலத்தை கிருஷ்ண பக்ஷம் என்றும் அழைப்பர். திதிகளின் வரிசை பின்வருமாறு:

பிரதமை, முதல் நாள்.	சப்தமி, 7ஆம் நாள்.
துவிதியை, 2ஆம் நாள்.	அஷ்டமி, 8ஆம் நாள் (நிலாவின் பாதி பகுதி).
திருதியை, 3ஆம் நாள்.	நவமி, 9ஆம் நாள்.
சதுர்த்தி, 4ஆம் நாள்.	தசமி, 10ஆம் நாள்.
பஞ்சமி, 5ஆம் நாள்.	ஏகாதசி, 11ஆம் நாள்.
சஷ்டி, 6ஆம் நாள்.	துவாதசி, 12ஆம் நாள்.
	திரயோதசி, 13ஆம் நாள்.
	சதுர்தசி, 14வது நாள்.
	பௌர்ணமி (முழு நிலவு),
	அமாவாசை (முழு இருட்டு)
	பதினைந்தாவது நாள்



உலகைப் புரிந்திய புரிதலையும், பகுத்தறியும் திறனையும் அளிக்கின்றேன். திருடர்களால் திருடவும், தெருப்பினால் எரிக்கவும், நீரினால் அழுக்கவும் முடியாத சிறந்த செல்வமாகின். சமுகத்தில் உயர்ந்த மதிப்புடன் வாழ வைப்பேன். ஒருவரின் சிறந்த ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் அடுத்தத் தலைமுறைக்கும் கொண்டு செல்கிறேன். ஒரு காட்டின் முன்னேற்றத்திற்கும், தொழில்துறை வளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்குபவனும் கானே ஆகிறேன். என்றுமே அழியாத செல்வமாகத் திகழ்கின்றேன்...

மழலைச் செல்வங்களே! மேலே குறிப்பிட்டது மற்றும் மேலே உள்ள சித்திரத்தின் அடிப்படையில் நான் யார் என்று கண்டுபிடியுங்கள் பார்ப்போம்...

முழுஷ : ?முழு




சித்திரக் கதை

பரமனுக்குப் பல்லாண்டு பாடியவர்

கதை : திரு. வி.ஓ. சுரேஷ், சத்திரவாடா.
சித்திரம் : திரு.துவாரகநாத், திருப்பதி.

ஒரு காலத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் வாழ்ந்து வந்த விஷ்ணு சித்தர் நந்தவனம் அமைத்து மாலைகட்டி அங்கு எழுந்தருள் புரியும் வடபத்ரசாயிக்கு புஷ்ப கைங்கரியம் செய்து வந்தார்.







ஒரு நாள் இரவு பாண்டிய மன்னனான வல்லப தேவன் நகர்வலம் வரும்போது ஒரு திண்ணையில் உறங்கிக் கொண்டிருந்த ஒரு முதியவரை எழுப்பி...



நான் ஒரு அந்தணன். கங்கையில் நீராடி விட்டு வருகிறேன்

தங்களுக்குத் தெரிந்த நீதியை எனக்குக் கூறும்





மன்னா! மழைக்காலத்தின் தேவையை 8 மாதங்களிலும், இரவின் தேவையைப் பகலிலும், முதுமையின் தேவையை இளமையிலும், மறுமையின் தேவையை இம்மையிலும் தேடல் வேண்டும்

மறுநாள் மன்னன் தன் குல குருவான செல்வ நம்பியிடம் நடந்தவற்றை கூறி...


குருவே! மறுமைக்கான வழிதான் என்ன?

மன்னா! சான்றோர்கள் முன்பாக இக்கேள்வியை வைத்து சரியாகப் பதில் அளிப்பவற்கு பரிசளிப்போம்



மன்னனும் பொற்கிழியை ஒரு தோரணத்தில் கட்டி சான்றோர்களைத் திரட்ட ஆணையிட்டார். அன்று இரவு விஷ்ணு சித்தரின் கனவில் எம்பெருமான் தோன்றி...

மதுரைக்குச் சென்று பொற்கிழியை அறுத்து வாரும்.



மறுநாள் விஷ்ணு சித்தரும் மதுரைக்குச் சென்று அரசவையில்...


மறுமைக்கான வழி "ஸ்ரீமந்நாராயணனே!"

பொற்கிழியும் அறுப்பதற்கு ஏதுவாக வளைந்தது.



உடனே மன்னனும் பட்டார்பிரான் எனும் விருது வழங்கி...

இவரை யானை மீது ஏற்றி நகர்வலம் வாருங்கள்



அப்போது தன் பக்தனைக் காண ஸ்ரீமந்நாராயணனே கருடன் மீது ஏறி பிராட்டியருடன் சங்கு சக்கரதாரியாகக் காட்சியளித்தார்



எம்பெருமானைத் தரிசித்த விஷ்ணு சித்தரும் ஸ்வாமிக்கு கண்ணேறு பட்டு விடுமோ எனக் கருதி வாழ்த்தலானார்

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு...

இனி பெரியாழ்வார் என்றும் போற்றப்படுவீர்



பெரியாழ்வாரும் பரமனை வணங்கி கண்ணனின் திருவிளையாடல்களையும், திருஅருட்குணங்களையும் பிரபந்தமாக அருளிச் செய்தார்

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

ஸ்ரீதகிரி

(சமய மாத இதழ்)

சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

(பெரிய எழுத்துக்களில்) _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம்
☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஒ./ஐ.எம்.ஒ./ஐ.பி.ஒ., இணையதளம்)

ரசிது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: சந்தாதாரர் கையொப்பம்

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

தகவல் மையம்

தி.தி.தே. கால்சென்டர்

உங்களுக்காக

24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடைத் திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :

0877-2233333
2277777

- ஸ்ரீதகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஒ., வரைவோலை, ஐ.பி.ஒ., டி.டி.-யை "பிரதான ஆசிரியர், ஸ்ரீதகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸ்ரீதகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

எங்கள் முகவரி :

பிரதான ஆசிரியர்,
ஸ்ரீதகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri R.V. Vijayakumar, B.A., B.Ed., and Published by Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D. P.G.Dip. in JMC. on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.,P.G.Dip. in JMC.



திருப்பதி
ஸ்ரீ கோவிந்தராஜஸ்வாமி
புஷ்ப யாக மஹோத்ஸவம்

22-06-2026, திங்கட்கிழமை

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-05-2026 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 1st of Every month.



திருச்சானூர்
ஸ்ரீபத்மாவதித் தாயார் தெப்போத்ஸவம்
25-06-2026 முதல் 29-06-2026 வரை